padippakam

# கலைவாணர் 100

## கலையாத நினைவுகள்



தொகுப்பு : சபீதா ஜோசப்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# கலைவாணர்

# 100

## கலையாத நினைவுகள்

சபீதா ஜோசப்

இது ஒரு
நக்கீரன்
வெளியீடு

படிப்பகம்

padippakam

கலைவாணர் 100

□

சபீதா ஜோசப்

□

முதல் பதிப்பு : 2006
இரண்டாம் பதிப்பு : 2007
மூன்றாம் பதிப்பு : 2009
நூலின் அளவு : 14 x 21.5 டெம்மி
பக்கங்கள் : 152
விலை : ரூபாய் **100/-** (ரூபாய் நூறு மட்டும்)

□

வெளியீடு:
நக்கீரன் பப்ளிகேஷன்ஸ்,
105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600014. தொலைபேசி : 43993029

□

அட்டை வடிவமைப்பு ஆர்.சி. மதிராஜ்
அட்டை மற்றும் உள் அச்சாக்கம்: சாருபிரபா பிரிண்டர்ஸ், சென்னை-600014.
கட்டமைப்பு ஆர்.எஸ். பைண்டிங் ஒர்க்ஸ், சென்னை-600005.

**Kalaivanar 100**

□

**Sabitha Joseph**

□

First Edition : 2006
Second Edition : 2007
Third Edition : 2009
Book Size : 14 X 21.5 Demmy
Pages : 152
Price : Rs. **100/-** (One Hundred Rupees Only)

□

Published by:
**Nakkheeran Publications,**
**105, Jani Jahan khan Road, Royapettah,**
**Chennai-600014. Phone : 43993029**

□

Cover designed by : R.C. Mathiraj
Cover and Inner printed by : Saaru Prabha Printers, Chennai-600014.
Binding by : R.S. Binding Works, Chennai-600005.

படிப்பகம்

padippakam



# பதிப்புரை

கலைவாணர் எப்படி இருப்பார்... என்பதற்கு நாடகக் காலத்தில் பின்வரும்படி வர்ணிக்கப்பட்டார்.

'சரியான உயரம், நிமிர்ந்த நேர்கொண்ட பார்வை, பெரிய காதுகள், நீண்ட கரங்கள், அகன்ற நெற்றி, கடுமையில்லாத கவர்ச்சியான முகம், ஒருமுறை பார்த்தால் மீண்டும் பார்க்கத் தோன்றும் முகம்.

இப்படி அவருடன் நெருங்கிப் பழகியவர்களால் வர்ணிக்கப்படுபவர்தான் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன். அவரிடம் புரிந்துகொள்ள முடியாத பிறரைக் கவரும் ஒரு வசீகரம் ஒளிந்து கொண்டிருந்தது.

அந்தக் கவர்ச்சியின் ரகசியம் அவர் எல்லாரது கவலைகளையும் மறக்க வைத்து சிரிக்க வைப்பதே லட்சியமாகக் கொண்டிருந்ததுதான்! அந்தச் சிரிப்பின் நடுவே சிந்திக்க வைத்துவிடுவார்.

அவர், சாதி வேறுபாடுகளை, சமூகக் கொடுமைகளை நையாண்டி செய்தே பளிச்சிட்டுக் காட்டினார். தமிழக மக்கள் அவர் மீது அபரிமிதமான நேசத்துடன், கலைவாணர் என்றே அழைத்தனர்.

படிப்பகம்

padippakam



# உங்களுடன் சில வார்த்தைகள்...

எழுத்தாளராகும் கனவுகளோடு ஐந்து ரூபாயுடன் 1982-ல் சென்னைக்கு வந்தவன் நான். அதன்பின் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்போல பல வேலைகள் பார்த்துவிட்டு பத்திரிகையாளன் ஆனேன்.

கடந்த 1989-ல் தொடங்கியது எனது எழுத்துப்பணி. 'மின்மினி'யில் ஓராண்டு. 'வண்ணத்திரை'யில் நான்காண்டு. 'குமுதம்' (ஒப்பந்த அடிப்படையில்) நான்காண்டு, 'குங்குமம்', 'முத்தாரம்', 'பேசும்படம்', 'குங்குமச்சிமிழ்', 'சினிக்கூத்து', 'கல்கி', 'திரைச் சிற்பி', 'ரஜினி' என பல முன்னணி பத்திரிகைகளில் சுதந்திரமான பத்திரிகையாள னாக எழுத்து பயணம் தொடர்ந்தது. கடந்த பிப்ரவரி 2006 முதல் 'டி-சினிமா'வின் பொறுப்பாசிரியர் பணி.

இத்தனை வருட சினிமா பத்திரிகை அனுபவத்தில் நான் பார்த்த பேசிய, பழகிய கேள்விப்பட்ட விஷயங்கள் புத்தகமாக இறக்கி வைக்க ஒரு வாய்ப்புக்காக காத்திருந்தேன்.

பத்திரிகையுலக ஜேம்ஸ் பாண்டு அண்ணன் நக்கீரன்கோபால் அவர்களை டி.சினிமாவுக்காக சந்தித்தபோது, பக்கத்து இலைக்குப் பாயசமாய் அவரது பதிப்பகத்தில் எழுத வாய்ப்பு கேட்டேன்.

படிப்பகம்

padippakam



“என்னென்ன புத்தகம் எழுதி வெச்சிருக்கீங்க சொல்லுங்க” என்றார். பெரியார் 100, காமராஜர் 100, அண்ணா 100, கலைஞர் 100, எம்.ஜி.ஆர். 100, சிவாஜி 100, ரஜினி 100, கமல் 100 என்று பட்டியலிட்டு இதில் எது சொன்னாலும் எழுதிவிடுகிறேன்” என்றேன்.

‘‘அந்தப் பட்டியல்ல கலைவாணர் 100, கண்ணதாசன் 100 என பத்து புத்தகமாக எழுதி கொடுங்க என்று இன்ப அதிர்ச்சி கொடுத்தார். உடனே அட்வான்ஸாக ஒரு காசோலையும் கொடுத்து தொடர் இன்ப அதிர்ச்சி கொடுத்தார். அவரது மனிதநேயத்தைக் கேள்விபட்டிருந்தேன். இன்று கண்முன் காண்கிறேன்.

இப்படிப்பட்ட நல்ல இதயம் எல்லா நலமும், எல்லா வளமும் பெற்று வாழ வேண்டும் என இறைவனிடம் கோரிக்கை வைத்தேன்.

நல்ல வாய்ப்பளித்த அண்ணன் நக்கீரன் கோபால் அவர்களுக்கு 101, 102 குறள்படி நன்றியை உரிதாக்குகிறேன்.

**-சபீதாஜோசப்**

படிப்பகம்

padippakam

படிப்பகம்

7



# புரட்சியாளர் என்.எஸ். கிருட்டிணன்

நகைச்சுவை அரசு கிருட்டிணன் அவர்கள் தனது தொழிலில் ஒரு மோதாவி என்றாலும், அதை நடத்தும் முறையில் ஒரு பெரிய புரட்சியாளர் என்றே சொல்ல வேண்டும். அதுவும் லெனின் செய்தது போன்ற புரட்சி என்றே சொல்ல வேண்டும்.

அருமைக்கிருட்டிணன் அவர்கள் தனது தொழிலை வெகு தூரத்துக்கு மாற்றிப் புரட்சி செய்து மற்ற மக்களுக்கு வழிகாட்டியாகவும் ஆகிவிட்டார். முக் கலை திருத்தச் சரித்திரத்தில் கிருட்டிணன் பெயர் பொன்னினால் பொறிக்கப்படும்.

நந்தன் கதையும், கிந்தன் கதையும் நடந்திராத பொய்க்கதை என்பதில் பகுத்தறிவாளிகளுக்குச் சிறிதும் சந்தேகம் இருக்காது. ஆனால் நந்தன் கதை நாடகம், சினிமா நடத்துகிறவர்கள் பொய் நடத்துவதோடு மக்களுக்கு முட்டாள்தனமும்,

padippakam



மானமற்ற தனமும், மூடநம்பிக்கையும் ஏற்படும்படியாக நடத்தித் தங்கள் சுயநல வயிறு வளர்க்கிறார்கள்.

நம் கிருட்டிணன் அவர்கள் கிந்தன் கதை நடத்துவதில் கதை பொய்யானாலும் அதை மக்களுக்கு மானமும், அறிவும், முற்போக்குணர்ச்சியும் ஏற்படும்படிச் செய்து அதன் வருவாயில் பெரும் பகுதியைப் பொது நலத்துக்கே உதவுகிறார்.

திரு. கிருட்டிணன் பற்றி நான் நினைக்கும்போதெல்லாம் நான் அவரை ஒரு புரட்சி வீரரென்று கருதுவது ஏன்? அவர் ஒரு நல்ல தேவையானதொரு புரட்சியில் வெற்றி கண்டவர்.

பணக்காரனை வைவதற்கும், பார்ப்பானை வைவதற்கும், அவர்கள் செல்வாக்கை வெறுக்கச் செய்வதற்கும் கஷ்டமான- பிரமாதமான புரட்சி ஒன்றும் வேண்டியதில்லை. ஆனால் புராணம், மோட்சம், நரகம், சாத்திரம், கடவுள்கள் ஆகியவை பற்றிய அபிப்பிராயங்கள் மக்கள் உயிரோடு கலந்தும், வாழ்வோடு கலந்தும், மதத்தோடு கலந்தும் பல பலமான ஸ்தாபனங்களோடு செல்வாக்காய், பத்திரமாய் அநேக காவலாளிகளோடு இருப்பதை வெறுக்கும்படியாகச் சிரிப்பாய் சிரிக்க வைக்கும் மாதிரியில் அதுவும், இதைப் பார்க்கக் கேட்கப் பணம் கொடுத்துவிட்டு வந்து பகலும், இரவும் காத்துக்கிடக்கும் படியாய்ச் செய்து வந்தார். செய்து வருகிறார்; சாகும் வரை செய்துகொண்டே இருக்கப் போகிறார்.

என்.எஸ். கிருட்டிணன் அவர்கள் செத்தாலும் சரி, அவர் பணம், காசெல்லாம் நழுவி அன்னக்காவடிக் கிருட்டிணன் ஆனாலும் சரி, நாடகப் புரட்சி உலகைப் பற்றிச் சரித்திரம் எழுதப்பட்டால் அச்சரித்திரத்தின் அட்டைப்பக்கம் கிருட்டிணன் படம் போடாவிட்டால் அச்சரித்திரமே தீண்டப்படாததாக ஆகிவிடும்."

-பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் (9-9-44 குடியரசு இதழில்)

படிப்பகம்

padippakam



# 2

## சிரிக்கவைக்கும் மகான்!

கலைவாணர் என்.எஸ்.கே.- டி.ஏ.மதுரம் ஜோடியின் திரைப்படக் காட்சிகளை இன்று பார்த்தாலும் கேட்டாலும் புதுமை தெரியும், சிரிப்பு விரியும். அந்தக் கலைவாணர் எப்படிப்பட்டவர், அவர் செய்தது என்ன...? இதோ ஒரு தமிழறிஞர் சாட்சி சொல்கிறார்.

"இப்போதே அவருக்குச் சொர்க்கத்தில் இடம் இருக்கும். பிறரைச் சிரிக்க வைக்கும் புண்ணியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்." -இப்படி அவர் உயிரோடு இருந்தபோது கலைவாணருக்குக் கிரீடம் சூட்டியவர் தமிழறிஞர் வ.ரா. அவர் மேலும் சொல்கிறார்:

"தமிழ் மக்களைச் சிரிக்க வைக்கும் மகான் என்.எஸ்.கிருஷ்ணன் தமிழர்கள் தங்கள் துயரத்தைச் சில நிமிஷங்களேனும் மறக்கும் படியாகச் செய்யும் பெரிய உபகாரியான கிருஷ்ணனை மதிக்காதவர்கள், நாட்டின் பொது நன்மைக்குப் பாதகம் நினைப்பவர்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை."

இந்த அற்புதமான சிரிப்புலக மேதையை அளித்தது நாஞ்சில் நாடு. தேசிய நெடுஞ்சாலை வழியாக நாகர்கோவிலுக்குள் நுழையும் இடத்தில் இருந்த ஒழுகினசேரி என்ற கிராமத்தில் 1908-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் தேதி பிறந்தார்.

ஏழைக் குடும்பம்தான். ஏழ்மையின் காரணமாக நான்காம் வகுப்புவரைதான் படிக்க முடிந்தது.

padippakam



கிருஷ்ணன், நாடகக் கொட்டகையில் சோடாகலர் விற்றார். விற்பனைக்கு நடுவே நாடகங்களைப் பார்த்தார்! தானும் நாடகத்தில் நடித்தால் என்ன என்ற விருப்பம் எழுந்தது. அப்போது அவரது செல்லப்பெயர் கிட்டன். அந்த வயதிலேயே எல்லாருக்கும் பிடித்தவராக இருந்தார்.

படிப்பகம்

padippakam



# 3

# செய்குத் தம்பிப் பாவலரின் தீர்க்க தரிசனம்!

மதுரை ஸ்ரீபால சண்முகானந்தா சபா நாகர்கோவிலில் நாடகம் நடத்த வந்தது. ஒழுகினசேரி சரஸ்வதி ஹாலில் ஆறு நாடகங்கள் நடத்தப்பட்டன.

ஒழுகினசேரி கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் சொந்த ஊர். அதனால் அங்குள்ள சில நண்பர்கள் ஒன்று சேர்ந்து கிருஷ்ணனுக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்க முன்வந்தார்கள். அதனை அந்தப் பகுதியைச் சேர்ந்த அறிஞரின் கையால் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அன்றைக்கு 'கோவலன்' நாடகம் நடைபெற்றது. நெடுஞ்செழியப் பாண்டியன் வேடத்தில் கலைவாணர் நடித்தார்.

அந்த நாடகத்திற்குச் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கோட்டாரைச் சேர்ந்த பெரும் புலவர், சதாவதானம் செங்குத்தம்பிப்பாவலர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் மரியாதைக்குரியவரான பெரும்புகழ் படைத்த முஸ்லீம் பெரியார் செய்குத்தம்பிப்பாவலர் அன்று மேடை ஏறி,

"நம் நாஞ்சில் நாட்டு இளஞ்சிறுவன்

படிப்பகம்

padippakam



என்.எஸ்.கிருஷ்ணன் வருங்காலத்தில் மகாமேதையாக விளங்கப்போகிறான். இவனுடைய புகழால் நம் நாஞ்சில் நாடு மட்டுமல்ல; தமிழ்நாடே பெருமையடையப் போகிறது" எனப் பாவலர் தம் செந்தமிழ்த் திருவாயால் வாழ்த்திப் பரிசளித்தார்.

"அந்தப் பெரியாரின் தீர்க்க தரிசனத்தை எண்ணி, இப்போதும் நான் பெருமையடைகிறேன். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் எத்தனையோ முறை இதைப் பெருமையோடு சொல்லி மகிழ்ந்திருக்கிறார்" என்கிறார் அவ்வை சண்முகம்.

படிப்பகம்

padippakam



# 4

# கலைவாணரின் தேசபக்தி

அறிஞர் வெ.சாமநாத சர்மா, ஸ்காட்லாந்து நவீனம் ஒன்றை அடித்தளமாக வைத்து, தேச பக்தியை வலியுறுத்தும் 'பாணபுரத்து வீரன்' என்னும் நாடகத்தை நூல் வடிவில் தீட்டியிருந்தார். அந்நாடகத்தின் அருமையை உணர்ந்த டி.கே.எஸ். சகோதரர்கள் 'தேசபக்தி' என்னும் தலைப்பில், அதனை 1931-ஆம் ஆண்டில் அரங்கேற்றம் செய்தனர். டி.கே.எஸ்.சகோதரர்கள், கே.ஆர்.ராமசாமி ஆகியோருடன் கலைவாணரும் அந்த நாடகத்தில் நடித்து வந்தார். நாடகம் பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது. விடுதலை இயக்கத்தில் தங்களை அர்ப்ணித்துக் கொள்வதற்கு அந்த நாடகம் தூண்டியது.

நாடகத்தின் இறுதிக் காட்சியில், கதாநாயகனான 'பாணபுரத்துவீரன்' ஊர்க் குடிமக்களை விடுதலைப் போருக்கு ஆயத்தம் செய்வான். அப்போது குடிமக்கள் அனைவரும் தம் கைகளில் கிடைத்த பொருட்களை எல்லாம் ஆயுதங்களாக எடுத்துக்கொண்டு வருவார்கள். கம்பு, கட்டாரி, கோடரி, கடப்பாரை, அரிவாள் போன்ற ஆயுதங்களை ஏந்தியவாறு குடிமக்கள் வேடம் போட்ட நடிகர்கள் மேடைக்கு வருவார்கள்.

கடைசிக் குடிமகனாகக் கலைவாணர். தன் கையிலே கைராட்டினத்தை ஆயுதமாக எடுத்துக்கொண்டு மேடைக்கு வருவார். 'இந்த

படிப்பகம்

padippakam



ராட்டினத்தை வச்சே ஏகாதிபத்திய வெறியர்களை நாட்டை விட்டே ஓட்டிடுறேன்' என்று கூறுவார். 'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்மொன்று செய்து, கைராட்டையினாலேயே வெள்ளையரை ஓட்டிவிடலாம்' என்று முழங்கிய அண்ணலின் கொள்கையை நாடகத்தில் தக்க வகையில் புகுத்திப் பொதுமக்களிடம் சபாஷ் பெற்றார் கலைவாணர்.

கலைவாணரின் தேசபக்தி அந்த நாடகத்தில் பளிச்சிட்டது.

படிப்பகம்



# உயிர்ப்பிச்சை

## 5

என்.எஸ்.கே. கோல்டன் சாரதாம்பாள் கம்பெனியில் சேர்ந்திருந்தபோது, சாவித்திரி நாடகம் நடந்து கொண்டிருந்தது. அன்று எமன் வேஷம் போடுகிற நடிகர் வரவில்லை. அதனால், அந்த வாய்ப்பு கலைவாணருக்குக் கிடைத்தது. பக்கம் பக்கமாக வசனம் பேச வேண்டிய பாத்திரம் அது.

எமதர்மனைப் பார்த்து, 'கணவனுக்கு உயிர்ப்பிச்சைத் தரமாட்டாயா! தரமாட்டாயா!' என்று ராத்திரி பன்னிரண்டு மணிக்கு சாவத்திரி கெஞ்ச ஆரம்பித்தாள் அதிகாலை ஐந்தே முக்கால் மணிக்குத்தான் எமதர்மன் மனமிரங்கி, 'உயிர்ப்பிச்சை தருகிறேன்' என்று சொல்வார்! ஆனால், என்.எஸ்.கே. அவளை அதிகம் கதறி அழவிடாமல் சிறிது நேரத்தில் 'உயிர்ப்பிச்சை தந்தேன்' என்று சொல்லிவிட்டு கிரீன் ரூமுக்குள் வந்துவிட்டார்!

'நாடகத்தையே கெடுத்துவிட்டாயே பாவி'

padippakam



# 7

## நகைச்சுவை வள்ளல்...

ஒரு நலிந்த நடிகர் கிழிந்த சட்டை, வேட்டி அணிந்து வந்திருந்தார். நகைச்சுவை வள்ளல் என்.எஸ்.கே. அவர்களைப் பார்த்து உதவி பெற.

கலைவாணர் வந்தவரை என்ன வேண்டும் என்பது போல் பார்த்தார்.

'கிழிச்சலைத் தவிர நல்ல வேட்டி, சட்டைக் கூட இல்லீங்க. நீங்கதான் வாங்கித் தந்து என்னை ஆதரிக்கணுங்க' என்றார் துக்கத்துடன்.

கலைவாணர் நிமிர்ந்து அவரைக் கவனித்துவிட்டு, அங்கிருந்த ராமதாஸ் என்பவரிடம்:

'ஏம்பா நாளைக்கு நடத்தப்போகிற ஷூட்டிங் சீனிலே ஒரு கிராமத்தான் வேஷம் வருதில்லே, இவருக்கு அந்த வேஷத்தைக் கொடுக்கச் சொல்லு. புரடியூசர் செலவிலே இவருக்கு பாண்டி பஜாரிலே சட்டை, வேட்டி வாங்கிக் குடுக்கச் சொல்லு,

இந்த சீன்ல இவரை கிராமத்தானா வரச்செலவுக்கு அம்பது ரூபாய் கொடுக்கச் சொல்லு. போப்பா சட்டை, வேஷ்டி வாங்கிப் போட்டுக்கிட்டு, நடிச்சுட்டு, சீன் முடிஞ்சதும் அந்த உடையோடு வீட்டுக்குப் போய்ச் சேரு" என்றார் கலைவாணர்.

வந்தவர் கிருஷ்ணனின் கால்களில் அப்படியே விழுந்தார். அவர் எழுந்திருக்க பல நிமிஷங்கள் ஆனது" -என்கிறார் இந்தக் காட்சியை நேரில் கண்ட பழம்பெரும் பத்திரிகையாளர் நவீனன்.

படிப்பகம்

padippakam



# 8

# கதவுக்குத் தாழ்ப்பாள் போடு!

“கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனைப் பேட்டி காண அவர் குடியிருந்த வெங்கட்ராமய்யர் தெரு மாளிகைக்குச் சென்றிருந்தேன். தன் பிரபலத்தைக் காட்டாமல், நெஞ்சை நிமிர்த்தி நட்சத்திர கர்வத்தை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் அன்புடன் பேசினார்.

“அதுக்கென்ன கொடுத்தாப்போச்சு. இன்னிக்கு ராத்திரி சிட்டாடல் ஸ்டுடியோவில் ‘மணமகள்’ ஷூட்டிங் இருக்கு. அங்கே வந்துடுங்க. சாவகாசமாப் பேசலாம்” என்றார்.

போனேன். டி.எஸ்.பாலையா, துரைராஜ், மதுரம் சம்பந்தப்பட்டக் காட்சி படமாகிக்கொண்டிருந்தது. கிருஷ்ணன்- பஞ்சு இயக்கிக் கொண்டிருந்தார்கள். படப்பிடிப்பை மேற்பார்வை பார்த்துக்கொண்டிருந்தார் கிருஷ்ணன். அருகில் வெள்ளி வெற்றிலைப்பெட்டி. அதற்குப் பக்கத்தில் நான்.

துரைராஜ் கெட்ட எண்ணத்துடன் கதவைத் தட்ட வேண்டும். மூடியிருந்த கதவைத் திறந்துகொண்டு மதுரம் கையில் விளக்குடன் வரவேண்டும். இது சீன். வீட்டு செட் போட்டவர் கதவுக்குத் தாழ்ப்பாள் வைக்க மறந்துவிட்டார். எப்படி கதவைத் தட்டுவது? கையினால்

படிப்பகம்

padippakam



தட்டினால் அந்த ஓசை சரிவர ஒலிப்பதிவு ஆகுமா என்ற பிரச்சினை எழுந்தது.

அதைக் கவனித்துவிட்ட கலைவாணர், 'யாரப்பா ஆர்ட் டைரக்டர்? ம்... பஞ்சு, நீங்க டைரக்டராச்சே கவனிக்க வேண்டாமா? போகட்டும். கதவைத் தட்ட என்ன ஐடியா வெச்சிருக்கீங்க?' என்று கேட்டார்.

ஏற்கெனவே கலைந்திருந்த கிராப்புத் தலையை இன்னும் கொஞ்சம் கலைத்து விட்டுக்கொண்டு படப்பிடிப்பு அறையில் சிந்தனையுடன் நடந்தார் பஞ்சு. ஆர்ட் டைரக்டர் கலைவாணர் கண்ணில் படாமல் இங்கும் அங்கும் அல்லாடினார்.

'ஆர்ட் டைரக்டர் எவ்வளவு அக்கறையா 'வீடு' கட்டியிருக்கிறார் பார்த்தீங்களா? அவர் சொந்தமா வீடு கட்டினால் கதவுக்குக் தாழ்ப்பாள் மாட்டாமலிருப்பாரா?' என்று என்னிடம் சிரிப்போடு கொஞ்சமாய் தனது கோபத்தை வெளிப்படுத்தினார்.

சுற்றிலும் பார்வையை ஓடவிட்ட கலைவாணர் ஸ்டுடியோவில் ஒரு மூலையில் நிறுத்தப்பட்டிருந்த குப்பை வண்டியைப் பார்த்துவிட்டார். அதன் நுகத்தடியைக் கழற்றி கொண்டு வரச்சொன்னார். அதிலிருந்த இரும்புச் சங்கிலியைக் கதவில் பொருத்தச் சொன்னார். அதைத் தட்டி ஓசை உண்டாக்கப்பட்டது. கதவு திறக்கப்பட்டு காட்சி படமானது.

டைரக்டர் பஞ்சுக்கும், ஆர்ட் டைரக்டருக்கும் தோன்றாத அந்த ஐடியா கலைவாணருக்குத் தோன்றியது. என்கிறார் பத்திரிகையாளர் நவீனன்,

ஆக கலைவாணர் கலையுலகில் சகதுறை ஞானம் கொண்டிருந்தார். அதுதான் அவரது வெற்றிக்கும், நிலைத்த புகழுக்கும் காரணம்.

படிப்பகம்

padippakam



# நடிகர்களிடம் தீண்டாமை தேவையா?

9

உயர்ந்த ஜாத, தாழ்ந்த ஜாதி என்ற தீண்டாமைக் கொடுமை அந்தக் கால நாடக நடிகர்கள் மத்தியில் இருந்தது.

'சதி லீலாவதி' படத் தயாரிப்பு நிறுவனம் (1934-ஆம் ஆண்டு) ஏற்பாடு செய்திருந்த 'கம்பெனி' வீட்டில் நடிகர்கள் தங்கி இருந்தார்கள். அங்கு இரு வகுப்பு நடிகர்களுக்கு உணவு தனித்தனியே பரிமாறப்பட்டது.

பிராமணரான எம்.வி.மணியும் மற்ற பிராமண நடிகர்களும் தனியாக உட்கார்ந்து சாப்பிடுவார்கள். அவர்களுக்குச் சமையல் அறையிலேயே சாதம் பரிமாறப்பட்டது.

பிராமணரல்லாத என்.எஸ். கிருஷ்ணன், ராமச்சந்திரன் மற்றவர்களுக்கு வெளிக் கூடத்தில் சாப்பாடு பரிமாறப்பட்டது.

இந்த முறையை மாற்ற விரும்பினார் கலைவாணர். இதற்காக ஒரு ஐடியா செய்தார். அன்றும் மணியும் மற்றவர்களும் சமையல் அறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

'என்னய்யா இது... எவ்வளவு நாழியா ரசம் கேட்கிறது... சேச்சே!' என்று சொல்லியபடி கிருஷ்ணன் சமையலறைக்குள் சென்றார். ரசப் பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு வந்தார். அவருடன் ராமச்சந்திரனும் (எம்.ஜி.ஆர்.) மற்றவர்களும் பொரியல், கூட்டு, சாம்பார், மோர் பாத்திரங்களைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள்.

அவர்கள் சமையலறைக்கு வந்து போனதால் உணவுப் பொருட்கள் 'தீட்டு'ப்பட்டுவிட்டதாக மணியும் அவரது நண்பர்களும் அத்துடன் சாதம் சாப்பிடுவதை முடித்துக்கொண்டார்கள்.

படிப்பகம்

padippakam





# 10

## சாப்ளினைப்போல கலைவாணர்

நகைச்சுவை மேதை சார்லி சாப்ளின் அவர்களைப் போலவே நம்ம நகைச்சுவை அரசு கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும், தாம் நடிக்கும் நகைச்சுவைப் பகுதியை மூலக்கதைக்குப் பொருந்தும்படியாக ஓர் உபகதை அமைத்து,

படிப்பகம்

padippakam



*தாமே வசனம், பாடல்கள் தயாரித்து, டைரக்‌ஷனும் செய்துகொள்வதை வழக்கமாக்கிக்கொண்டிருந்தார். அவர் நடித்த அனைத்து படங்களிலும் அப்படியே.*

*இவ்விதம் நகைச்சுவை பகுதியைத் தயாரிக்க இரண்டொரு இளம் எழுத்தாளர்களைத் துணைக்கு வைத்துக்கொண்டார். ஆனால் 'ஐடியா' முழுக்க முழுக்கக் கலைவாணருடையதே. (இன்றைக்கு நடிகர் விவேக் அவர்களும் இப்படித்தான் தமது நகைச்சுவைப் பகுதியைத் தமது குழுவினருடன் தயாரித்துக் கொள்கிறார்.)*

*அவருடைய நகைச்சுவைகளில் சீர்திருத்தக் கருத்துகள் மிளிரும். வெறும் 'வெட்டிக்காமெடி'யை அவரிடம் எதிர்பார்க்க முடியாது. அவருடைய சீர்திருத்தக் கருத்துகளைப் பாடலாக்கிக் கொடுத்ததன் மூலம் மற்றவர் படங்களுக்கும் பாடல்கள் எழுதி புகழ் பெற்றார் உடுமலை நாராயண கவி.*

*புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். பின்னாட்களில் பாடல்களிலும் வசனங்களிலும் மிகவும் கவனம் செலுத்தி, தம்முடைய கொள்கையை வலியுறுத்துவதில் தீவிர அக்கறை கொண்டார் என்றால் அதற்கு வழிகாட்டியாக அமைந்தவர் என்.எஸ்.கே.தான் எனலாம்.*

படிப்பகம்

padippakam



# அளவின்றி கொடுப்பவர்

'ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும்' என்ற கொள்கையுடைய கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களுக்கு அப்போது திரைப்படங்களில் புகழும், வருவாயும் வந்தது. ஆனால் எத்தனை வருவாய் வந்தாலும் அவருக்குப் பற்றாக்குறையாகவே இருந்தது. காரணம், 'வறுமையால் துன்பப்படுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு, யார் வந்தாலும் வாரிக் கொடுப்பார்.

'பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்ற பழமொழியெல்லாம் அவரைக் கட்டுப்படுத்தாது. கொடுக்கிறது எவ்வளவு என்று தனக்குத் தெரியக்கூடாது என்பதால் சட்டைப்பையில் கையை விடுவார். கிடைக்கிறதை அப்படியே கொடுத்துவிடுவார். அது கம்மியா, அதிகமா அவருக்கே தெரியாது.

இதற்காகவே அவரது ஜிப்பாவின் இரண்டு பக்கத்துப் பைகளிலும் நோட்டுக்களை மடித்து நிறைய வைத்திருப்பார். இடப்பையிலிருந்து இடக்கையாலும், வலப்பையிலிருந்து வலக்கை யாலும் எடுத்து வழங்குவார். ஒரு கைகொடுப்பது இன்னொரு கைக்குத் தெரியக்கூடாது என்ற பொன்மொழிக்கு உயிரூட்டியவர்.

படிப்பகம்

padippakam



# 12

## கலைவாணர் அனைத்திலும் முதல்வர்

தமிழ்ச்சினிமாவின் முதல் வள்ளல் நடிகர் கலைவாணர்தான்.

* தமிழ்ச்சினிமாவில் சீர்த்திருத்தக் கருத்துகளைப் பேசிய முதல் நடிகர் கலைவாணர்தான்.

* தமிழ்ச்சினிமாவில் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த முதல் காமெடி நடிகர் கலைவாணர்தான்.

* தமிழ் சினிமாவில் காமெடி ஜோடி முறையை அறிமுகப்படுத்திய நடிகர் கலைவாணர்தான்.

* காமெடி நடிகரால் படம் ஓடும், காமெடிக்காகப் படம் விற்பனை ஆகும் என்பதை முதலில் நிரூபித்த நகைச்சுவை நடிகர் கலைவாணர்தான்.

* தயாரிப்பாளரான முதல் காமெடி நடிகர் கலைவாணர்தான்.

* சோவியத் ரஷ்யாவின் அழைப்பை ஏற்று சென்றுவந்த முதல் கலைஞர்- கலைவாணர் என்.எஸ்.கே.தான்.

* தமிழ்ச்சினிமாவில் காமெடி டிராக் முறையை அறிமுகம் செய்த முதல் காமெடி நடிகர் கலைவாணர்தான்

* தமிழ்ச்சினிமாவில் நாத்திக கருத்துகளையும்

படிப்பகம்

padippakam



பொதுவுடைமை கருத்துகளையும் பேசிய முதல் நடிகர்.

* ஒரு படத்திற்கு இரண்டு இசையமைப்பாளர்கள் பணியாற்றும் முறையை அறிமுகம் செய்தவர் கலைவாணர்தான்.

* தமிழ்ச்சினிமாவில் துணை நடிகர்களின் சம்பளத்தை உயர்த்திய முதல் நடிகர் கலைவாணர்தான்.

* தமிழ்ச்சினிமாவில் நாய், கழுதை, எருமை போன்ற விலங்குகளை நடிக்க வைத்த முதல் நடிகர் கலைவாணர்தான்.

* விஞ்ஞானத்தின் அற்புதங்களை தமிழ்ச்சினிமாவில் சொன்ன முதல் நடிகர் என்.எஸ்.கே.தான்.

இப்படி எல்லாவற்றிலும் தமிழ்ச்சினிமாவில், ஏன் இந்திய சினிமாவில் அனைத்திலும் முதல்வராகக் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் திகழ்ந்தார்.

படிப்பகம்

padippakam



# நாம் இந்தியர்கள்

13

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ‘தளபதி’ என்ற பெயரில் சரித்திர நாடகம் ஒன்றை நடத்தி வந்தார். ‘சத்ரபதி சிவாஜி’ காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட நாடகம் அது.

அந்த நாடகத்தில் உணவு விடுதி நடத்துபவராகக் கலைவாணர் வருவார். வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக அவர்களுக்கு ஏற்ப தன் மதங்களைக்கூட மாற்றிச் சொல்லி வியாபாரத்தை ஓகோவென நடத்த முயற்சிப்பார்.

உதாரணமாக, இந்துமதத்தைச் சேர்ந்த வணிகர்கள் சாப்பிட வரும் நேரம். அதை ஒரு இந்து உணவு விடுதி மாதிரி காட்டி, தானும் இந்து போல் பெயர் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்வார். அதே போல முஸ்லீம் வணிகர்கள் உணவு விடுதிக்கு வரும்பொழுது அதை முஸ்லீம் உணவு விடுதிபோல் காட்டிக்கொண்டு, தானும் முஸ்லீம் போல் பெயர் மாற்றி உடை அணிந்து கொண்டு வியாபாரத்தைப் பெருக்க முயல்வார்.

இந்நிலையில் ஒரு நாள் ஒரே சமயத்தில் இந்து வியாபாரிகளும், முஸ்லீம் வணிகர்களும் உணவு விடுதிக்கு வந்து விடுவார்கள். அப்பொழுது கலைவாணர் வசமாக மாட்டிக்கொள்வார்.

ஜாதி, மத பேதங்களில் உடன்பாடில்லாத பகுத்தறிவாளரான கலைவாணர் இந்தக் காட்சியின் மூலம் ஒரு உண்மையை வெளிப்படுத்தியிருப்பார். பொருளாதாரத்தின் முன் மதம் ஆட்டங் கண்டு போவதையும், நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்பதையும் உணர்த்தி இருப்பார்.

படிப்பகம்

padippakam



# 14

## வயசு எத்தனை?

கலைவாணரைப் பார்க்க ஒரு நண்பர் வந்தார். அவருடன் பேசிக்கொண்டிருக்கையில், 'அண்ணனுக்கு என்ன வயசு?' என்று கேட்டார். வந்தவர்,

'உங்க அண்ணனுக்கா?' -என்றார் கிருஷ்ணன்.

'இல்லை உங்களுக்குத்தான்' -என்றார் வந்தவர்.

'என்ன என்னை போயி அண்ணன்னு சொல்றீங்க? நாற்பது முடிந்து ஏழு வருஷமாச்சு'-

'நாற்பது வயதாகி ஏழு மாசமாச்சுங்கிறீங்களா?'-

'இல்லை நாற்பது வருஷமாகி ஏழு வருஷமாச்சு. ஆனால் நாற்பது போதும் அதிக ஆசை எதுக்குனு அதோடு ஸ்டாப் பண்ணிக்கிட்டேன்.'

கேள்வி கேட்டவர் சிரித்து முடியும் வரை காத்திருந்தார். பிறகு சொன்னார்: 'நாற்பத்தேழு வயசுன்னு சொன்னா கிழவன் மாதிரி தோணுது பாருங்க. அதனாலேதான் அப்படிச் சொல்றேன்' என்றார். வயதைச் சொல்வதிலும் ஒரு நாகரீக நகைச்சுவையுடன் சொல்லியிருப்பார்.

படிப்பகம்

padippakam





15

# உடம்பு செருப்பா?

கடைசி நாட்களில், கலைவாணர் அரசுப் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது, டாக்டர்கள் ஊசி மேல் ஊசியாக மாற்றி மாற்றிப் போட்டார்கள்.

கலைவாணருக்கே வெறுப்பாகப் போய்விட்டது. 'என்னங்க என் உடம்புத் தோலிலே செருப்புத்தைச்சுப் பழகிக்கிறீங்களா?' என்று, வலிகும் நேரத்திலும் சிரித்துக்கொண்டே பேசிய மேதை அவர்.

படிப்பகம்

padippakam



# 16

## காந்திக்கு நினைவுத்தூண்

பட முதலாளிகளிடம் பணம் வாங்கிக்கொண்டு திரைப்படத்தில் நடித்து வந்தவர்தான் கலைவாணர் என்றாலும் சம்பாதித்த பணத்தைத் தானும் தன்னைச் சார்ந்தவர்களும் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்னும் சுயநலப்பண்பு படைத்தவரல்ல அவர். இல்லை என்று வந்தவர்களுக்கெல்லாம் அள்ளி வழங்கிய வள்ளல்.

அண்ணல் காந்தியடிகளின் மறைவுக்குப் பின்னர், அவரது நினைவைப் போற்றும் வகையில், ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் தமது சொந்தப் பணத்தைச் செலவு செய்து, தமது ஊரான நாகர்கோவிலில் ஒரு நினைவுத்தூணை எழுப்பினார் கலைவாணர்.

அண்ணலும் மறைந்துவிட்டார். அவருக்கு நினவைுத்தூண் எழுப்பிய கலைவாணரும் மறைந்துவிட்டார். ஆனால் அந்தத் தூண் இன்றும் நிலைத்து நிற்கிறது. அண்ணலின் மீது கலைவாணருக்கு இருந்த பற்று, பாசம், அன்பு, மரியாதை ஆகியவற்றைக் காவியம்போல நமக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

படிப்பகம்

padippakam



# 17

## அரசு விடுமுறையை மாற்று

அண்ணல் காந்தியடிகள் வெள்ளிக்கிழமை யன்று மறைந்தார். காந்தியத்தில் பற்றுகொண்ட கலைவாணர், அப்போது ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

'வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஏற்படுத்தப் பட்ட ஞாயிற்றுக்கிழமை அரசு விடுமுறை என்பதை மாற்றி இனிமேல் காந்தியடிகள் மறைவெய்திய வெள்ளிக்கிழமையை விடுமுறை நாளாக்க வேண்டும்' என்பதுதான் அந்த வேண்டுகோள்.

கலைவாணரின் வேண்டுகோள் நிறைவேற்றப் படவில்லை. இந்த காந்தியவாதி காந்தியடிகள் மறைந்த அதே வெள்ளிக்கிழமையில்தான் மறைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

padippakam



# மருந்துக்கு காசு

## 18

ஏழைக் கவிஞர் ஒருவர் அடிக்கடி கலைவாணரைப் பார்க்க வருவார். ஒவ்வொரு முறையும், 'குழந்தைக்கு உடல்நிலை மோசமாக இருக்கிறது என்றும், குழந்தை செத்து போச்சு' என்றும் பொய் சொல்லி நூறு, இருநூறு வாங்கிக்கொண்டு போவார். இப்படி மொத்தம் நான்கு குழந்தைகளை அவர் 'கொன்று' அதை மறந்துபோய்விட்டார்.

ஒருமுறை அந்தக் கவிஞரின் ஊருக்கு நாடகம் போடப்போனார் கலைவாணர், அவரைப் பார்க்க அந்தக் கவிஞர் தான் சொன்ன பொய்யை மறந்து, அந்த நான்கு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போய் கலைவாணரைப் பார்த்தார். ஆனால் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை.

பிறகு ஒரு மாதம் கழித்து, அந்தக் கவிஞர் கலைவாணர் கம்பெனிக்கு வந்து கொண்டிருந்தார். தூரத்தில் வந்துகொண்டிருந்தவரை கலைவாணர் பார்த்துவிட்டார். உடனே நூறு ரூபாய் கொடுத்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை- எதற்குக் கொடுக்கிறார் என்று.

'சீக்கிரம் மருந்து வாங்கிக்கொடு. இல்லைன்னா பிள்ளைங்க செத்துவிடப் போகுது. கொஞ்சம் லேட் பண்ணினால் செத்துவிடும்' என்று சொல்லி அனுப்பினார். அந்தக் கவிஞர் தன் தவறை உணர்ந்தார். அன்று முதல் அந்தப் பக்கம் வருவதுமில்லை.

தன்னை ஏமாற்றிக் கேட்கிறார்கள் என்பது தெரிந்தும் அவர்களின் ஏழ்மை நிலை கண்டு இரக்கம் காட்டி மன்னித்து, மறுபடியும் பணம் கொடுத்து அனுப்பும் மனித நேயச் செம்மல் கலைவாணர்.

படிப்பகம்

padippakam



# 19

## என்னைத் திட்டாதே!

மக்கள் மனம் கவர்ந்த நகைச்சுவை அரசர் கலைவாணர் கண்ணாடி முன் நின்று நேரம் போக்கியதே கிடையாது. அவருக்கு மக்கள் முகம்தான் கண்ணாடி. நடிகன் என்ற பந்தா இல்லாதவர்.

'அண்ணே துண்டை மறந்துட்டீங்கண்ணே' என்று சொல்லி எடுத்துக்கொடுத்தால் போட்டுக் கொள்வார். சில நேரம் தலைகூட ஒழுங்காக வாரிக்கொள்ள மாட்டார். அவரது உதவியாளர் ரங்கன் எடுத்துக்கொடுக்கும் உடையைத்தான் உடுத்திக்கொள்வார். சாப்பாட்டிலும் அப்படித்தான்.

தன்னை உயர்த்தி சிலர் ரசித்து, இன்னும் அதிகமாக அப்படி பேசு என்பார்கள். ஆனால், யாராவது கலைவாணரை முதலாளி என்று கூப்பிட்டால், 'என்னை திட்டாதீங்கப்பா' என்பார். 'அண்ணே' என்று தன்னைக் கூப்பிடுவதையே அவர் விரும்பினார்.

அதுமட்டுமல்ல; முதலாளி- தொழிலாளி பேதம் அவருக்குப் பிடிக்காது. 'அண்ணே' என்ற இந்தச் சொல்லை கலையுலகத்தில் உருவாக்கியவரே அவர்தான்!

படிப்பகம்

padippakam





# வறுமையை வாசிக்கிறாய்

20

கலைவாணரைக் காண வந்த ஒருவர், 'மூன்று வேளை சாப்பாடு போட்டு, மாதம் ஐந்து ரூபாய் கொடுங்க. நீங்கள் வேண்டும் பொழுதெல்லாம் நாதஸ்வரம் வாசிப்பேன்' என்றார்.

புதுமாதிரியாக வந்து வேலை கேட்பதுபோல் உதவியை எதிர்பார்த்தார். 'அப்படியா! சரி, இப்போதே வாசி!' என்றார் கலைவாணர். அவர் நாதஸ்வரத்தை எடுத்து வாசித்தார்.

வந்தவர் வாசிப்பில் சுருதி, தாளம், ராகம் எதுவுமே இலக்கணப்படி அமையவில்லை. கலைவாணர் உடனே அதை நிறுத்தச் சொல்லி விட்டு நூறு ரூபாய் கொடுத்தார்.

'நீ வாசித்ததை மிகவும் ரசித்து அனுபவித்தேன். நீ நாதஸ்வரம் வாசிக்கவில்லை. உன்னுடைய வறுமை நிலையை நாதஸ்வரத்தில் வாசித்துக் காட்டினாய். அதற்காகவே உனக்கு நூறு ரூபாய் கொடுத்தேன்' என்றார்! இதுதான் வள்ளல் மனம் என்பது.

படிப்பகம்

padippakam



# 21

## கலைவாணரின் தேர்தல் பிரச்சாரம்

**1952**-ல் முதல் தேர்தலில், அறிஞர் அண்ணா காஞ்சிபுரத்தில் நின்றார். அவரை எதிர்த்து அவ்வூரில் மிகப் பிரபலமாக விளங்கிய டாக்டர் சீனிவாசன் போட்டியிட்டார். அண்ணாவை ஆதரித்துப் பேச கலைவாணர் காஞ்சிபுரம் சென்றார். பெரும் கூட்டம் கூடியிருந்தது. கலைவாணர் தன் பேச்சைத் தொடங்கினார்.

'தோழர் அண்ணாதுரையைவிட இந்தக் காஞ்சிபுரம் மக்களுக்கு டாக்டர் ஸ்ரீனிவாசனே மிகவும் முக்கியமானவர். இப்படியொரு டாக்டர் காஞ்சிபுரம் மக்களுக்குக் கிடைத்திருப்பது அரிய வாய்ப்பு. எத்தனையோ டாக்டர்களை நாம் பார்த்திருக்கிறோம். இப்படியொரு கைராசியான டாக்டரை யாரும் பார்த்திருக்க முடியாது. நம்பிக்கையில்லாத கேஸ்களையெல்லாம் உயிர் கொடுத்துக் காப்பாற்றியிருக்கிறார். இத்தனை பெரிய டாக்டர் காட்சிக்கெளியர். ஏழை-பணக்காரர் என்ற பாகுபாடு பார்க்க மாட்டார். இரவு- பகல் என்ற நேரம் கிடையாது. எந்த நேரம் போனாலும், முகம் சுளிக்காமல் மக்களைக் காப்பாற்றுவதையே தொழிலாகக் கொண்டவர்."

இத்தனை அபூர்வமான டாக்டர், மக்கள் சேவைக்காகவே இருபத்தி நாலு மணி நேரமும், காஞ்சிபுரத்தைவிட்டு அகலாமல் காத்திருப்பவர்.'

படிப்பகம்

padippakam



கேட்டுக் கொண்டிருந்த கழகத் தோழர்களுக்கும் கட்சி அனுதாபிகளுக்கும், முன்பு பேசிய பேச்சாளர்களுக்கும்கூட, கலைவாணரைப் பற்றி சந்தேகம். முன்பு அண்ணாவுடன் ஏற்பட்டிருந்த மனவேறுபாட்டை நினைத்து பழிவாங்கு கிறாரோ என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கலைவாணர் தொடர்ந்தார்:

'ஆனால் அண்ணாவோ, அரசியல்வாதி, தமிழ்நாடு பூராவும் சுற்றியலைபவர். ஊரில் தங்க மாட்டார். எப்போது பார்த்தாலும் சென்னைக்குப் போய்விடுவார். அவருக்கு இருபத்து நான்கு மணி நேரமும் மக்களுக்காக அலைவதே வேலை. யார் என்ன பிரச்சினை என்று கூப்பிட்டாலும் அலுப்புக் கொள்ளாமல் அலைவார். போய்ப் பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து ஏற்பட்ட இன்னலைத் துடைப்பார். காஞ்சிபுரத்தின் பொதுமக்களாகிய நீங்கள் இப்போது இந்த இரண்டு வேட்பாளர்களைப் பற்றியும் நன்றாக யோசித்துப் பாருங்கள்.

டாக்டரை இந்த ஊரைவிட்டு அங்கே இங்கே அலையவிடலாமா? யாருக்கு எந்த ஆபத்து வந்தாலும் காப்பாற்றி மக்களின் அருகே இருக்கும்படி செய்ய வேண்டாமா? அவரைத் தேர்ந்தெடுத்துச் சட்டசபைக்கு அனுப்புவதன் மூலம் இரண்டு கெடுதல் ஏற்படும். அவரால் காப்பாற்றப்பட வேண்டிய நோயாளிகளைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும். நோயுடனும், மருந்துடனும் பழகிய அவர் அங்கு போய் அரசியல் காரியங்களைக் கவனிக்கவும் பயன்படமாட்டார். ஆகையால் அவர் வேலையை அவர் கவனிக்கும்படி வாக்களியுங்கள். அதாவது அவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பாதீர்கள். அரசியலே தொழில் என்றும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டென்றும் பாடுபடும் முழுநேர அரசியல்வாதியாகிய அண்ணாவை ஆதரித்து வாக்களித்து சட்டசபைக்கு அனுப்பிவிட்டு மக்களுக்கு இங்கிருந்து சேவை செய்ய வேண்டிய

படிப்பகம்

padippakam



டாக்டரை, அன்புடன் உங்களுடனேயே வைத்துக்கொள்ளுங்கள்' என்றாரே பார்க்கலாம்.

மக்களின் ஆரவாரம் எல்லை கடந்தது. போட்டியிட்ட டாக்டரைப் புண்படுத்தாமல், உயர்த்திப் பேசியே வாக்காளர்களைத் திருப்பிவிட்டார். அந்தத் தேர்தலில் அண்ணா அமோக வெற்றி பெற்றார். இப்படி தேர்தல் பிரச்சாரத்திலும் ஒரு புதுபாணியை அறிமுகம் செய்தவர் கலைவாணர்.

படிப்பகம்

padippakam



# 22

## கல்யாணத்துக்கு வரவேண்டாம்...

ஒரு சமயம் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனுக்குத் தன் மூத்த மகளின் திருமண அழைப்பிதழை அனுப்பி அத்துடன் கையால் கடிதமும் எழுதியிருந்தார். "அன்புள்ள கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களுக்கு, தங்களுக்கு ஓய்வு இருக்கிறது என்று திருமண விழாவுக்கு வந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் திருமணம் நடைபெறுவது மிகவும் சிறிய கிராமம். நீங்கள் வருவது தெரிந்தால் சுற்று வட்டாரத்து மக்களும் பாண்டிச்சேரி மக்களும் வந்து குழுமி விடுவார்கள். லட்சக்கணக்கான மக்களுக்கு வசதி செய்ய என்னால் முடியாது. சமாளிப்பதும் சிரமம். ஆகையால் தயவு செய்து வாழ்த்தை மட்டும் அனுப்பி வைத்தால் போதும்." கவிஞரின் கடிதம் இவ்வாறு அமைந்திருந்தது. கலைவாணர் அப்படியே வாழ்த்து அனுப்பி வைத்தாராம்.

படிப்பகம்

padippakam



# 23

## குடை வள்ளல்

கலைவாணர் சிறையிலிருந்து வெளிவந்தபின் 'நல்ல தம்பி' படப்பிடிப்பில் கலந்துகொண்டார். அப்போது.

வெளிப்புறக்காட்சி படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. 'நல்லதம்பி' படத்திற்காக நிறைய துணை நடிகர் கூட்டம். அதில் ஒரு தாயும் குழந்தையுடன் நடிக்க வேண்டும். வயல்புறக் காட்சி. நல்ல வெயில் நேரம். பக்கத்தில் ஒதுங்குவதற்கு மர நிழல் கூடக் கிடையாது. என்.எஸ்.கே.வுக்கு படப்பிடிப்புக்குப் பயன்படுத்தப்படும் பெரிய வண்ணக்குடையை ஓராள் பிடித்துக்கொண்டு நின்றார்.

கலைவாணரின் கண்களில் வெயிலில் பச்சைக்குழந்தையோடு நிற்கும் தாய் தென்பட்டாள். 'இந்தாப்பா, எனக்குக் குடை வேண்டாம். அந்தக் குழந்தைக்கும், தாய்க்கும் பிடி... வாம்மா குடை நிழலில் நின்னுங்க' என்றார். சற்று தள்ளினாற்போல, குடை நிழலிலிருந்து கொண்டு ஷாட்டின்போது மட்டும் வந்து தாயும் குழந்தையும் கலந்துகொண்டார்கள். அவர்களுக்குப் பேசியிருந்தது இருபத்தைந்து ரூபாய்தான். நூறு ரூபாயாகக் கொடுக்க ஆணையிட்டார். குடை தந்த கொடை வள்ளல் மட்டுமல்ல; ஏழைகளின் இதயம் அறிந்து அள்ளிக் கொடுத்தவர்.

படிப்பகம்

padippakam



# 24

## ஓவியர் எத்தனை முக்கியம்?

ஒரு நாடகம் வெற்றி பெற்றால் அதில் பங்கு பெற்ற முக்கியமானவர்களுக்கு நினைவுப் பரிசு தருவதுண்டு. ஆனால் கலைவாணர் அதிலும் வித்தியாசமானவர். 1944-ல் 'இழந்த காதல்' நாடகம் 50-வது நாள் வெற்றி விழாவில் பேசிய கலைவாணர்:

'இலை இல்லாவிட்டால் சாப்பாடே சுவைக்காது; வாழை இலை இல்லேன்னா தையல் இலை. அதுவும் இல்லாட்டா கையிலே. அப்படியும் இல்லை இலை மாதிரிதான் கேட்கும்.

நாடகத்துக்குப் பின்னணியிலே இத்தனை அழகான சீன்களை வரைஞ்சு, சூழ்நிலைத் தத்ரூபமாகக் காட்டின ஓவியர் மாதவன் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்தான் இந்த நாடகக் கலை விருந்துக்கு யாருடைய நினைவிலேயும் படாமல் இலை போல் இருந்து சாப்பிட உதவி செய்தவர்.

சாப்பிட்டதும் தூக்கியெறிகிற சாதாரண வாழை இலை இல்லே அவர். வெள்ளியாலே செய்யப்பட்ட இலை. சாப்பிட்டு முடிந்ததும் கழுவி பத்திரமா வைக்க வேண்டிய இலை. பாத்திரம் என்றாலும் இலைதான். ஆகையால் இந்தப் பாத்திரத்தை நாங்கள் பாத்திரமா பயன்படுத்தியதோடு விட்டுவிடாமல் பத்திரமாகவும் வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்' -என்றார்.

படிப்பகம்

padippakam





25

# சிரிப்பே மனிதனுக்குச் சிறப்பு

**எ**ல்லாப் பிறவியிலேயும் மானிடப் பிறவிதான் ரொம்பச் சிறந்ததுனு சொல்றாங்க. அரிதரிது மானிடராய்ப் பிறப்பது அரிதுன்னு பாட்டுகூட இருக்குது. ஆனால் மனிதன் எதிலே சிறந்துட்டான்? அழகிலேயா? புலியைப் பாருங்க.

படிப்பகம்

padippakam



மனிதனைவிட அழகா உடம்பெல்லாம் வண்ணமாகக் கோடு போட்டுக்கிட்டு பிறவிலேயே அழகா இருக்கு. சாயங்காய்ச்சின துணிய தைச்சுப்போட்டுக்கிட்டுத்தான் அழகுனு பகட்டுறோம் நாம.

பின்னே இரண்டு காலிலே நடக்கறதுனாலேயா? குரங்கு கூடத்தான் சமயங்களிலே ரெண்டு காலாலே நடக்குது. நாமாச்சும் வேறு ஆளைவிட்டு வீடு கட்டச் சொல்றோம். குருவி தானே அழகா கூடு கட்டிக்கிறது. மனிதன் உயர்ந்தது அழகால் இல்லே. நடையால் இல்லே. திறமையால் இல்லே; சிரிப்பால்தான். மனிதனுக்கு உள்ள தனிச்சிறப்பு அதுதான்' -என்றார் கலைவாணர். எத்தனை அழகான -ஆழமான கருத்து பாருங்கள்.

padippakam



# 26

## நாம் இருவர்

இந்தியத் திருநாடு அந்நியரின் பிடியிலிருந்து விடுபடுவதற்குரிய நாள் நெருங்கிக் கொண்டிருந்த சமயம். நாடெங்கும் தேச உணர்வுமிக்க நாடகங்கள், திரைப்படங்கள் உருவாகி வந்தன. கலைவாணர் தமது நாடக மன்றத்தின் மூலமாக 'நாம் இருவர்' என்னும் தேச உணர்வுமிக்க நாடகத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் எதிர்பாராமல் கிரிமினல் வழக்கொன்றின் காரணமாக அவர் சிறைத் தண்டனை பெற்றார். அதனால் நாடகம் டி.ஏ.மதுரம் அவர்களின் முயற்சியால் அரங்கேற்றம் செய்யப்பட்டது. சென்னை ஒற்றைவாடை அரங்கில் பல மாதங்களாக அந்நாடகம் நடைபெற்று வெற்றிக்கொடியை நாட்டியது. பின்னர் ஏவி.எம். நிறுவனத்தார் அந்நாடகத்தைத் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டுப் பொதுமக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றனர். இந்தச் சிறப்புக்குக் கலைவாணரும் காரணமாக இருந்தார் என்பது மறுக்க முடியாத உண்மை.

இப்படி நாடகக் கலையின் வாயிலாக கலைவாணர் தமது தேசபக்தியையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும் பல தடவை வெளிப்படுத்தி இருக்கிறார்.

படிப்பகம்

padippakam



# காந்தி வழியில் மதுவிலக்கு

## 27

நாடு முழுவதும் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அண்ணல் காந்தியடிகள் முனைப்பு காண்பித்து வந்தார். அவரது தலையாய கொள்கைகளில் மதுவிலக்கும் ஒன்றாகும். 1947 அக்டோபர் 2-ஆம் நாளுக்குப் பின்னர் இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்ட வாரியாக மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

குடிப்பழக்கத்தின் கொடுமையைத் தலைவர்கள் அவ்வப்போது மேடையில் எடுத்துரைத்து மக்களுக்கு அறிவூட்டி வந்தார்கள். கலைவாணர், மதுவிலக்கின் அவசியத்தை எடுத்துரைப்பதற்காக ஒரு திரைப்படத்தையே தயாரித்தார். பேரறிஞர் அண்ணா அவர்களால் கதை, வசனம் எழுதப்பட்ட 'நல்ல தம்பி' என்னும் அந்தப் படத்தில், அண்ணல் வலியுறுத்திய மதுவிலக்குக் கொள்கையை, மண்ணுலகில் மட்டுமின்றி தேவருலகுக்கும் சென்று பிரச்சாரம் செய்தார் கலைவாணர்!

ஜமீன் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற அண்ணலின் கொள்கைகள் பலவற்றை அந்தத் திரைப்படத்தில் காட்சிகளாக்கிக் காண்பித்தார் கலைவாணர். உண்மையான காந்தியவாதியான கலைவாணர் தமது வாழ்நாள் முழுவதும் பெரியார், காந்திஜி வகுத்துக் கொடுத்த வழியில் சென்றவர்.

படிப்பகம்

padippakam



# 28

## ஆட்டோகிராப்

ஒரு சமயம் ஒரு ரசிகர் கலைவாணரிடம் வந்து, 'ஆட்டோகிராப்' கேட்டார்.

'பெர்னாட்ஷா போட்ட மாதிரி போடவா' என்றார் கலைவாணர். வந்தவர் விளங்காமல் விழித்தார்.

'ஒரு குதர்க்கவாதி பெர்னாட்ஷாவிடம் ஆட்டோகிராப் வாங்கப்போனான். ஐந்து ஷில்லிங்கை எடுத்துக்கொடுத்துவிட்டு, 'ஆட்டோகிராப்' நோட்டையும் நீட்டினான்.

ஐந்து ஷில்லிங்கைப் பெற்றுக்கொண்ட அவர் 'நன்றி' என்று எழுதிக்கொடுத்தாராம்.

'நீங்க தமிழிலே வேறெ மாதிரி எழுதிக்கொடுங்க' என்றார் வந்த ரசிகர்.

நோட்புத்தகத்தை வாங்கி, 'வேறெ மாதிரி என்.எஸ்.கிருஷ்ணன்', என்று எழுதிக்கொடுத்தார். சிரித்தபடியே வாங்கிக்கொண்டார் அந்த ரசிகர். கலைவாணர் பள்ளியில் படித்தது குறைவு; உலகில் படித்தது அதிகம். அதிலும் மனிதர்களைப் படித்தது கூடுதல்.

படிப்பகம்

padippakam



# 29

## எது தொற்றுநோய்?

'**நா**ட்டிலே இன்புளுயென்ஸா நோயும் பெருகிப் போச்சு.

அதே மாதிரி தொற்று நோயும், தொழு நோயும் பெருகிப்போச்சு. ஒருவனைப் பார்த்ததும் அவன் பின்னாலே ஒட்டுப்புல் மாதிரி ஒட்டிக்கிட்டு அவனை விடாமல் பிடிச்சுக்கிட்டு காரியம் சாதிக்கிறதுக்குப் பேர்தான் தொற்று நோய்.

பணம், பதவி இருக்கிற ஆளைப் பார்த்ததும் தொழுது கூழைக்கும்பிடு போட்டு தன்னையே குறைச்சுக்கிறாங்கள் இல்லையா? அதுக்குப் பேர்தான் தொழுநோய், 'இப்படி காரியவாதிகளைப் பற்றி கலைவாணர் சொல்கிறார்.

படிப்பகம்

padippakam





# காரணம் என்ன?

30

'நான் சினிமாவில் நடிக்கக் காரணம் என்னுடைய வறுமைதான். நான் நடிகனாவதற்கு முன் திருவிழாவில் காற்றாடி விற்றேன். ஊர் ஊராகப் பாட்டுப்பாடி, சோடா வண்டி இழுத்தேன்.

பந்தடிக்கும் கிளஃப்பிலே ஓடி ஓடி பந்து பொறுக்கினேன். தெருத்தெருவாகச் சாணி பொறுக்கினேன்.'

இப்படி தன்னைப் பற்றிப் பெருமையாக, வெளிப்படையாக மறைக்காமல் சொன்னவர் கலைவாணர்.

அதுமட்டுமல்ல; அவர் சொன்னது ரகசியமான இடத்தில் அல்ல. நாகர்கோவில் நகரமன்றத்தில், பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த ஒரு கூட்டத்தில்.

சினிமாத்துறையில் இப்படி பழைய நிலையை மறைக்காமல் சொன்ன முதல் நடிகர் என்.எஸ்.கிருஷ்ணனாகத்தான் இருக்கும்.

உண்மையைச் சொல்லத் தயங்காத வெள்ளை உள்ளம்.

படிப்பகம்

padippakam



# 31

## அழுதும் சிரிக்க வைத்தவர்

கலைவாணர் நடித்த திரைப்படங்களில் அவர் எத்தனையோ வழிகளில் நல்ல கருத்துகளை, அறிவுப்பிரசாரத்தைப் புகுத்தியிருக்கிறார். மற்ற நகைச்சுவை காட்சிகளிலும் அவர் விதவிதமான கோணங்களில் நகைச்சுவை விருந்தளித்திருக்கிறார்.

'ஜகதலப்பிரதாபன்' படத்தில் ஓர் காட்சி'...

ஜகதலப்பிரதாபனைப் (பி.யு.சின்னப்பாவை) பிரிந்து தவிக்கும் நண்பர் என்.எஸ்.கே.வை மகிழ்விக்கும் நோக்தோடு ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்கிறார்கள் நண்பர்கள்.

கர்நாடக இசை பாட வந்தவர் (அம்புலப்புழை கிருஷ்ணமூர்த்தி) 'என்றைக்கு சிவகிருபை வருமோ...' என்ற முகாரிராகப் பாடலைப் பாடுகிறார்.

முகாரி ராகம் என்பது பொதுவாக அவலச் சுவைக்குப் பொருத்தமான ராகமாகும். வருத்தத்தை வறுத்தெடுத்துப் போட்டு, வாயை வளைத்து, நெளித்துச் சுழித்து உருக்கமாக அந்தப் பாடகர் பாடுவார். கலைவாணரின் வருத்தத்திற்கு அது நெம்புகோலாகி அதிகரிக்கச் செய்கிறது. ஏற்கெனவே கவலையிலிருந்த கலைவாணர் மெல்ல மெல்ல அழ ஆரம்பித்து இறுதியில் 'கோ'வென அழுதபடி பாகவதரைப் பார்த்து,

படிப்பகம்

padippakam



'இந்த ஆளு ஏன் இப்படி அழுறான். பாவம் ஏதாவது பணம் கொடுத்து அனுப்பி வையுங்கள்' என்று கூறினார். அப்போது கலைவாணர் அழுகையோடு ரசிகர்களின் சிரிப்பும் கலந்துகொண்டது.

'சிலர் அழுவார் சிலர் சிரிப்பார்- நான் அழுதுகொண்டே சிரிக்கின்றேன்' என்று கவியரசு கண்ணதாசன் எழுதினார். ஆனால் கலைவாணர், அழுதுகொண்டே மற்றவர்களைச் சிரிக்கச் செய்தார்.

படிப்பகம்

padippakam


# 32

## எந்த 'மை' உண்மை?

ஒரு சமயம் எழுத்தாளர்கள் மாநாட்டில் பேசுவதற்காக கலைவாணர் அழைக்கப்பட்டிருந்தார்.

'எழுத்தாளர்கள் தங்கள் பேனாவை எப்படிப்பட்ட 'மை'யைத் தொட்டு எழுதுகிறார்கள் தெரியுமா? சிலர் பெரு'மை'யில் தொட்டு எழுதுகிறார்கள். வேறு சிலர் பொறா'மை'யிலும் தொட்டு எழுதுகிறார்கள். சிலர் தற்பெரு'மை'யில் தொட்டு எழுதுகிறார்கள். சிலர் பழ'மை'யிலும் தொட்டு எழுதுகிறார்கள்.

ஆனால் தொடக்கூடாத மைகள், மடமை, கயமை, பொய்மை, வேற்றுமை.

நன்மை தரக்கூடிய செம்மை, நேர்மை, புதுமை ஆகியவற்றைத் தொட்டு வாசகர்களின் நெஞ்சைத் தொடும்படியாக எழுத வேண்டும். அவர்கள் நீக்க வேண்டிய 'மை'கள் வறுமை, ஏழ்மை, கல்லாமை, மடமை, அறியாமை. இந்த நோக்கத்தையே எழுத்தாளர்கள் கடமையாகவும், உரிமையாகவும் கொள்ள வேண்டும்' என்றார். இடமறிந்து பொருளறிந்து பேசுவதில் கலைவாணர் கில்லாடி என்பதற்கு இது ஒரு சொற்காட்சி.

படிப்பகம்

padippakam



# 33

## ரஷ்யாவில் கலைவாணர் உண்ணாவிரதம்

**சோ**வியத் ரஷ்யாவின் அழைப்பை ஏற்று 1951-ல் கலைவாணர், மதுரம், டைரக்டர் கே.சுப்ரமணியம் சென்றனர். 'மாஸ்கோ' ஹோட்டலில் ஒரு நாள்... நாங்கள் மாஸ்கோவிஸ்கி என்பவருடன் விருந்து சாப்பிட உட்கார்ந்தோம். அந்த மாஸ்கோவிஸ்கி இந்தியா பற்றிய சந்தேகங்களைக் கேட்டார். அதற்கு டைரக்டர் சுப்ரமணியம், விவரமாகச் சொல்லி க்கொண்டு வந்தார். அவர் ஆங்கிலத்தில் சொன்னார். இன்னொருவன் அதை ரஷ்யாவில் மொழி பெயர்த்தான்.

'எங்கள் இந்தியாவிலே கம்யூனிஸமும் காந்தியமும் ஒன்றுதான்' என்று சொன்னவுடன் 'இல்லை' என்றான். 'சொல்வதெல்லாம் பொய்' என்றான். நம் டைரக்டர் சுப்ரமணியம் 'கம்யூனிஸம் ஏரோப்ளேனில் பறக்கிறது. காந்தியம் கட்டை வண்டியில் செல்கிறது. அதைச்சொல்' என்றார். அவன் உடனே 'முடியாது' என்று சொன்னான். 'சொல்கிறாயா இல்லையா? நான் சொல்வதை நீ சொல்ல வேண்டியது உன் கடமை' என்று சொன்னார்.

நானும் கேட்டேன், 'என்னயா, அவர் சொல்வதை நீ மொழிப்பெயர்க்க

படிப்பகம்

padippakam



வேண்டியதுதானே உன் கடமை' என்றேன். நான் இப்படிச் சொன்னதும் 'யூ ஷட்டப்' என்றான். எனக்குக் கோபம் வந்துவிட்டது. அடக்க முடியவில்லை. 'சொல்கிறாயா என்ன?' என்று கேட்டேன். மறுத்தான். 'உங்கள் சாப்பாடும் வேண்டாம் மண்ணாங்கட்டியும் வேண்டாம்' என்று எழுந்துவிட்டேன். இதுவும் உண்ணாவிரதம்தானே! மாஸ்கோவிஸ்கி என்னிடம் மன்னிப்புக்கேட்கச் சொல்லி அவனை வற்புறுத்தினார். அவனும் மன்னிப்புக் கேட்டான். நிலைமை சரியானது' என்றார். இப்படி ரஷ்யா சென்றும் தான் ஒரு இந்தியன் என்பதை வலி யுறுத்தியவர் கலைவாணர்.

எனக்குத் தெரிந்தவரையில் முதன் முதலில் ரஷ்ய நாட்டுக்குப் போய் வந்த முதல் கலைஞர் என்.எஸ்.கே.தான்' -என்பது அண்ணா அவர்களின் சான்றிதழ்.

படிப்பகம்

padippakam



# 34

## கலைவாணரைச் சுட வந்த ராதா

நடிகவேள் கொஞ்சம் முரட்டுத்தனமான குழந்தை. கோபம் வந்தால் சுட்டுப்புடுவேன் என மிரட்டுவார். எம்.ஆர்.ராதாவுக்குக் கலைவாணர் மீது கோபம். அவர் கம்பெனியில் நடித்து வந்த டி.எஸ்.பாலையாவை அவருக்கு எதிராகத் தூண்டிவிட்டவர் கலைவாணர் என்ற எண்ணம்.

ராதா போட்ட வேடத்தை பாலையா போடும்படி செய்து பொள்ளாச்சியில் நாடகம் நடத்தினாராம். இழந்த காதலில் இவர் நடிக்க வேண்டிய பாத்திரத்தை கவிஞர் கே.பி.காமாட்சியை நடிக்க வைத்துப் படம் ஆக்கினாராம்.

இந்தக் கோபத்தில், பிஸ்டலை வாங்கி வைத்துக்கொண்டு எல்லாரிடமும் ‘நான் என்.எஸ்.கிருஷ்ணனைச் சுடப்போறேன் இதோ பார்’ என்று காட்டித் திரித்தாராம்.

ஒரு நாள் நாமக்கல்லுக்குப் போயிருந்தபோது, ‘என்.எஸ்.கே.வை எப்படியும் சுடப்போறேன்’ என்று சம்பங்கி, எத்திராஜ், யதார்த்தம் பொன்னுச்சாமிபிள்ளை ஆகியோரிடம் கூறியிருக்கிறார் எம்.ஆர்.ராதா. அவர்கள் போய் கலைவாணரிடம் விஷயத்தைக் கூறினார்கள்.

உடனே என்.எஸ்.கே. காரை எடுத்துக்கொண்டு

படிப்பகம்

padippakam



நேரே எம்ஆர்.ராதாவிடம் போய் நிறுத்தினார். காரிலிருந்து இறங்கி 'ஏண்டா, என்னைச் சுட்டுப்பிடுவேன்னு சொல்லித் திரிகிறாயாமே. வேண்டுமானால் இப்பச் சுட்டுப்போடேன். உன் ஆசை தீரட்டும். ஒருத்தரைச் சுட்டிக்காட்டிப் பேசறதே தப்புனு பெரியவங்க சொல்றாங்க. நீ என்னடான்னா சுடுவேன் என்கிற. சுடு' என்று எதிரே போய் நின்றுவிட்டார். ராதா திகைத்துப்போய் நின்றார். 'வா வண்டியில் ஏறு' என்று கூட்டிக்கொண்டு வந்தார்.

அடிக்க வந்தவனையும் அன்பால் அரவணைத்துக் கொள்ளும் குழந்தை மனம் கொண்டவர் கலைவாணர்.

படிப்பகம்

padippakam





# 35

## கலைவாணரின் பஞ்ச்

'அசோக்குமார்' படத்திலே கலைவாணர் ஏற்ற பாத்திரம் 'இவரு சொன்னா சொன்னதுதான். எவரு? இவரு' என்று ஒரு மாறுபட்ட காட்சியை நகைச்சுவை உணர்வுடன் அமைத்திருந்தார். இந்தப் படம் வந்ததும் அந்த வாக்கியம் மக்களிடையே பரவியது.

அப்போது நாகர்கோவிலிலிருந்து காரில்

படிப்பகம்

padippakam



கன்னியாகுமரிக்குப் போய்விட்டுத் திரும்பிய கலைவாணர் ஒரு இடத்தில் பெட்ரோல் போட வேண்டியிருந்தது. பங்க்கில் நிறுத்தியதும் பையன் வந்து 'எத்தனை காலன் சார்?' என்றான். 'ஐந்து' என்றார் டிரைவர்.

தற்செயலாக வண்டியின் உள்ளே கலை வாணரைப் பார்த்துவிட்டான். துள்ளிக்கொண்டு போய் பெட்ரோல் போட்டான். 'எவ்வளவு ரூபாய் அப்பா?' என்று கேட்டார் கலைவாணர். 'இருபத்தஞ்சு ரூபாய்' என்றான் பையன்.

அப்போது காலன் மூன்று ரூபாய்தான். 'இவரு சொன்னா சொன்னதுதான். எவரு? இவரு!' என்று என்.எஸ்.கே. பாணியில் அவரிடமே கூறினான். 'இருபத்தஞ்சென்ன, அம்பது ரூபாயே தரலாம். பில் வாங்கிக்கிட்டு வா' என்று அனுப்பினார் என்.எஸ்.கே. பையன் ஆபீசுக்கு ஓடினான்.

டிரைவரை காரை எடுக்கச் சொல்லிப் 'புறப்படு' என்றார். வண்டி நகர்ந்தது. பையன் பில்லுடன் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தான். 'சார் சார். பணம் கொடுக்காமப் போறீகளே' என்றான். 'ஆமா! இவர் போனா போனதுதான். எவரு? இவரு' என்று சிரித்துக்கொண்டே சொன்னார் கலைவாணர். சொன்னபடியே வந்துவிட்டார்.

பையன் போய் முதலாளியிடம் நடந்ததைக் கூறினான். 'போனாப்போகட்டும்' என்றார் முதலாளி. கலைவாணரின் வண்டி வரவில்லை. போனால் போனதுதான். இரண்டு மூன்று நாட்கள் கழித்து பெட்ரோல் பங்க் விலாசத்திற்கு '50' ரூபாய் மணியார்டர் வந்தது. 'பில்பணம் போக பாக்கியை அந்தப் பையனிடம் கொடுத்து விடுங்கள். இவர் சொன்னால் சொன்னதுதான். எவரு? இவரு' என்று ஃபாரத்தின் கீழே எழுதியிருந்தது. கலைவாணரின் பஞ்ச் டயலாக் இது. அன்று மிகப் பிரபலம்.

படிப்பகம்

padippakam



# 36

## சாமி போல் அசையாதிருந்தேன்

**கோ**வை ஜூபிடர் பிக்சர்ஸ் தொழிலாளர்களின் சார்பாக சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்த என்.எஸ்.கிருஷ்ணனுக்குப் பாராட்டு விழா நடந்தது. திருப்பூர் நகரசபை தலைவர் தோழர் வி.கே.பழனிசாமி தலைமை தாங்கினார். கோவை காங்கிரஸ் தியாகியாகிய சி.ஏ.அய்யாமுத்து வரவேற்று மிகவும் புகழ்ந்து பேசினார். மற்ற பேச்சாளர்களும் வெகுவாகப் புகழ்ந்தார்கள். ஸ்டுடியோ தொழிலாளர்கள் சார்பில் ஒரு வெள்ளிப் பேழையில் வைத்த வரவேற்புப் பத்திரத்தை வாசித்தார்கள். என்.எஸ்.கே. நன்றி தெரிவிக்க எழுந்தார். புன்னகை புரிந்தவாறே பேசத்தொடங்கினார்.

'எல்லாருமாகக் கூடி என்னை வானளாவப் புகழ்ந்தீர்கள். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு நான் சாமியைப்போல இருந்தேன். அதாவது சிலையைப் போல, கல்லைப்போல இருந்தேன்.

கல்லாலடித்தவனுக்குச் சாமி வரம் கொடுத்ததாகச் சொல்வார்கள். சிற்பி சாமி சிலையைக் கல்லாலடிச்சதாலே தான் இத்தனை பேர்கள் பண்ணும் அபிஷேகத்திலே கரைஞ்சு போகாம இருக்கு. அதேமாதிரி நானும் கல்லாக இருந்தேன். இல்லாவிட்டால் நீங்கள் இத்தனை பேரும் புகழால் அபிஷேகம் செய்தீர்களே

படிப்பகம்

padippakam



(குளிப்பாட்டினீர்களே என்பதைக் கவுரமாகக் குறிப்பிடுகிறார்) அதில் நானும் கரைஞ்சு போயிருப்பேன்' என்றார்.

புகழுக்கு மயங்காத தற்பெருமையைச் செய்துகொள்ளாத கலைவாணர் பிறர்தேடி பாராட்டினாலும் அதை நாணத்தோடு ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறார்.

படிப்பகம்

padippakam



# 37

## கலைவாணரின் ஆங்கிலம்

ஒரு சமயம் திரைப்பட விழா ஒன்றில் சொற்பொழிவாற்ற வந்த கலைவாணர், மேடையில் ஏறியதும் பொது மக்களை கம்பீரமாக நின்று பார்த்து,

'லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்' என்று பேச்சைத் தொடங்கி, ஒரு நிமிடம் நிறுத்தி சுற்றிலும் பார்வையை ஓடவிட்டார்.

கூடியிருந்த மக்களுக்குப் பெருவியப்பு. 'என்ன நம்ம கலைவாணர் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்துவிட்டாரே' என்று முணுமுணுத்தனர்.

அடுத்த வினாடியே...

'அவ்வளவுதான் எனக்குத் தெரியும். இதற்கு மேல் ஆங்கிலத்தில் பேச எனக்குத் தெரியாது' என்று கூறியதும் வியந்த முகங்களில் சிரிப்பு பூத்திருந்தது. இதுதான் கலைவாணரின் வெள்ளை உள்ளம் என்பது.

போலியாகத் தன்னைப் பற்றி மக்களிடம் புகழ்ந்துகொள்ள விரும்பாதவர் கலைவாணர் என்பதற்கு இது ஒரு சான்று.

படிப்பகம்

padippakam



# 38

## நாணயம்

ஒரு சமயம் தற்செயலாகத் தவறி விழுந்தது போல, தன் வீட்டின் முன்புறம் நூறு ரூபாய் நோட்டை தரையில் போட்டார் கலைவாணர்.

அவருடைய கலைக்குழுவைச் சேர்ந்த நடிகர்கள் மற்றும் பணியாளர்கள் எத்தனையோ பேர் அங்கே நடமாடிக் கொண்டிருந்தனர்.

ஏதோ வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதுபோல் பாவனை செய்தபடி ஓரங்கண்ணால் அந்த நூறு ரூபாய் நோட்டை கவனித்துக் கொண்டிருந்தார். யாராவது அந்தப் பணத்தை எடுக்கிறார்களா? அப்படி எடுத்தவர்கள். அதை மறைத்து வைத்துக்கொள்கிறார்களா? தம்மிடம் வந்து கொடுக்கிறார்களா? என்று அறிவதுதான் அவரது நோக்கம்.

'தம் ஆட்களின் நாணயம் எந்த அளவு இருக்கிறது?' என்பதை அறியும் சுவையான சோதனை அது. 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்ற பழமொழியை அந்த வேளையில் பொய்யாக்குவது போல் ஒருவர் அதை எடுத்து வந்து கலைவாணர் கையில் ஒப்படைத்தார். கலைவாணர் பெருமிதப்பட்டார்.

'நாணய விஷயத்தில் நீ நாணயமாக நடந்து கொண்டதால் இந்த நாணயம் உனக்குத்தான்' என்று நயமாகப் பேசி அந்த நூறு ரூபாய் நோட்டை அவருக்கே அளித்தாராம்.

நாணயத்தை மதித்த நாணயநாயகன்.

படிப்பகம்

padippakam



# 39

## முதல் வள்ளல் நடிகர்

**த**மிழ்ச் சினிமாவின் முதல் வள்ளல் நடிகர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தான். அவர் நாடக நடிகராக இருந்த காலம் முதல், திரைப்பட நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் என வளர்ந்து வாழ்வின் இறுதிநாள் வரை இல்லை என வந்தவர்களுக்கு அள்ளிக் கொடுத்தவர்.

தன் சக நடிகர்கள் முதல் தன்னை நாடி வந்து உதவி கேட்பவர்கள் வரை அள்ளிக் கொடுத்தவர். தன்னை ஏமாற்றிப் பொய் சொல்லிக் கேட்டவர்களுக்கும் மன்னித்து உதவியவர், பிறருக்கு உதவ வேண்டும் என்பதற்காகவே அதிகம் சம்பாதிக்க நினைத்தவர்.

கலைவாணரின் இறுதிக் காலத்தில் ஒருவர் அவரிடம் உதவி கேட்டு வந்தார். அப்போது அவர் கையில் ஒன்றும் இல்லை. தனது அன்பு மனைவி மதுரம் அம்மாளை ஏதோ எடுத்துவரச் சொல்லி அனுப்பிவிட்டு, உதவி கேட்டு வந்தவரிடம் வெள்ளியிலாலான தண்ணீர் கூஜாவை எடுத்துக் கொடுத்து, 'இதை விற்று எடுத்துக்கொள்' என்று சொல்லி அனுப்பிவிட்டாராம்.

இந்த விஷயம் மதுரம் அம்மாளுக்குத் தெரிந்தது. ஆனாலும் ஒன்றும் சொல்லவில்லை. கணவரின் தர்ம உள்ளம் அறிந்து நடந்துகொண்ட பெண்மணி அவர்.

தர்மம் செய்வதில் எம்.ஜி.ஆருக்கு இன்ஸ்பிரேஷன் கலைவாணர்தான் என்று சொல்லலாம்

படிப்பகம்

padippakam





# சின்ன வயது முதலே

## 40

கலைவாணர் சிறுவனாக இருந்தபோது மார்த்தாண்டம் என்ற ஊரில் ஒரு சிறு கடையில் நேந்திரம்பழம் வாங்கினாராம். பாக்கியைக் கொடுத்த கடைக்காரர் மறதியாக பத்துச் சக்கரம் (திருவிதாங்கூர் சமஸ்தான நாணயத்தின் பெயர் அது. 28 சக்கரம் பிரிட்டிஷ் நாணயப்படி ஒரு ரூபாயாகும்.) அதிகமாகக் கொடுக்கவே, அதிகமாகக் கொடுத்த பத்து சக்கரத்தை கடைக்காரரிடம் திருப்பிக் கொடுத்தபோது பத்துத் தடவை கடைக்காரர் பாராட்டியதை இன்னும் மறக்க முடியவில்லை என்று கலைவாணர் நண்பர்களிடம் கூறுவதுண்டு.

பிஞ்சுப் பிராயத்திலேயே நாணயம் அவர் உள்ளத்தோடு பின்னிப் பிணைந்து கொண்டது. எனவே மற்றவர்கள் நாணயத்தையும் எடை போட அவர் தவறுவதில்லை. தன்னிடம் இருப்பவர்களும் நாணயமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். கலைவாணர் நாணயத்தை (நேர்மை) மதித்தார். அதேசமயம் நாணயத்துக்காக (பணம்) ஆசைப்பட்டதில்லை. ஈட்டிய நாணயத்தை எல்லாம் (பொருளை) நாட்டு மக்களுக்கு அளிப்பதில் நிறைவு கண்டவர்.

படிப்பகம்

padippakam



# 41

# அதிர்ஷ்டத்தைத் தேடும் மனிதர்கள்

**ந**ம் நாட்டில் 'உழைப்பு' என்ற சொல்லுக்கே 'கஷ்டம்' என்று பொருள் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். 'கஷ்டப்பட்டு சம்பாதிச்சதய்யா!' என்கிறார்கள். 'கஷ்டம்' என்பதற்கு 'உழைத்துச் சம்பாதிப்பது' என்பதையே குறிப்பிடுகிறார்கள்.

ஆகையால்தான் இப்போது கஷ்டப்படாமல், உழைக்காமல் சம்பாதிக்க ஆசைப்படுகிறார்கள். கோடீஸ்வரன் வீட்டுக்குச் சுவீகாரம் போவது, ஏதாவது லாட்டரி பிரைஸ் அடிப்பது, புதையல் எடுப்பது போன்ற சுலபமான வழிகளில் வாழ்வதைத்தான் வாழ்க்கை என்று கருதத் தொடங்கிவிட்டார்கள். கஷ்டப்படாமல் அதிர்ஷ்டத்தைத் தேடும் சில மனிதர்களைப் பற்றி கலைவாணர் சொன்ன கருத்து இது. எத்தனை சரியான சிந்தனை.

தனது சிறிய வயது முதல் உழைப்பில் நம்பிக்கை கொண்ட அளவுக்கு போலி அதிர்ஷ்டங்களில் நம்பிக்கை கொண்டதில்லை.

படிப்பகம்

padippakam



# 42

## எந்த ஜாதியில் தள்ளுவது?

**கா**ந்தி புகழ் பரவிய காலம்.. டி.கே.எஸ். சகோதரர்கள் 'தேசபக்தி' என்னும் ஒரு நாடகம் நடத்தினார்கள். வெ. சாமிநாத சர்மா எழுதிய 'பாணபுரத்துவீரன்' என்னும் புரட்சிக்கதையே அது. அதில் ஒரு காட்சி. சேரி மக்கள் எல்லாரும் கூடி 'நம்ம, ஜாதியிலே யாரும் குடிக்கவே கூடாது. மீறிக்குடிக்கிறவர்களை சாதியை விட்டுத் தள்ளிறணும்' என்று தீர்மானிக்கிறார்கள்.

அப்போது ஒருவன், 'இருக்கிற சாதியிலே நம்மதானே கடைசி. இதுக்குக் கீழே சாதி கிடையாதே. குடிக்கிறவனை நாம எங்கேண்ணே தள்ள முடியும்?' என்று கேட்கிறான்.

யாரும் எதிர்பாராத வகையில் என்.எஸ்.கே. ஒரு நாள்... அந்தக் கேள்விக்கு, 'இதற்குக் கீழே சாதியில்லேன்னா, மேல் சாதி எதிலேயாச்சும் தள்ளி விட்டிடுவோம். குடிக்கிறவனை நம்ம சாதியிலே மட்டும் சேர்த்துக்கக்கூடாது' என்பார். எதிர்பாராத இந்தக் கேலியைக் கேட்டு பொதுமக்கள் கரகோஷம் செய்து சிரித்தனர்.

இப்படி புதுப்புது சிந்தனைத் துளிகள் கலைவாணர் நடிப்பில் வந்து விழும். அதில் ஆழமான பொருள் இருக்கும்.

படிப்பகம்

padippakam



# 43

## அண்ணாவும் என்.எஸ்.கே.வும்

அறிஞர் அண்ணாவுக்கும், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுக்கும் இருந்த உண்மையான அன்புக்கு சாட்சியாக ஒரு நிகழ்ச்சி அமைந்தது. 1957-இல் சேலம் மாவட்டத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத்தில், அறிஞர் அண்ணாவின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார் கலைவாணர். அதுவே கலைவாணரின் கடைசி பொது நிகழ்ச்சி.

அதே போல 1969 ஜனவரி 14 பொங்கல் தினத்தன்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா தி.நகர் வாணிமகாலின் எதிரேயுள்ள நாற்சந்தியில் கலைவாணர். என்.எஸ்.கிருஷ்ணனின் உருவச் சிலையைத் திறந்து வைத்தார். அதற்குப்பின் வேறு பொது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவில்லை. மருத்துவமனையில் சேர்ந்து பிப்ரவரி மூன்றாம் தேதி, இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இப்படி ஒரு விசித்திரமான ஒற்றுமை வேறு யாருக்கும் நிகழ்ந்ததில்லை.

படிப்பகம்

padippakam



# திருநீறு பூசியது ஏன்?

44

ஒரு சமயம் கவிஞர் சுப்பு ஆறுமுகம் வீட்டிற்கு கலைவாணர் போயிருந்தார். ஆறுமுகத்தின் அம்மாள் சுவாமி கும்பிட்டுவிட்டு, விபூதித்தட்டைக் கொண்டு வந்து கலைவாணர் முன் நீட்டினார். அவர் கை நிறைய விபூதி அள்ளி நெற்றி நிறைய பூசிக்கொண்டார்.

பின்னர் தனித்திருக்கும்போது, 'என்ன அண்ணே நீங்க திருநீறே பூச மாட்டீங்களே... அப்படியிருக்க...' என்று கேட்டார் சுப்பு ஆறுமுகம்.

'பாரு தம்பி! கண்ணாலே காணாத தெய்வத்தை நினைச்சுக்கிட்டு, கண்கண்ட தெய்வமான தாயார் மனசைப் புண்படுத்தக் கூடாதில்லே. அப்படிச் செஞ்சா இவங்களை உதாசீனப்படுத்திட்டு தெய்வத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாப்பல ஆயிடுமே' என்றாராம்.

அவர் பெரியாரின் சீடர் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு உதாரணம்.

படிப்பகம்

padippakam





# எல்லோரும் சந்தோஷமாயிருங்கோ

45

தி.க., காங்கிரஸ், தி.மு.க., கம்யூனிஸ்ட் என்று எல்லாக் கட்சியினருக்கும் கலைவாணர் நண்பர். ஆனால், அண்ணாவிடம் அதிக அன்பு கொண்டிருந்தார். ஒரு தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் சென்னை வானொலியில் என்.எஸ். கிருஷ்ணன் பேசும் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகியிருந்தது.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் நிலைய அதிகாரி கையெழுத்துப் பிரதியோடு கிருஷ்ணனிடம் வந்தார். அதிலிருந்து ஒரு வாக்கியத்தை அகற்றிவிட வேண்டும் என்பது அதிகாரியின் உத்தரவு.

"இந்த வருடத்திலே எல்லாரும் சந்தோஷமாக இருக்கோ, காமராஜர் சந்தோஷமாய் இருக்கார்.

படிப்பகம்

padippakam



அண்ணா சந்தோஷமாய் இருக்கார் என்ற வரிசையிலுள்ள 'அண்ணா சந்தோஷமாய் இருக்கார்!' என்பதை நீக்க வேண்டும் என்று வற்புறுத்தினார் அதிகாரி.

கலைவாணர் அலட்டிக்கொள்ளவில்லை. அவர் சொன்னார்... 'வேணும்னா இப்பவே அண்ணா வீட்டுக்கு போன் செய்யுங்க. அவர் சந்தோஷமா இருக்காரா, இல்லையான்னு கேளுங்க. அண்ணா சந்தோஷமா இல்லை ஜுரத்தில் படுத்திருக்காரு என்று சொன்னால் இந்த வரியை நானே எடுத்துடறேன்." என்றார்.

அதிகாரிக்கு வேறு வழி தெரியவில்லை. 'சரி, உங்கள் இஷ்டம் போலவே இந்த வரியைச் சேர்த்துப் பேசிக்கொள்ளுங்கள்' என்றார்.

படிப்பகம்

padippakam



## சுயநலம்

**46**

**நா**ட்டிலே பொறாமைதான் அதிகமாகிப் போச்சு. யாராவது ஒருத்தன் முன்னுக்கு வந்திட்டா அடுத்தவனுக்குப் பொறுக்கிறதில்லே. எப்படிடா இவனைப் பின்னுக்குத் தள்ளிக் கவிழ்ந்து விடுறதுன்னுதான் பார்க்கிறாங்க.

அப்படி நல்லெண்ணம் தப்பித்தவறி யாருகிட்டயாச்சும் இருக்கானு பார்த்தா, ஜட்கா வண்டிக்காரங்கக் கிட்டத்தான் இருக்கு. வண்டியிலே ஏறின உடனேயே 'முன்னுக்கு வாங்கய்யா முன்னுக்கு வாங்கய்யா'னு சொல்றாங்க. அதுவும் நம்ம மேலே இருக்கிற அக்கறையிலே அப்படிச் சொல்றதில்லே. அவங்க ஓட்டுறதுக்கு சௌகரியமா, முன்பாரம் வேணும்கிறதாலேதான் நம்மளை முன்னுக்கு வரச்சொல்லிப் பாடாப்படுத்துறாங்க. அதுவும் ஒரு விதத்திலே சுயநலம்தானே.

ஆனால், நம்ம பேராசிரியர் வ.ரா. இருக்கிறாரே இவர் மிகவும் புரட்சிகரமான மனப்பான்மையுள்ளவர் எல்லாரும் அறிவாளிகளாகி முன்னுக்கு வரணும்னு ஆசைப்படுறவர். எல்லாரையும் முன்னுக்கு வா. முன்னுக்கு வா'ன்னு கூப்பிடுறார். சென்னையிலே தெலுங்குக்காரங்க அதிகமாக இருக்கிறாங்களே. ஒருவேளை வானு கூப்பிடுறது விளங்காமல் போகுமோன்னு நினைச்சு 'ராய்யா ரா'ன்னும் கூப்பிடுறார். இப்படிக் கூப்பிடுறதின் அறிகுறியாத்தான் தன் பெயரை 'வா-ரா'னு மாத்திக்கிட்டார். நாம எழுதுறபோதும்தான் 'வ.ரா'னு எழுதுவோம். சொல்லும்போது வாரா'னு தானே சொல்லுகிறோம். அறிஞர் வ.ரா.வைப் பாராட்டி இப்படி கலைவாணர் பேசியிருந்தார். ஆக பாராட்டுவதிலும் வஞ்சனை இல்லாதவர்.

படிப்பகம்

padippakam



# 47

## சிறந்த பூ எது?

மதுரம் கலந்துகொண்ட பெண்கள் கூட்டம் ஒன்றில் கலைவாணரும் கலந்துகொண்டார். அப்போது அவர் பேசினார்:

'சகோதரிகளே, தாய்மார்களே! நீங்கள் எல்லாருமே பூ வைசிருக்கீங்க. சிலர் ரோஜாப்பூ வச்சிருக்கீங்க. சிலர் மல்லிகைப்பூ, முல்லைப்பூ, கனகாம்பரம்பூ போன்ற பலவகையான பூக்களை வச்சிக்கிட்டிருக்கீங்க. அதனாலேயே பெண்களுக்குப் பூவையர்னு பேரு. இந்தப் பூக்கள்லாம் இன்னைக்கிவச்சா நாளைக்குத் தூக்கி எறிய வேண்டிய பூக்கள். இதெல்லாம் மலரும் பூக்கள். மலர்ந்த மறுநாளே வாடும். வாடாமல் வளரும் பூவே சிறந்த பூ. அந்தச் சிறந்த பூ என்ன பூன்னு சொல்லுங்க பார்க்கலாம்?' என்றார்.

பலரும் விழித்தனர். ஒரு பெண்ணுக்குத் திடீரென்று நினைவு வந்தது. கேட்பவர் நகைச்சுவை அரசர். ஆகையால் தைரியமாக, 'சிரிப்பூ' என்றார். கலைவாணர் கொஞ்சம் சிரித்தார். தான் சரியான விடை கூறிவிட்டதாக அந்தப் பெண்ணும்கூடச் சிரித்தார். கூட்டத்திலி ருந்தவர்களும் சிரித்தார்கள்.

'பார்த்தீங்களா இதுவும் ஓரளவுக்கு வளரும்

படிப்பகம்

padippakam



பூதான். ஆனா தொடர்ந்து வளராது. இதோ இப்பப் பேச ஆரம்பிச்சதும் நின்னிருச்சு. நிற்காம, தடைப்படாம, வளர்ந்துக்கிட்டே இருக்கிற பூ சேமிப்பூதான். ஓரளவு நீங்க சேமிப்பு செய்துவிட்டு, அப்படியே விட்டிட்டாக்கூட வட்டியின் மூலம் அது தூங்காது. ஆகையால் சேமிப்பூதான் சிறந்த பூ. பெண்களாகிய நீங்க சேமிக்கத் தொடங்கணும்கிறதை வற்புறுத்தத்தான் இந்தக் கூட்டம். ஆகவே சேமிப்பே சிறந்த 'பூ' என்று கூறிமுடித்தார்.

எதையும் வீணாக்காமல் நாலு காசு சேர்க்க விரும்புகிற பெண்களிடம் சேமிப்பின் சிறப்பைச் சொல்லி அதில் நாட்டம் கொள்ள வைத்தவர் கலைவாணர்.



படிப்பகம்

padippakam



# திருடன் கையில் சாவி

# 48

ஒரு நாள் கலைவாணர் வீட்டில் வேலை பார்த்த பையன் கணக்குப்பிள்ளை கவனிக்காதபோது நூறு ரூபாயைத் திருடிவிட்டான். எடுத்துக்கொண்டு போய். அவர்கள் வழக்கமாகப் பெட்ரோல் போடும் பங்க்கில் சில்லறை கேட்டிருந்திருக்கிறான். பங்க்காரர்கள் 'இல்லை' என்று கூறினார்கள்.

'இருக்கிறதைக் கொடுங்க' என்றான். மீதம் பிறகு கொடுங்கள் என்று கூடக் கேட்கவில்லை. பங்க்காரருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. கேள்விமேல் கேள்வி கேட்டவுடன் உண்மையைக் கக்கிவிட்டான். பையனுடன் தன் மேனேஜரையும் அனுப்பி கலைவாணரிடம் நடந்த விஷயத்தைக் கூறி ஒப்படைக்கச் சொன்னார். அந்தப் பையனும் படித்தவன், தன் ஊர்க்காரன் என்ன செய்வது? கலைவாணர் ஒரு யுக்தி செய்தார்.

'ஏண்டா, பணம் குறைந்தால் கணக்குப் பிள்ளை தான் மாட்டிக்கொள்வார் என்று தானே நீ திருடினாய். படித்தவன் இந்த மாதிரி திருடினால் எப்படியடா முன்னுக்கு வருவது? அதுவும் யார் வீட்டில் திருடுவது? உன்னை விரட்ட மாட்டேன். உன் அப்பாவுக்கு இது தெரிஞ்சா உயிர் வைச்சிக்கிட்டு இருக்க மாட்டார். இன்றிலிருந்து வீட்டு ரொக்க வரவு செலவை இவனிடம் ஒப்படைத்து பணம் குறைந்தால் அப்புறம்தான் உனக்குத் தண்டனை' என்று கூறி பெட்டிச் சாவியையும் இருப்பையும் ஒப்படைக்கச் செய்தார். கும்பிட்டு விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, ஒப்படைத்த பொறுப்பை கவனமாக நிறைவேற்றினான். திருடன் கையில் பீரோ சாவி கொடுத்த கணவான் இவர்தான். இந்த நவீன தண்டனையால் அவனும் திருந்தினான் கலைவாணரின் முயற்சி பலித்தது.

படிப்பகம்

padippakam



# 49

## காசிக்குப் போ

ஒரு சமயம் கலைவாணரின் நாடகக்குழு கல்கத்தாவில் முகாமிட்டிருந்தது. அப்போது கலைவாணரின் தாயாரும் வந்திருந்தார்- தலயாத்திரை போக. ஒரு நாள் சபை நடிகர்களையும் மற்ற ஆட்களையும் பார்த்து என்.எஸ்.கே., 'ஏம்ப்பா, இங்கே யாராச்சும் கருமம் செஞ்சவங்க இருக்கீங்களா?' என்றார்.

சிலர், அப்பாவைப் பறி கொடுத்துவிட்டு கருமாதி செய்தவர்களைப் பற்றித்தான் கேட்கிறாரோ என்று நினைத்தனர். காளீசுவரன் என்ற நடிகர், ஆர்மோனி வாசிப்பவர். அவர் மட்டும் சுதாரித்துக்கொண்டார். 'காசிக்குப் போனால் கருமம் தொலையும்' என்னும் பழமொழி நினைவுக்கு வந்தது. கலைவாணரின் தாயார் தலயாத்திரை, சுற்றிப் பார்க்க வந்திருக்கிறார். இரண்டையும் முடிச்சுப் போட்டுப் பார்த்தார். விளங்கிவிட்டது. 'அண்ணே, நான் நிறைய கருமம் செஞ்சிருக்கேண்ணே!' என்றார்.

'அப்படியா? உன்னைப் போல கருமமே கண்ணாயினார்தான் இப்போ நமக்குத் தேவை. அம்மா காசி, கயா இன்னும் புண்ணியஸ்தலங்கள்லாம் போய்க் கருமத்தைத் தொலைச்சுக்கப் போறாங்க. நீயும் சேர்ந்து கூடத் துணையாய் போய், கருமத்தையெல்லாம் தொலைச்சுத் தலையை முழுகிட்டு வா!' என்றார். 'காளீசுவரனுக்கு செலவில்லாமல் புண்ணியம் கிடைக்கப் போகிறதே' என்று மற்றவர்கள் ஏங்கினார்களாம்.

படிப்பகம்

padippakam



# எம்.ஜி.ஆருக்கு அட்வைஸ் செய்த கலைவாணர்

## 50

தட்சயக்ஞம், மாயா மச்சேந்திரா படங்களின் தயாரிப்புப் பணிகள் கல்கத்தாவில் நடந்தன. அப்போது எம்.ஜி.ஆர். வளர்ந்து வரும் நடிகர்.

ஒரு நாள் வெளிப்புறப் படப்பிடிப்புக்கு கலைஞர்கள் சென்றனர். தண்ணீரில் இறங்கிச்செல்ல வேண்டிய இடத்தில் ஆறடி அகலமுள்ள பகுதியை எம்.ஜி.ஆர். ஒரே தாண்டாகத் தாண்டிக் குதித்தார். தாண்டிய வேகத்தில் அவரது செருப்பு ஒன்றின் வார் அறுந்துவிட்டது. குனிந்து பார்த்து, காலைத் தூக்கி வேகமாக உதறி அந்தச் செருப்பை தூர விழச் செய்தார். இன்னொரு செருப்பையும் உதறி எறிந்தார். செருப்பில்லாமலே நடந்து சென்றார்.

பிற்பகல் தங்கியிருந்த இடத்திற்கு கலைஞர்கள் வந்தனர். 'புதிதாக செருப்பு வாங்க வேண்டும். கடைக்குப் போகலாம். வாங்க!' என்று என்.எஸ்.கிருஷ்ணனை அழைத்தார் எம்.ஜி.ஆர்.

'அப்படியா! நாளைக்குப் போகலாம். நாளைக்கு ஷூட்டிங் இருக்காதுன்னு நினைக்கிறேன்' என்றார் கிருஷ்ணன்.

மறுநாள் காலை பத்து மணிக்கு எம்.ஜி.ஆர். வந்தார். 'கடைக்குப் போகலாம்!' என்றார்.

'போகலாமா? பணம் எடுத்துக்கிட்டியா? இரு! சட்டையை மாட்டிக்கிட்டு வர்றேன்' என்று கூறிய கிருஷ்ணன் உள்ளே போய், 'ராமச்சந்திரா!' என்று குரல் கொடுத்தார். எம்.ஜி.ராமச்சந்திரன் உள்ளே போனார். 'அந்த நாற்காலியில் உட்கார்' என்று கூறிய கிருஷ்ணன், கீழே கிடந்த ஒரு

padippakam



பொட்டலத்தைக் காட்டி, 'இந்தச் செருப்பு உன் காலுக்குச் சரியா இருக்கா பாரு!' என்றார் பொட்டலத்தைப் பிரித்ததும் எம்.ஜி.ஆர் திகைத்துப் போனார்.

'உன்னுடைய பழைய செருப்புதான். நீ வீசி எறிந்துவிட்டுப் போனதை பின்னால் வந்து கொண்டிருந்த நான் பார்த்தேன். அப்பவே பத்திரமா எடுத்து வந்துட்டேன் ஆணி அடித்து, தைத்து சரி பண்ணிட்டேன். இப்போ இதுக்கு என்ன குறை? இன்னும் ஆறு மாசம் வரும். முடிஞ்சவரை எதையும் முழுசா பயன்படுத்தப் பழகணும்' என்றார் என்.எஸ்.கிருஷ்ணன்.

படிப்பகம்

padippakam



# 51

## எனக்காக காப்பாற்றியிருப்பாரே

ஒரு சமயம் கலைவாணர் விமானத்தில் வெளியூர் செல்ல டிக்கெட் புக் பண்ணியிருந்தார்கள். திடீரென்று முக்கியமான வேறு வேலையின் காரணமாகப் பிரயாணம் செய்ய முடியாமல் போய்விட்டது. அதை மறந்து கலைவாணர் வேறு வேலைகளில் மூழ்கிவிட்டார்.

மறுநாள் செய்தி வந்தது. அவர் போக இருந்த விமானம் விழுந்து தீப்பிடித்து பயணிகள் அத்தனை பேரும் இறந்துவிட்டார்கள் என்று.

மிகுந்த ஆதங்கத்தோடு சிலர் வந்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டார்கள். 'நல்ல வேளை அண்ணே, நீங்க அந்த விமானத்திலே போகாதது நல்லதாப்போச்சு. கடவுள் காப்பாத்தினார்' என்றார்கள்.

'அந்தக் கடவுள் அவங்களைக் காப்பாத்தலியே! நானும் போயிருக்கணும்' என்றார் கலைவாணர்.

'ஏண்ணே அப்படிச் சொல்றீங்க...!'

'நான் போயிருந்தா அவங்களையெல்லாம் காப்பாத்தியிருப்பேன். ஏன்னா விமானமே விழுந்திருக்காது. கடவுள் என்னைக் காப்பாத்துறதுக்காகவாச்சும் அவங்களையும் காப்பாத்தியிருப்பாரே!' என்றார்- அந்த வெள்ளை உள்ளம் கொண்ட நகைச்சுவை அரசர்.

இப்படி பல தடவை பிற உயிர்கள்மேல் இரக்கப்பட்டிருக்கிறார். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாரைப் போல்.

படிப்பகம்

padippakam



# 52

## கலைவாணரைப் பிரிந்து உயிர்விட்ட நாய்

கலைவாணர் ஒரு பெரிய கிரெட்டேரியன் நாயை அன்போடு வளர்த்தார். அது அவர் மீது உயிரையே வைத்திருந்தது. அவரிடம் மிகவும் செல்லக்குழந்தை போல் பழகும். மதுரம் அம்மையாரைக்கூட அது அத்தனை நேசிப்பதில்லை. என்.எஸ்.கே.தான் தன் எஜமானன் என்பதே அதன் எண்ணம். அதன் பெயர் டிக்கி. ஒரு சமயம் கலைவாணர் கையிலிருந்த சீட்டைப் பிடுங்கியதும் கோபம் கொண்ட டிக்கி மதுரம் அம்மாவையே கடித்துவிட்டதாம்.

கோவையில், கலைவாணர் கைதானபின், தன் எஜமானரைப் பிரிந்த நாய் ஒழுங்காகச் சாப்பிடவில்லை. வற்புறுத்திப் புகட்டியும் ஏற்கவில்லை. சோர்ந்து சோர்ந்து படுத்து ஏங்கியபடியே கிடந்தது. ரேடியோவில் கலைவாணரின் குரலைக்கேட்டால் சுறுசுறுப்படையும். ஆகையால் 'ரிக்கார்'டைப் போட்டுக் குரலைக் கேட்கவைத்துச் சில நாள் சாப்பிட வைத்தார்கள். அதற்கப்புறம் அதற்கும் உண்மை புரிந்துவிட்டது. வெறும் குரலைக் கேட்டு உற்சாகம் அடையும் வழக்கத்தையும் விட்டு விட்டுப் பட்டினி கிடந்தே இரண்டு மாதங்களில் தன் உயிரைவிட்டது.

ஐந்தறிவு ஜீவன்கள் கூட கலைவாணர் மேல் பாசம் கொண்டிருந்தன என்பதற்கு இப்படி பல கண்முன் சான்றுகள் உண்டு.

படிப்பகம்

padippakam



# 53

## கலைவாணரை விட்டுப்பிரியாத கழுதை

கலைவாணர் தன்னுடைய அசோகா பிலிம்ஸ் சார்பாக 'அலிபாபா' கதையைப் படமாக்கினார். அந்தப் படத்திற்காக ஓர் அழகான கழுதையைத் தேர்ந்தெடுத்து விலைக்கு வாங்கிக் கம்பெனியில் வளர்த்தார். அந்தக் கழுதையும் என்.எஸ்.கே.யுடன் நடிக்க வேண்டும் என்பதற்காக, அதைத் தன்வசப்படுத்த அது விரும்பும் தின்பண்டங்களெல்லாம் கொடுத்துப் பழக்கினார்.

அவர் போகுமிடமெல்லாம் நாயைப் போலப் பின்தொடர்ந்து போக ஆரம்பித்தது கழுதை. அந்த வேடிக்கையைப் பார்ப்பவர்கள் எல்லாம் சிரிப்பார்கள். ஆகையால் அவர் முக்கியமான அலுவல்களில் ஈடுபட்டிருக்கும்போது இதைக் கட்டிப்போட்டு வைப்பார்கள். அவர் ஸ்டுடியோவுக்குப் போய்விட்டால் மேய அவிழ்த்துவிட்டுவிடுவார்கள். அப்போதும் அது நேரே அருகே இருந்த ஸ்டுடியோவுக்குப் போய்விடும்.

அவர் வீட்டில் படுத்திருந்தால், ஜன்னல் வழியாக மூக்கை நீட்டி நாக்கால் துழாவ ஆரம்பிக்கும். அதற்காக வென்று தலைமாட்டில் ஆப்பிள் பழம் தயாராக வைத்திருப்பார்.

'அலிபாபா' படத்தில் அந்தக் கழுதை மிகவும் பிரமாதமாக நடித்துப் பேர் வாங்கிக்கொண்டது. இப்படி கலைவாணிடம் யார் பழகினாலும் அவரைவிட்டு விலக மாட்டார்கள்.

படிப்பகம்

padippakam



# 54

## கலைவாணர் வழங்கிய பட்டங்கள்

கலைவாணர் தம் நாடகக் குழு சகாக்களுக்குச் சில பட்டங்கள் வழங்கினார். அவையும் நிலையான பட்டங்கள் ஆகிவிட்டன.

ஆழ்வார் என்றால் குப்புசாமி, புளி மூட்டை என்றால் ராமசாமி. யதார்த்தம் என்றால் பொன்னுசாமிப் பிள்ளை. இவ்விதம் பல பேர்களுக்கு அவர் இட்ட பட்டப்பெயர் நிலைத்துவிட்டன.

அதேபோல தன்னிடம் நீண்ட காலம் டிரைவராக இருந்த தினகர்ராஜுக்கு, விழா எடுத்துப் பாராட்டி, பதக்கம் கொடுத்து 'நல்ல காரோட்டி' என்ற பட்டம் கொடுத்தார்.

இந்த மாதிரி தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு யாராவது விழா நடத்தி பட்டம் கொடுத்ததுண்டா? இதுதான் கலைவாணரின் சிறப்பு.

படிப்பகம்

padippakam






# நாட்டுப்புறக் கலைவிரும்பி

## 55

கலைவாணருக்கு நாடோடிப் பாடல்கள், பொம்மலாட்டம், ஒயிலாட்டம், தெருக்கூத்து போன்றவை மிகவும் பிடிக்கும். கூர்ந்து கவனித்து, தான் அந்த மாதிரி ஒரு பாத்திரத்தில் நடிக்க நேர்ந்தால் எப்படி இயல்பாக நடிப்பது என்பதை மனதில் பதித்து வைத்துக்கொள்வார்.

இரவு நேரம் காரில் பயணம் செய்யும்போது, கிராமங்களில் தெருக்கூத்து நடந்தால் போய் உட்கார்ந்து பார்த்து ரசித்து ஒரு மணி நேரமாவது அவர்களுடன் செலவழித்துவிட்டுப் போவார்.

ஒரு சமயம் பெங்களூருக்குப் போகும் வழியில், ஒரு கிராமத்தில் கூத்து பார்க்கப்போய், ஏகப்பட்ட உபசாரம் எல்லாம் நடந்து, கூத்தை மிகவும் சிறப்பாக நடத்தி நன்கொடை ஐந்நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு விடியும் நேரம்தான் விடை கொடுத்தார்கள்.

படிப்பகம்

padippakam



# 56

## சிறைச்சாலை ஒரு தவச்சாலை

**சி**றையைவிட்டு வெளியே வந்தவர்கள் மறுபடி சிறையைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். ஆனால் என்.எஸ்.கே. சிறையில் எல்லாருடனும் அன்பாகப் பழகியதால், அந்தக் கைதிகள் மீது பாசம் வைத்திருந்தார். பொங்கல் விழாவை சிறைக்குள் கைதிகளுடன் கொண்டாடி அவர்களுக்கு மகிழ்ச்சியூட்ட வேண்டும் என்று தோன்றியது கலைவாணருக்கு. சிறைத்தலைமை அதிகாரி ராமச்சந்திரன் ஐ.சி.எஸ்.ஸைச் சந்தித்து அனுமதி வாங்கியிருந்தார்.

பெரிய பந்தல் போட்டு அலங்கரித்து ஒளி, ஒலி அமைப்புகளெல்லாம் செய்து முடியும்போது, சிறைக்கைதிகள் எல்லாருக்கும் ஒரே குதூகலம். சுமார் 1500 கைதிகளுக்கும் மேலேயே அப்போது சிறையிலிருந்தனர். எல்லாருக்கும் சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், வடை, பாயசம் தயாரித்து மதியம் வழங்கினார். இரண்டு மணிக்கு லலிதா, பத்மினி நாட்டியம். மூன்று மணிக்கு என்.எஸ்.கே. மதுரம் குழுவினர் நடிக்கும் 'தளபதி'

படிப்பகம்

padippakam



நாடகம். நான்கு மணிக்கு முடிந்தது. 'சிறைக்குள் இருப்பவர்களின் வாழ்க்கை கசப்பாகிவிடக் கூடாது என்கிறதுக்காகவே இந்தப் பொங்கல் விழாவிலே உங்களுக்கு இனிப்பான பண்டங் களும், சுவையான நாட்டியமும், சிரிப்பான நாடகமும் நடத்தினோம். நீங்கள் உங்கள் எதிர்கால வாழ்க்கையை இனிப்பாக்கிக்கணும். இனி பாக்கி இருக்குனு மறுபடி சிறைக்கு வரக்கூடாது.

முன்னாக பெரிய சிறையதிகாரி என்னைப் பத்தி உயர்வாப் பேசினார். நான் முன்பைவிட இப்போ பலபடி உயர்ந்திருக்கிறேன் என்றார். நான் உயர்வடைஞ்சதுக்குக் காரணம் இந்தச் சிறைவாசமும்கூட. வெளி உலகத்திலே கத்துக்கிட் டதைவிட, இங்கே சிறைக்குள்ளே கத்துக்கிட்டது தான் அதிகம். சிறைச்சாலை ஒரு வகையிலே தவச்சாலையாகும். கடந்த கால வாழ்க்கை, இப்ப நடத்திக்கிட்டிருக்கிற வாழ்க்கை, இனிமே நடத்தப்போற வாழ்க்கை எல்லாத்தையும் சிந்திச்சு சீர்தூக்கிப் பாத்துக்கிறதுக்கு இது நல்ல வாய்ப்பான இடம், சௌகர்யமான நேரம். அதனாலே விடுதலையாகிறதுக்குள்ளே எல்லாத்தையும் சிந்தனை செஞ்சுக்குங்க. வெளியே போனதும் புது மனுசர்களா மாறி, வாழ்க்கையிலே அக்கறையோட உழைச்சு முன்னுக்கு வரணும். நீங்களும் பட்டுத் திருந்திட்டீங்க. உங்களைப் பார்த்துத் திருந்தும்படியா நீங்க வாழ்ந்து காட்டணும். சிறைக்குப் போய் வந்தவங்களைச் சமுதாயம் கேவலமா மதிச்சது அந்தக்காலம். சிறைக்குப் போய் வந்தவங்கதான் இப்போ தேசத்தை ஆளுறாங்க. மக்களைச் சீர்திருத்துறாங்க. என்னை ரஷ்யாவே கூப்பிட்டுப் பெருமைப்படுத்துச்சு. நீங்களும் வெளிவந்ததும் எல்லாரும் பாராட்டறாப் போல சிறப்பா வாழணும்னு கேட்டுக்கிடறேன்.' என்று பேசினார் கலைவாணர்.

படிப்பகம்

padippakam



# 57

## பரிசு கொடுப்பதில் ஒரு நியாயம்

கலைவாணர் தம்பி என்.எஸ்.திரவியத்தின் திருமணம் ஒழுகினசேரி மதுரபவனத்தில் நடைபெற்றது. அப்போது எம்.கே. தியாகராஜ பாகவதரின் இசை நிகழ்ச்சி நடந்தது. பாகவதருக்குக் கலைவாணர் வைர மோதிரம் பரிசளித்தார். பிறகு பக்கவாத்தியக்காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் பரிசு கொடுத்தார்.

கடைசியாகக் கடம் வாசித்தவருக்கு மட்டும் மாலை போட்டுவிட்டு பெரிய வெள்ளிக் கோப்பையை பரிசளித்தார். பார்த்துக் கொண்டிருந்த மற்ற வாத்தியக்காரர்கள் ஒரு மாதிரியாக அசடு வழிந்தார்கள். பார்வையாளர்கள் ஆச்சரியப்பட்டார்கள். கலைவாணர் அவருக்கு ஏன் பெரிய பரிசாகக் கொடுக்கிறார் என நினைத்தனர்.

அப்போது கலைவாணர் சொன்னார்: 'கடம் சாதாரணதுணை வாத்தியம். அதை வாசித்தவருக்கு மட்டும் இத்தனை பெரிய பேழையா என்று நினைக்கிறீர்கள். இடம் கிடைக்காத இந்த நெருக்கடியான காலத்திலே கடத்தை ரயிலில் உடைபடாமல் கொண்டுவந்து சேர்ப்பதற்கே பெரிய திறமை வேண்டும். அவர் கவனமென்ன உயிரையே குடத்திற்குள் வைத்தல்லவா கொண்டு வந்தார். அதற்குத்தான் பெரிய பரிசு கொடுத்திருக்கிறேன்.' 'இப்படிப் பாராட்டிப் பரிசு கொடுப்பதிலும் தனக்கென்று ஒரு பாணியை வகுத்துக் கொண்டவர் கலைவாணர்.

படிப்பகம்

padippakam



# 58

## சரியாகச் சுட்டால் பணம்

சில சமயங்களில் பகலில் பயணம் போவார். காலை நான்கு மணிக்குப் புறப்படுவார். வண்டியிலே கூட ஆட்களும், இட்லி, தோசை போன்ற பலகாரங்களும், காப்பியும் சூடாகப் பிளாஸ்டிக்கில் இருக்கும். சமயங்களில் கட்டுச்சோற்று மூட்டையும் இருக்கும்.

காலை ஏழு மணியானதும், வழியில் ஆறும் மணல் படுகையும் அருகில் சோலையும் இருக்கும் இடமாக வண்டியை நிறுத்தச் சொல்லிவிட்டு, கால், கைகள் கழுவி, பல்துலக்கி, பலகாரம் சாப்பிடுவார்.

ஒரு சமயம் ஆற்றில் கால், கைகள் கழுவிக் கரையேறும்போது, கையில் துப்பாக்கியுடன் ஒரு நரிக்குறவர் நின்றார்.

'என்னய்யா, நீயும் துப்பாக்கியோட திரியிறே, என்னைச் சுடத்தானா?' என்றார் கேலியாக.

'ஐயையோ சாமி, நான் குருவி சுடுறவன்க?' என்றான் குறவர்.

'குறி தவறாமல் சுடத் தெரியுமா?' என்றார் கலைவாணர்.

'ஓ... சுடுறேன் பாரு சாமி' என்று முழங்காலை மடித்து உட்கார்ந்து ஒரு கொக்கைக் குறி வைத்தார்.

படிப்பகம்

padippakam



'பாவம் பறவையச் சுட வேண்டாம். அதோ தெரியுது பார் மாங்காய் அதைச்சுடு' என்றார்.

'பறவையைச் சுட்டா கறிக்காகும். மாங்காயைச்சுட்டா தோட்டா வீணாப்போகும். காசுக்கு தோட்டா வாங்கணும் சாமி என்றார்.

'தோட்டாவுக்கு நான் ரூபாய் தரேன். சுடு பார்க்கலாம்' என்றார். கலைவாணர் சொன்ன இரண்டு மூன்று குறிகளைத் தவறாமல் சுட்டார் குறவர்.

அவரைப் பாராட்டிவிட்டு இருபத்தைந்து ரூபாய் கொடுத்தார் கலைவாணர். இப்படி உயிரினங்களின் மேல் பாசம் கொண்டவர் கலைவாணர். அதனால்தான் மாங்காயைச் சுடச் சொன்னார்.

படிப்பகம்

padippakam



# 59

## சிறையில் வேலை கற்றார்

நகைச்சுவை அரசர் கலைவாணர் நிஜவாழ்வில் பல வேலைகள் செய்தவர். சிறையிலும் அவர் சும்மா இருக்கவில்லை. அங்கு கலைவாணர், அச்சகப் பைண்டிங் பகுதியிலே வேலை செய்தார். அதேபோல எல்லாக் கைதிகளுடனும் அன்போடு பழகி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்.

பின்னர் இதன் காரணமாகவே மேலதிகாரிகளின் அனுமதி பெற்று சிறைக்கைதிகளுக்கு ஒரு பொங்கல் விழா ஏற்பாடு செய்தார். பத்மினி, லலிதா போன்ற நட்சத்திரங்களையும் அழைத்துச் சென்று, கலை விருந்தும், அறுசுவை விருந்தும் வழங்கினார்.

சிறைக்கு எத்தனையோ தலைவர்கள் சென்றிருக்கிறார்கள். அங்குள்ள கைதிகளுக்கு விருந்து படைத்து நாட்டியம், நாடகம் நடத்தி அவர்களையும் மனிதர்களாக மதித்த மாமனிதர் கலைவாணர்.

படிப்பகம்

padippakam





# நடிகர் சங்கத் தலைவர்

## 60

மக்களோடு தனக்கு ஏற்பட்ட மூன்று வருட இடைவெளியைத் தவிர்க்க 1947-ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் நடைபெற்றது 3-வது தமிழ் எழுத்தாளர் மாநாடு. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, கவிஞர் பாரதிதாசன், அண்ணா, வ.ரா., கல்கி, நாரணதுரைக்கண்ணன், ப. ஜீவானந்தம் போன்ற பெரிய எழுத்தாளர்கள் அனைவரும் பங்கு பெற்றனர். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனே மாநாட்டின் முக்கிய பொறுப்பையும் செலவுகளையும் ஏற்றுத் தன் காரியதரிசி வெ.நாராயணன் மூலம், பெரிய விழா போன்று நடத்தினார். இதன் மூலம் தமது பொதுமக்கள் தொடர்பைப் புதுப்பித்துக்கொண்டார்.

1942-ஆம் ஆண்டில் நாடகக் கழகம் கலைவாணரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. 1956-ஆம் ஆண்டு தென்னிந்திய நடிகர் சங்கம் கலைவாணரை ஏகமனதாகத் தலைவராகத் தேர்வு செய்தது. நடிகர் சங்கத் தலைமைக்குத் தகுதியானவர்.

படிப்பகம்

padippakam



# 61

## நாட்டுக்கொரு நல்லதம்பி

'**ந**ல்லதம்பி' படத்தில் கூட்டுப் பண்ணையின் சிறப்புப்பற்றி மிகவும் சிறப்பாகப் போதித்திருப்பார் கலைவாணர்.

'நாட்டுக்குப் பொருத்தம் நாமே நடத்தும்
கூட்டுப் பண்ணை விவசாயம்-பட்ட
பாட்டுக்குத் தகுந்த ஆதாயம் உண்டு
பழைய கொள்கைகளை விடுவது ஞாயம்'

என்று பழமையைச் சாடி, புதுமையை வரவேற்றார்.

'நல்லதம்பி' படத்திற்கு கதை, வசனம் எழுதிய அண்ணாவுக்கு, என்ன ஊதியம் என்று பேசிக்கொள்ளவில்லை கலைவாணர். அறிஞர் அண்ணாவுக்கு ஒரு 'ஹிந்துஸ்தான்' காரைப் பரிசாக அளித்தார். பணமாகக் கொடுத்து வாங்குவது அவ்வளவு மதிப்புக்குரிய செயலல்ல என்று இருவருமே நினைத்திருக்கலாம்.

நாட்டுக்கு நல்லது செய்யும் நல்ல தம்பியாக படத்தில் தன்னைக் காட்டியதோடு நில்லாமல் நிஜத்திலும் நல்லதம்பியாகவே அவர் வாழ்ந்தார்.

படிப்பகம்

padippakam



# கோமாளி ஹரிச்சந்திரன்

62

இன்னொரு சமயம் நாகர்கோவிலுக்கு கலைவாணரும் மதுரமும், இரவில் காரில் போய்க்கொண்டிருந்தார்கள். திருச்சியை நெருங்கும் சமயம். பாலைக்கு அருகே ஒரு தெருக்கூத்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. அரிச்சந்திர மயான காண்டம், லோகிதாசனின் சடலத்தைச் சுடுகாட்டில் போட்டுக்கொண்டு சந்திரமதியும், அரிச்சந்திரனும் கால்பணத்துக்கும் முழத்துண்டுக்குமாகத் தர்க்கம் செய்யும் கட்டம்.

காரை விட்டிறங்கி என்.எஸ்.கே.வும், மதுரமும் வருவதைப் பார்த்துக்கூட்டம் ஆரவாரம் செய்து வரவேற்றது. கூத்து தடைப்பட்டது. யாரோ இரண்டு பேர் பக்கத்தில் போய் ஒரு மரப்பெஞ்சைக் கொண்டுவந்து போட்டு உட்காரச் செய்தார்கள். 'சரி தொடங்குங்க' என்றார் கலைவாணர்.

அரிச்சந்திரனுக்கு உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. நகைச்சுவை சக்கரவர்த்தியும் 'அரசி'யும் பார்க்கிறார்களே என்ற பெருமை, கால்பணத்தையும் முழத்துண்டையும் மறந்து, நல்லதம்பியாக மாறினார்.

'நாட்டுக்குச் சேவை செய்ய
நாகரிகக் கோமாளி வந்தானய்யா
ஆட்டம் ஆடி, பாட்டுப்பாடி
அழகான ஜோடியோடு வந்தானய்யா
மோட்டாரை விட்டிறங்கி வந்தானய்ய!' எனப் பாடினார்.

கலைவாணர் எழுந்துவிட்டார். 'ஏன்யா, நான் வந்ததுக்காகப் பாவம் அரிச்சந்திரனை ஏன்யா கோமாளியாக்கிற. ஏற்கெனவே தோட்டியானது போதாதா' என்று கூறி ஐம்பது ரூபாய் நோட்டுகளைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டுப் போனார். இதுதான் கலைவாணரின் கலை ஆர்வம்.

படிப்பகம்

padippakam



# 63

## எல்லாருக்கும் நல்லவர்

**நா**லு பேருக்கு நல்லது சொல்லணும், நல்லது செய்யணும் என்பதை இயல்பிலேயே கொண்டவர் கலைவாணர். அதனாலேயே சுயமரியாதை இயக்கத்தில் பற்றுகொள்ள முடிந்தது. ஆனால் உள்ளத்தால் அவர் ஒரு தேசபக்தி மிக்க காந்தியவாதி. கதர்தான் அணி வார். காங்கிரஸ்காரர்களாலும் மதிக்கப்பட்டவர்.

அறிஞர் அண்ணாவிடம் பற்றும் பாசமும் கொண்டிருந்தார். திராவிடக் கழகத்திலும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் அவருக்கு அதிக அன்பும் ஈடுபாடும் இருந்தது. ஆனால் தன்னை முழுக்க கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் பிணைத்துக்கொண்டதில்லை. தோழர் ப.ஜீவானந்தம் நாகர்கோவில் காரர் என்பதால் ஊர்பற்றும், முற்போக்கு எண்ணங்களும் கலைவாணரை ஒரு கம்யூனிஸ்ட் அனுதாபியாகக் காட்டியது.

இதேபோன்று அன்றைய தமிழகத்தின் முற்போக்கு அம்சங்கள் அனைத்திலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. வெறும் நகைச்சுவை நடிகர் என்பதற்கு அப்பால், சிறந்த சிந்தனையாளராகவும், முற்போக்குவாதியாகவும் எல்லாராலும் மதிக்கப்பட்டார். தந்தை பெரியார், அண்ணா, ராஜாஜி., டி.கே.சி., கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, தோழர் ப. ஜீவானந்தம், ம.பொ.சி., வ.ரா., கல்கி, நாரண துரைக்கண்ணன் போன்ற பல்வேறு கொள்கையினருடனும் கலைவாணர் நட்புடன் இருந்தார். இப்படி எல்லாருக்கும் நல்லவராக இருந்தார் கலைவாணர்.

படிப்பகம்

padippakam



# பொறாமைத் தீ

## 64

வறுமையில் வாடிய கிருஷ்ணன் நாடகம், சினிமாவில் சேர்ந்து செல்வமும், செல்வாக்கும் பெற்றதும், தான் பிறந்த ஊரில் பெரிய மாளிகை எழுப்பினார். அதற்கு 'மதுர பவனம்' எனப் பெயர் சூட்டி திறப்பு விழாவைக் கோலாகலமாக நடத்தினார். திரையுலகினர் திரண்டிருந்தார்கள். நாகர்கோவில் இன்றுள்ள அளவு வளர்ச்சியடைந் திருக்கவில்லை. எல்லாரும் தங்குவதற்கு ஏற்ற விடுதிகள் இல்லை. பலர் திருவனந்தபுரத்திலும் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கன்னியாகுமரியிலும் சிலர் தங்கினர்.

வந்தவர்களுக்கெல்லாம் சாப்பாடு. ஏகப்பட்ட கலை நிகழ்ச்சிகள், பாட்டுக்கச்சேரிகள். அதுவரை அந்த ஊர் கண்டிராத அளவு புதுமனை புகுவிழா சிறப்பாக நடைபெற்றது. அன்று புகழின் உச்சியிலி ருந்த மூவரின் இசை நிகழ்ச்சிகள். இசைச்சக்கர வர்த்தி டி.என். ராஜரத்தினம், ஏழிசை மன்னர் எம்.கே. தயாகராஜ பாகவதர், கோகிலகான இசை வாணி எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆகியோரின் நாத, கீத வெள்ளத்தில் ஒழுகினசேரி ஆனந்தமாய் நீச்சலிட்டது.

பலர் பாராட்டிப் புகழ்ந்தாலும், ஒரு சிலருக்குப் பொறாமை இருப்பது எங்கும் சகஜம்தானே. கலைவாணரைக் கண்டு பொறாமை கொண்டனர். ஒரு சிறுவன் மூலம் பொறாமை அங்கு ஒலித்தது. கலைவாணரைப் பார்த்து, 'ஏய்! சோடா பாட்டில்' என்று கூவினான். அருகில் இருந்தவர்கள் சிறுவனைப் பிடித்து அடிக்க முயலும்போது, என்.எஸ்.கே. ஓடிவந்து தடுத்து, பையனைத் தன் அருகே இழுத்து நிறுத்தி,

'என்ன தம்பி சோடா பாட்டிலா கேட்டாய். அதைவிட ஏதாச்சும் கிரஷ் சாப்பிடு. அப்புறமா பந்தியில் உட்கார்ந்து சாப்பாடு சாப்பிடு' என்று கூறி, 'கிரஷ்' பாட்டிலைக் கொண்டுவரச் சொல்லிப் பையனிடம் நீட்டிக் குடிக்கச் சொன்னாராம். மேன்மக்கள் மேன்மக்களே என்பது இதைத்தான்.

படிப்பகம்

padippakam





# தம்பிக்குத் திருமணம்

65

கலைவாணரின் குடும்பம், சிறந்த பிள்ளைமார்கள் வகுப்பைச் சேர்ந்தது. வறுமையில் வாடினால்கூட அந்த வகுப்புப் பிள்ளைமார்களுக்கு மதிப்புண்டு. அவர்கள் கவிமணியின் பிரிவான 'மருமக்கள் தாய'ப்பிள்ளைமார்கள் ஆவர். ஆனாலும் 1942-ல் தன் ஒரே தம்பி திரவியத்திற்கு அதே மதுர பவனத்தில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடத்தினார்.

அப்போது கலைவாணர் சீரும் சிறப்புமாகச் சீமானாக இருப்பதால் சுயசாதியில் திரவியத்திற்குப் பெண் கொடுக்கப் பல பெரிய மனிதர்கள் முன் வந்தும், கிருஷ்ணன் மறுத்துவிட்டார். தனது இரண்டாம் மனைவியான மதுரத்தின் தங்கையை சீர்திருத்தத் திருமணம் செய்து வைத்தார். சினிமாவில் மட்டுமல்ல; நிஜத்திலும் கலைவாணர் சாதிய பற்று இல்லாதவராக இருந்தார்.

படிப்பகம்

padippakam



# 66

## இசை ரசிகர்

கலைவாணர் வீட்டில் முக்கியமான விழா நடந்தது. பெரிய பெரிய மனிதர்களெல்லாம் வந்து நிரம்பியிருந்த நேரம். அப்போது பிரபலமாக இருந்த நாதசுர வித்வான் பிச்சையப்பாவின் நாதசுர கச்சேரி வாசிப்பு மிகவும் பிரமாதம். எல்லாரும் நன்கு ரசித்தனர். வந்த விருந்தினர்களை உள்ளே உபசரித்துக் கொண்டிருந்த கலைவாணர், உபசரிப்பை முடித்து, கச்சேரி மேடையை நெருங்கும்போது, பிச்சையப்பாவின் கச்சேரியும் முடியும் தறுவாயிலிருந்தது.

கலைவாணருக்கு நாதசுர இசையென்றால் மிகவும் பிடிக்கும். மேடையை நெருங்கி இருகையையும் நீட்டியபடியே, 'நான் இந்நேரம் வரை இங்கே இல்லாமல் போயிட்டேன். பிச்சையப்பா இன்னும் கொஞ்சம் பிச்சையப்பா' என்றார். இரண்டு பொருள்பட கலைவாணர் சொன்னதும், பிச்சையப்பா மறுபடியும் அவருடைய சிறப்பான இராகத்தில் மிகுந்த உற்சாகத்துடன் வாசிக்க ஆரம்பித்தார். கலைவாணர் நினைத்தால் இன்னும் கொஞ்சம் வாசியுங்கள் எனச் சொல்லலாம். ஆனால் இசைவாணரின் மென்மையான மனது அறிந்தவர்; அதனால்தான் கையேந்தி மென்மையாக இசையை ரசித்தார்.

படிப்பகம்

padippakam



# 67

## நல்லவர்க்கு வந்த சோதனை

'இந்து நேசன்' என்ற பிளாக்மெயில் பத்திரிகை நடத்திய லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் கைதாகி ஆயுள் தண்டனை பெற்றிருந்த கலைவாணரின் தண்டனையை விலக்க வேண்டுமென்று, எல்லா அரசியல் கட்சியினரும், முற்போக்குவாதிகளும் கூட்டங்கள் நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைத்தனர். முக்கியமாக திராவிடர் கழகமும், அதன் கிளைகளும், அதன் பிடியிலிருந்த நகரசபைகளும்தான் முக்கிய முயற்சி எடுத்தன. (அப்போது 1944. தி.மு.க. பிறக்கவில்லை.)

கலைவாணரின் துணைவியாரின் பாடு மிகவும் பரிதாபத்திற்குரியதாகிவிட்டது. வழக்கை லண்டன் பிரிவியூ கவுன்சிலுக்குக் கொண்டு போகப் பலரையும் சந்தித்து உதவி கேட்டு அலைந்து இரவும் பகலுமாகப் பாடுபட்டார். கலைவாணரின்பால் அன்பு கொண்ட தலைவர்கள், செல்வந்தர்கள் ஆகிய எல்லாருடைய வீட்டிலும் ஏறி இறங்கினார். மதுரம் துயரம்மிக்க ஒரு போராட்ட வாழ்வில் ஈடுபட்டிருந்தார். தி.க. சார்புடைய பல கிளைகளும், அமைப்புகளும் நிதி திரட்டி உதவி செய்தன.

படிப்பகம்

padippakam



*கே.எம்.முன்ஷி, எத்திராஜ் போன்ற பெரிய பெரிய சட்ட நிபுணர்களையெல்லாம் வைத்து வாதாடி, பிரிவியூ கவுன்ஸிலிலிருந்து மீண்டும் சென்னை உயர்நீதி மன்றத்திற்கே, வழக்கு மறுவிசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.*

*1947-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ஆம் தேதி, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகளாக இருந்த ஹாப்பலும், சகாபுதீனும் எம்.கே.தியாகராஜ பாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் மீது விதித்த ஆயுள் தண்டனையை ரத்து செய்து, விடுதலைக்கு ஆணையிட்டனர். செய்தியை அறிந்த மக்கள் வெள்ளம் மாலைகளுடன் மத்திய சிறைச்சாலை வாயில்முன் கூடி, வாழ்த்தொலி எழுப்பியது. மத்திய சிறை திணறியது.*

படிப்பகம்

padippakam



# 68

## கலைஞருக்குச் சம்பளம்

**க**லைஞர் மு. கருணாநிதி, 'மந்திரி குமாரி' மூலம் பிரபலம் அடைந்திருந்த நேரம். அப்போது, சேலத்தில் தங்கியிருந்த கலைவாணர், 'மந்திரி குமாரி'யைப் பார்த்துவிட்டு, கலைஞரை அழைத்துவரச் சொன்னார். அதுவே அவர்களின் முதல் சந்திப்பு.

'நம் மணமகள் படத்திற்கு வசனம் எழுத வேண்டும். உங்களுக்கு எவ்வளவு தொகை வேண்டும்?' என்று கேட்டார்.

'எனக்குத் தெரியாது...' என்றார் கலைஞர். கலைவாணர் விடவில்லை. ஏற்கெனவே எழுதச் சொல்லிவிட்டுப் பின்னர் (அண்ணாவிடம்) மனத்தாங்கல் ஏற்பட்ட அனுபவம் இருக்கிறதே. 'நான் ஒன்றும் நினைக்க மாட்டேன், என்ன வேண்டுமோ கேளுங்கள்' என்றார். 'நீங்கள் பார்த்து என்ன கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறேன்' கலைஞர் சிரித்துக் கொண்டே சொன்னார்.

'என்ன கொடுத்தாலும் வாங்கிக் கொள்வீர்களா? மறுக்க மாட்டீர்களே!' என்றார் கலைவாணர். சம்மதித்தார் கலைஞர். ஒரு துண்டுக் காகிதத்தில் நான்கு சைபர்களை மட்டும் எழுதி கலைஞரிடம் கொடுத்துப் பிரித்துப் பார்க்கச் சொன்னார் கலைவாணர்.

படிப்பகம்

padippakam



கலைஞர் பார்த்தார். நான்கு பூஜ்ஜியம் இருந்தது. அதன் அருகே எந்த இலக்கத்தை எழுதினாலும் அத்தனை ‘பத்தாயிரம்’தானே ஆகும் என்று எண்ணிப் புன்னகைத்தபடி ‘சம்மதம்’ என்றார்.

“என்னய்யா, நாலு பூஜ்யத்திற்கும் மதிப்பு கிடையாதே ஏதாவது இலக்கம் போட்டால் தானே மதிப்பு. அடுத்து எண்ணை முன்னே போடவா, பின்னே போடவா’ என்றார் கலைவாணர். ‘எங்கே வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள்’ என்றார் கலைஞர். சைபர்களின் கடைசியில் ஒன்று என்னும் எண்ணைப் போட்டு கலைஞரிடம் நீட்டி ‘சம்மதமா?’ என்றார். சீட்டை வாங்கித் தலைகீழாகத் திருப்பி, அவரிடம் நீட்டி ‘சம்மதம்தான்’ என்றார். 00001 என்ற தொகை 10000 என்ற பத்தாயிரமாக மாறிவிட்டது.

இந்த ‘மணமகள்’ படத்தின் மூலம்தான் நாட்டியப் பேரொளி பத்மினியை கதாநாயகியாக சினிமாவுக்குக் கலைவாணர் அறிமுகப்படுத்தினார்.

படிப்பகம்

padippakam



# 69

## திருடியதற்குப் பரிசு

ஒரு சமயம் கலைவாணர் எதிர் வீட்டில், வெளிக்கதவு சாத்தியிருந்தது. வெளிக்கதவின் பூட்டு திறந்தபடி தொங்கிக்கொண்டிருந்தது. தெருவில் போன ஒரு பையன் அந்தப் பூட்டை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு தழுவினான்.

வாசலில் நின்று பார்த்த கலைவாணர் அவனை வழிமறித்து 'இங்கே வாடா தம்பி' என்று அழைத்தார். பையன் மிகவும் சாது போல அவர் முன் நின்றான். 'தம்பி பையிலே என்ன இருக்கு? என்றார். 'ஒண்ணுமில்லையே' என்றான்.

'காட்டு பார்க்கலாம்' என்று அவன் சட்டை பையில் கைவிட்டார். பூட்டு! கையும் களவுமாகப் பிடிபட்ட அவன் பூட்டை அவர் கையில் கொடுத்து மன்னிப்புக் கேட்டான். 'ஏண்டா எடுத்தே' என்றார். 'பசி. பழைய சாமான் கடையில் போட்டால் ரெண்டு ரூபாய் கிடைக்கும். சாப்பிடலாம்னு எடுத்தேன்' என்று உள்ளதைச் சொன்னான்.

அதற்குள் வெளியே வந்த வீட்டுக்காரர் கதவில் பூட்டு இல்லாததைப் பார்த்துவிட்டார். தெருவில் கலைவாணர் ஒரு பையனுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். அவன்தான் எடுத்திருப்பான். என்.எஸ்.கே.

padippakam



பிடித்துக்கொண்டார் என்ற எண்ணத்தில் ஆத்திரத்தோடு வந்தார் வீட்டுக்காரர்.

பையன் கெஞ்சும் தோரணையில் பார்த்தான். கலைவாணர் சிரித்தபடியே, ‘வாங்க வாங்க. பூட்டைத் தேடுறீங்களா? ஒரு பையன் தூக்கிக்கிட்டு ஓடினான். தம்பி அவனை விரட்டிப்பிடித்துப் பூட்டைப் பறிச்சக்கிட்டு வந்தான். நான் வாங்கி வச்சிருக்கேன். இந்தாங்க பூட்டு. பாவம் பையன் கஷ்டப்பட்டான். அதுக்காக ரெண்டு ரூபாய் கொடுத்தனுப்புங்கள். டேய் தம்பி. கொடுப்பாரு போயி வாங்கிட்டுப் போ!’ என்றாராம். அவன் செய்தது திருட்டுதான். ஆனாலும், அவனது உண்மை நிலையைத் தெரிந்த கலைவாணர் திருட்டுக்குச் சன்மானம் வாங்கிக் கொடுத்தார். அதாவது அவனது இயலாமையை நினைத்து.

படிப்பகம்

padippakam





# இசை ரசிகருக்கே அல்வா

70

ஒரு நாள் ஒரு 'பீப்பீ'க்காரர் தன்னை நாதசுர வித்வான் என்று சொல்லிக்கொண்டு என்.எஸ்.கேயிடம் வந்தார். அவர் வேறு தொழில் செய்துகொண்டு இடைவேளையில் ஊதுபவர். 'ஐயா! நான் நல்லா வாசிப்பேன். தினம் ரெண்டு வேளைசோறு போட்டு மாதம் அஞ்சு ரூபாய் கொடுத்தாப்போதும், நாடகக்கல்யாண சீன்லேயும் நீங்க எப்ப எங்க வாசிக்கச் சொன்னாலும் வந்து வாசிக்கிறேன்' என்றார்.

'அப்படியா? எங்கே வாசியும் கேக்கலாம்' என்றார் கலைவாணர். எடுத்து 'பீபீ' என்று சீவாளியில் ஒலியெழுப்பியதுமே கலைவாணருக்குத் தெரிந்துவிட்டது அவர் இசை அல்வா கொடுக்கிறார் என்று.

அடுத்து மறுபடியும் பாட குழலை வாயில் வைத்தார். 'வித்துவான், வேண்டாம்... போதும், இந்தாங்க' என்று ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார். ஒன்றும் புரியாமல் விழித்தார் நாதசுர வித்துவான்.

'வச்சுக்குங்க. இருபது மாதச்சம்பளம். நீங்க கேட்டபடி இருபது மாதத்துக்குள்ளே நல்லாப் பழகிக்கிட்டு அப்புறம் வாங்க பார்க்கலாம்' என்று சொல்லியனுப்பினார். தப்பு செய்தவரையும் கடிந்து கொள்ளாத உயர்பண்பு எத்தனை பேருக்கு வரும்.

படிப்பகம்

padippakam



# 71

# கலைவாணர் கார் ஓட்டும் அழகு

ஒரு சமயம் பட்டுக்கோட்டையில் ஒரு நிகழ்ச்சிக்காக கலைவாணர் காரில் போயிருந்தார். கூட டி.எஸ்.துரைராஜ் இருந்தார். நிகழ்ச்சி முடிந்து, இரவு 10 மணிக்கு மேல் சென்னையை நோக்கிப் புறப்பட்டனர். முதலில் டிரைவர் தினகர் ராஜ் ஓட்டினார். கலைவாணரும் துரைராஜூம் சுமார் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு தூங்க ஆரம்பித்தனர். மூன்றரை மணிக்கு மேல் ஓர் டீக்கடை ஓரமாகத் தினகர் ராஜ் வண்டியை நிறுத்தினார். வண்டி நின்றதும் கலைவாணர் இறங்கி, துரைராஜையும் இறங்கச்சொன்னார். இவர்கள் இறங்கியதும், வழக்கப்படி தினகர்ராஜ் பின்சீட்டில் போய்படுத்துவிட்டார்.

இவர்கள் முகம் கழுவி, 'டீ' குடித்து வெற்றிலை போட்டுக்கொண்டு இருவரும் முன் சீட்டில் ஏறிக்கொண்டனர். கலைவாணர் கார் ஓட்ட ஆரம்பித்தார். எப்போதுமே இவ்விதம் விடியப்போகும் முன் தனது டிரைவர் தினகர் ராஜைத் தூங்கச்சொல்லிவிட்டு கலைவாணர் ஓட்டுவதுதான் வழக்கம். மிகவும் சுகமாகக் காரோட்டுவார். கார் ஆடாமல் அசையாமல் ஊர்ந்து போகும். அதுவும் அந்த வண்டியின் ஹாரன் இசை நயம் கொண்டது. சுரங்களில் ஒலி யெழுப்பும். அதைக்கேட்டு ஏதாவது

படிப்பகம்

padippakam



கற்பனையோடு மெட்டமைத்து பாடிக் கொண்டே கலைவாணர் ஓட்டுவார். அன்று துரைராஜுடன் பேசிக்கொண்டே ஓட்டினார்.

லாரிக்காரன்களெல்லாம் 'ஓவர்டேக்' எடுத்து முந்திக்கொண்டு போனார்கள். விடிகாலை நேரத்தில் வெளியூர்களுக்குப் பால் கொண்டு செல்லும் சைக்கிள்காரர்களும், கலைவாணரின் காரை முந்தினார்கள். துரைராஜ் பேசுவதை நிறுத்திவிட்டார். அப்போதாவது வேகமாக ஓட்டுவார் என்று நினைத்து. ஊஹூம்'... இவர் பேச்சை நிறுத்தியதும் கலைவாணர் வேறு கற்பனையில் இன்னும் மெதுவாக ஓட்டினார், துரைராஜ் பொறுமை இழந்தார். அப்போது ஒரு மாட்டு வண்டி பின்னால் வந்தது.

'அண்ணே அண்ணே! லாரிக்காரன் முந்தினான். சைக்கில்காரன் முந்தினான்; பரவாயில்லே. இப்ப கட்டை வண்டிக்காரன் சைடு கேட்பான் போலிருக்கே அண்ணே' என்றார். 'கட்டைவண்டிக்காரன்னா கேவலமா? அவனும் முந்தட்டுமே, யோவ் நீ போய்யா' என்று காரை நிறுத்தினார். தினகர்ராஜ் எழுந்து பக்கத்தில் போய்விட்டு, டீக்கடையில் தண்ணீர் வாங்கி முகம் கழுவி. டீ குடித்துவிட்டு வந்து டிரைவர் சீட்டில் ஏறினார். கலைவாணரும், துரைராஜும் பின்பக்கம் உட்கார்ந்தனர். 'இனிகட்டை வண்டியையும், சைக்கிளையும் நாம் முந்தலாம்' என்றார். தொழிலாளியை மதிக்கும் இது போன்ற முதலாளிகள் வெகு அபூர்வம்.

படிப்பகம்

padippakam



# 72

## டாக்டர் ஏன் கைவிட்டார்?

கலைவாணரை எல்லாருக்கும் பிடிக்கும் போது, நான் மட்டும் என்ன மட்டமா என நினைத்தோ என்னவோ காமாலை நோய் அவரை கைப்பற்றி கொண்டது. அந்த சிகிச்சைக்காக 1957-ஆம் ஆண்டு அரசு பொது மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டிருந்தார்.

ஒரு சமயம் டாக்டர்களெல்லாம் கைவிட்டு விட்டதாகச் செய்தி வெளியானது. மிகவும் நெருங்கிய நண்பர்கள் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தனர். 'ஏன் இத்தனை பதற்றமா ஓடி வர்றீங்க?' என்று அப்போதும் சிரித்துக்கொண்டே கேட்டார் கலைவாணர்.

"அண்ணே, டாக்டர்கள்லாம் கைவிட்டுவிட்ட தாகச் சொல்லிக்கிட்டாங்களே. அதைக் கேட்ட தும் மனம் தாங்கலே. ஓடியாந்தம். பாவிப்பசங்க சும்மா பொய் சொல்லிவிட்டிட்டாங்க' என்றார் ஒருவர்.

'அவங்க ஒன்றும் பொய் சொல்லலே. உண்மைதான். காலையிலே ஒரு டாக்டர் வந்தார். கையப்பிடிச்சுப் பார்த்தார். இப்பப் பரவாயில் லேனு சொல்லி கையெவிட்டிட்டுப் போயிட் டார். ஒன்பது மணிக்கு ஒரு டாக்டர் வந்தார். ரொம்ப நல்லாருக்கேனு சொல்லிட்டுக்

படிப்பகம்

padippakam



கைவிட்டுட்டுப் போயிட்டார். மத்தியானம் வந்தவரும் கையெப்பிடிச்சுப் பார்த்திட்டுக் கை விட்டிட்டுப் போயிட்டார்.

என் கையவே பிடிச்சுக்கிட்டிருந்தா மத்தவங்க கையப்பிடிச்சுப் பார்க்க வேண்டாம்? அதான் கைவிட்டிட்டாங்க' என்று கூறிச் சிரித்தாராம். இதுதான் கலைவாணரின் குழந்தை மனது. மறுநாளே 'கோமா' என்னும் உணர்வற்ற நிலையை அடைந்தார். மூன்று நாட்கள் நீடித்தது. 1957 ஆகஸ்ட் 30-ஆம் தேதி காலை 11.10 மணிக்கு கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சொர்க்கலோ கத்தின் ஆஸ்தான நகைச்சுவை அரசாகிவிட்டார்.

சாகும்போதும் மற்றவர்கள் மனம் நோகாமல் சிரிக்க வைத்த மனிதநேயச் செம்மல் அவர்.

படிப்பகம்

padippakam



# 73

## மனசில 'படுதா'

ஒரு சமயம் சென்னை ஒற்றைவாடை அரங்கத்தில் கலைவாணர் என்.எஸ்.கே.குழுவினரின் 'வள்ளுவம்' என்ற நாடகம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது ஒரு சம்பவம் நடந்தது.

அப்போது கலைவாணரும் மதுரம் அம்மாளும் இணைந்து நடித்த காட்சி நடந்தது. அந்தக் காட்சி சிறிது நேரத்தில் முடிந்தவுடன் திரையை இழுத்து மூடவேண்டும். ஆனால் அந்தப் பணியாள் திரையைக் கீழே இழுத்துவிட மறந்துவிட்டார்.

கலைவாணரும் சீன் முடிந்துவிட்டது திரையைப் போடு என்று எப்படி பகிரங்கமாகச் சொல்வது என்று யோசித்தார். உடனே அருகிலிருந்த மதுரத்தை நோக்கி.

'நான் இவ்வளவு நேரம் சொன்னது உன் மனசிலே படுதா...? படுதா?' என்று அழுத்தமாகச் சொன்னதும், 'படுதா' என்ற சொல்லின் அழுத்தத்தைப் புரிந்துகொண்ட சீன் தொழிலாளி சட்டென்று முன் பக்க படுதாவை இழுத்து முடி காட்சியை முடித்தார்.

கலைவாணரின் இந்தச் சமாளிப்பைப் பார்த்து ரசித்து ரசிகர்கள் கரவொலி எழுப்பினார்கள்.

படிப்பகம்

padippakam



# 74

## எம்.ஜி.ஆரை வரச்சொல்லு...

கலைவாணர் அவருடைய கடைசி காலகட்டத்தில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருந்தார். அப்போது அவரைக் காண அங்கு சென்றவர்களில் குறிப்பிட்ட பலரிடமும், ‘ராமச்சந்திரனைப் பார்க்கணும். அவனை வரச்சொல்லுங்கள்’ என்று சொல்லிக் கொண்டிருந்தார். மதுரம் அம்மையாரும் போன் வழியாக எனக்கு தகவல் கொடுத்தார்.

‘யாரும் அவரைப் பார்த்து தொந்தரவு செய்யக்கூடாது’ என்று டாக்டர் அட்வைஸ் செய்திருப்பதாக அறிந்ததால், நான் நேரில் போய் சந்திக்கத் தாமதித்தேன்.

ஆனால் உடனடியாக நேரில் போய் கலைவாணரைப் பார்க்கவில்லையே தவிர, அவருடைய நலத்திற்கான ஆர்வமும் எல்லாவிதத் தொடர்பும் கொண்டிருந்தேன்.

பிறகு, இரண்டொரு நாட்களிலேயே நேரில் பார்க்கச் சென்றேன். என்னைப் பார்த்ததும், ‘ராமச்சந்திரா! நான் எதுக்காகச் சாப்பிட்டனுப்பினேன் தெரியுமா?

பல பேர் வராங்க. வந்து பார்த்துட்டுப் போறாங்க. பத்திரிகைக்காரங்க அவர் வந்து பார்த்தார். இவர் போய் பார்த்தார்’ என்று செய்தி

படிப்பகம்

padippakam



வெளியிடுறாங்க. நீ மட்டும் வந்து பார்த்ததாகச் செய்தி வர்றதில்லை.

அதனால் நீ வந்து பார்க்கலைங்கிற செய்திதான் வெளியே தெரியும். எனக்காக நீ செய்து வருகிற காரியங்கள் எல்லாம் யாருக்கும் தெரியாது. நீ வரலைன்னு மக்கள் தவறா நினைப்பாங்க. அந்தக் கெட்ட பேர் உனக்கு வேண்டாம்னு தான் உன்னை வரச்சொன்னேன்' என்றார் கலைவாணர்.

'கலைவாணர் ஒரு புரியாத புதிர்' என்ற கட்டுரையில் எம்.ஜி.ஆர். எழுதியது. அதாவது எம்.ஜி.ஆருக்குத் தப்பான பெயர் வந்துவிடக் கூடாது என்று அந்த நிலையிலும் நினைத்த நல்ல மனம் அது.

படிப்பகம்

padippakam





# கைகொடுத்த கலைவாணர்

**75**

**ந**ரசிம்மபாரதி நடித்த படம் 'குடும்ப விளக்கு'. படத்தின் நாயகன் நரசிம்மபாரதி அவ்வளவு பிரபலமாகவில்லை. எனவே படத்தின் விற்பனைக்கு கலைவாணரை நடிக்க வைக்க விரும்பினார்கள். அப்போது லட்சுமிகாந்தன் கொலை வழக்குத் தொடர்பாக நகைச்சுவை அரசர் சிறையில் இருந்ததால் அந்த நகைச்சுவைக் காட்சிகளில் நடிக்க வைக்க கே.ஏ.தங்கவேலுவையும், டி.எஸ்.துரைராஜையும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அவர்கள் நடித்த நகைச்சுவைக் காட்சிகள் போதிய திருப்தி அளிக்கவில்லை. அதுமட்டுமின்றி கலைவாணர் நடித்திருந்தால்

படிப்பகம்

padippakam



அவரது காமெடிக்காகவே ஏரியாக்கள் நல்ல விலைக்கு வீற்றிருக்குமே என்று நினைத்திருந்தார்கள். அந்த எண்ணம் அவர்களிடம் தோன்றியிருந்தது. சில நாட்களில் கலைவாணர் குற்றமற்றவர் என்று நீதிமன்றம் அவரை விடுதலைச் செய்துவிட்டது.

சிறை மீண்ட கலைவாணருக்கு மாலை அணிவித்து, சமயம் பார்த்து தனது எண்ணத்தை வெளியிட்டார் தயாரிப்பாளர் நாகூர் நாசர். கலைவாணரும் 'குடும்ப விளக்கு' படத்தைத் திரையிடச் செய்து பார்த்தார். அதில் எப்படி காமெடிக் காட்சிகளைப் புகுத்தலாம் என்று சிந்தித்து, அவரோடு கூட இருந்த கவிஞர் சுப்பு ஆறுமுகத்திடம் பொருத்தமாக ஒரு பாடல் உடனே எழுதித் தருமாறு கூறினார்.

'கனி தராத மரமுமானேன்' என்ற பல்லவியோடு பாடல் தொடங்கியது. அப்போது எதிர்பாராத விதமாக அங்கு வந்த நாதஸ்வரச் சக்கரவர்த்தி டி.எஸ்.ராஜரத்தினம் பிள்ளையிடம் உடனே அதற்கு இசையமைக்க ஏற்பாடு செய்தார். படத்தில் கலைவாணரின் நகைச்சுவையும், அந்தப் பாடலும் பெரிய அளவில் ரசிகர்களின் வரவேற்புப் பெற்றது.

அந்தப் படத்திற்கு இசையமைப்பாளராக டி.ஆர்.பாப்பா இருந்தும், ராஜரத்தினம் பிள்ளை மற்றொரு இசையமைப்பாளராக அதில் பணியாற்றினார். ஒரு படத்திற்கு இரண்டு இசையமைப்பாளர் பணியாற்றிய புதுமையை அந்தக் காலத்திலேயே கலைவாணர் செய்துவிட்டார்.

இப்படி அந்தப் படத்திற்கு கைகொடுத்து கலைவாணர் தூக்கிவிட்டார். படமும் வெற்றி பெற்றது.

படிப்பகம்

padippakam



# 76

## எஸ்.எஸ்.வாசனுடன் மோதல்...?

ஜெமினி ஸ்டுடியோவில் 'சந்திரலேகா' படமாகிக்கொண்டிருந்த நேரம், அப்போது அந்தப் படத்தில் கலைவாணர் பாட வேண்டிய பாடல் ரிக்கார்டிங் செய்யப்பட்டது.

'ஜயனிபோ பக்ரிபாமா' என்று என்.எஸ்.கே. பாடினார். ஆனால் படத்தின் டைரக்டரும், தயாரிப்பாளருமான எஸ்.எஸ்.வாசனுக்கு அவ்வளவாகத் திருப்தியில்லை.

'நான் எதிர்பார்க்கும் திருப்தியில்லை. கிருஷ்ணன் இன்னும் ஒரு முறை பாடுங்கள்' என்றார் வாசன்.

மீண்டும் பாடினார் கிருஷ்ணன். அதுவும் வாசனுக்குத் திருப்தியளிக்கவில்லை. 'இன்னொரு முறை பாடுங்கள்' என்றார் ஜெமினி அதிபர்.

'பாடமாட்டேன்' -என்று சொல்லி ரிக்கார்டிங் தியேட்டரிலிருந்து வெளியே வந்த கலைவாணர், வாசனைப் பார்த்துச் சொன்னார்:

'பாடுவது உங்களுக்காக அல்ல! ரசிகர்களுக்காக, அவர்களுக்கு இந்தப் பாட்டும், நான் பாடிய முறையும் நிச்சயமாகப் பிடிக்கும் என்பது என் நம்பிக்கை!' என்று சொல்லிவிட்டு காரில் ஏறிச்சென்றுவிட்டார்.

ஜெமினிவாசனுக்கு முன்னால் அன்று இப்படிப் பேசிவிட முடியாது. அந்த அளவுக்குப் பெரிய மனிதராக அவர் இருந்த நிலை, எம்.கே.ராதா, ரஞ்சன் போன்ற நட்சத்திர

படிப்பகம்

padippakam



நடிகர்களே பேசத் தயங்கிக்கொண்டிருந்தார்கள். கலைவாணர் இப்படிச் சொல்லிவிட்டுப் போனதைக் கேட்டவர்கள் என்னாகுமோ என்று கலங்கிப் போனார்கள். எஸ்.எஸ்.வாசனுடன் மோதலா… என்றனர்.

ஆனால் வாசன் அதைக் கேட்டு கோபிக்கவில்லை. சிந்தித்தார்; சிரித்துவிட்டு, சிறிது நேரத்திலேயே கிருஷ்ணனுக்கு டெலி போன் செய்து, 'உங்கள் அபிப்பிராயம் கரெக்ட். நீங்கள் பாடியது ரசிகர்களுக்காகத்தான். கிளம்பி வாருங்கள்' என்றார்.

கலைவாணர் சொன்னது போலவே 'சந்திரலேகா'வில் அந்தப் பாடல் ஹிட்டானது. கலைவாணரின் நியாயமான கோபம் வென்றது.

படிப்பகம்

padippakam



# 77

## பணம் பார்க்காதே...

சென்னை இராயப்பேட்டை தாண்டவராயன் தெருவை ஒட்டிச்செல்லும் சண்முக முதலி தெருவிலிருந்த வீட்டை, கடைசி காலத்தில் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நடிகர் சிவாஜிக்கு அதை விற்கலாம் என்று பேச்சு வந்தது. வாயளவில் ஒரு தொகையும் பேசப்பட்டது. பணம் கைமாறவில்லை. பத்திரம் எதுவும் முடியவில்லை. அதற்குள் அந்த வீட்டை ஒரு பெரிய பணக்கார வட இந்தியர் தொகை அதிகமாகக் கொடுப்பதாகக் கேட்டார். கலைவாணருக்கும் பணத்தேவை அதிகம்தான். சில நண்பர்கள் மார்வாடிக்கு விற்கும்படியும் தூண்டினர். ஆனால் கலைவாணர் மறுத்துவிட்டார்.

'இந்த வீடு நீண்ட நாட்களாக நான் இருக்கும் வீடு. இதை விற்ற பிறகு எப்போதாவது இந்தப் பக்கம் வரும்போது நம்முடைய பழைய வீடு இது. ஒரு மார்வாடிக்குப் போய்விட்டதே' என்று நினைக்க நேர்ந்தால் மனம் வருத்தப்படும்.

அதே சமயம் சிவாஜி இந்த வீட்டில் இருந்தால் 'நம்முடைய வீட்டில் இப்போது தம்பி சிவாஜி இருக்கிறார் என்றால் அது மனத்திற்கு வருத்தமாகத் தோன்றாது. மகிழ்ச்சியை ஏற்படுத்தும் அல்லவா! உள்ளே போகவும் மனம் கூசாது' என்று அதிகப் பணத்திற்கு சேட்டுக்கு விற்க மறுத்துவிட்டார். கடைசி காலத்திலும், கஷ்டத்திலும், பணத்தைவிட மனித நேயசத்தை மதித்த மாமனிதர் என்.எஸ்.கே.

padippakam



# இராம.நாராயணனுக்கு முன்னோடி!

## 78

'**அ**லிபாபா' என்ற படத்தில் கழுதையை நடிக்க வைத்த கலைவாணர் 'மனோன்மணி'யில் ஒரு எருமையை நடிக்க வைத்தார். எந்த விலங்கும் கலைவாணரிடம் முரண்டு படித்ததில்லை. அவரது சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்தன.

'மனோன்மணி' படத்தின் நகைச்சுவை காட்சிக்கு ஒரு எருமைக்கன்று தேவைப்பட்டது. கன்றுக்குப் பதில் ஒரு கொழுத்த எருமையையே வாங்கி வந்து நிறுத்திவிட்டனர்.

அந்த எருமைக்கோ வெளிச்சத்தைக் கண்டால் பிடிக்காது. ஆட்களின் பேச்சு சத்தம் கேட்டால் பிடிக்காது. அதிலும் ரேடியோ பாட்டுச் சத்தம் சுத்தமாகப் பிடிக்காது. ரேடியோவில் பாட்டுப் போட்டால் 'மொ...' என்று தன் பாட்டைப் பாட ஆரம்பித்துவிடும். இதை என்ன செய்து... எப்படி நடிக்க வைப்பது என்று எல்லாரும் தடுமாறினார்கள்.

கில்லாடியான கலைவாணர் என்.எஸ்.கே. ஒரு ஐடியா செய்தார். ஒரு தார் வாழைப்பழத்தை வரவழைத்து வைத்துக் கொண்டார். அதனிடம் ஒரு பழம் கொடுப்பது, அதைத் தட்டிக்கொடுத்து கழுத்து பகுதியைச் சொரிந்து விடுவதுமாக வசப்படுத்திவிட்டார்.

அதனிடம் பழகுவதற்குள் அரைதார் வாழைப்பழங்கள் காலி. மீதம் இருந்த அரைதார் பழங்களைக் கொண்டே அந்த எருமையைத் தன் வழிக்குக் கொண்டு வந்து, எருமையை அருமை யாக நடிக்க வைத்துவிட்டார். நல்லவர்களிடம் எல்லாரும் நியாயமாக நடந்து கொள்வார்கள் என்பார்கள். கலைவாணர் என்ற நல்லவரிடம் அந்த எருமை முரண்டு பண்ணவில்லை.

படிப்பகம்

padippakam



# 79

## பிரதமர் நேருவைச் சந்திக்கச் செல்லவில்லை

**கா**ங்கிரஸ் கட்சியின் கோஷ்டி பூசலுக்கும், காலை வாரி விடுதலுக்கும் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும் தப்பவில்லை.

சுதந்திர இந்தியாவின் முதல் பொதுத்தேர்தல் நடக்கும்போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் சென்னையில் கலைவாணரை வேட்பாளராக நிறுத்தி வைக்கலாம் என்று ஒரு கோஷ்டி மேலிடத்திற்கு சிபாரிசு செய்தது. இதைக் கருத்தில் கொண்டு, சோவியத் யூனியனின் அழைப்பை ஏற்று அந்நாட்டிற்குச் சென்றிருந்த என்.எஸ்.கே., டி.ஏ.மதுரம், டைரக்டர் கே.சுப்ரமணியம் ஆகியோரை உடனடியாக தாயகம் வரச்சொல்லி தகவல் தரப்பட்டது. பயணத்தைப் பாதியிலேயே முடித்துக்கொண்டு திரும்பிய மூவரையும் டெல்லியில் தங்க வைத்தனர்.

தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக கலைவாணர் போட்டியிட வேண்டும் என்பது திருமதி துர்காபாயின் வேட்கை. இதற்கான ஆதரவைப் பெற, பிரதமர் நேருவுடன் கலைவாணர் சந்தித்துப் பேச ஏற்பாடானது. இரவு 11 மணிக்கு நேரம் முடிவு செய்யப்பட்டது.

அன்று மாலையில் தமிழகத்திலிருந்து பல நண்பர்களின் கடிதங்கள் கலைவாணருக்கு

படிப்பகம்

padippakam



வந்திருந்தன. அதில் திருச்சி நண்பர் ஒருவரின் கடிதம். கலைவாணரை மூன்று மணி நேரம் பேசவிடாமல் செய்துவிட்டது. அதாவது'

'கலைவாணர் சோவியத் யூனியனிலிருந்த போதே, பொதுத்தேர்தலில் சென்னையில் ஒரு தொகுதியில் கலைவாணர் போட்டியிடப் போகிறார் என்னும் செய்தி பரவியிருந்தது. அதற்கு அட்வான்ஸ் வாழ்த்துக்கள். நிற்க, இரண்டு நாள் முன்பு திருச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரசின் முக்கிய தலைவர்களில் ஒருவர் பேசும்போது: 'கோமாளிகளும், கூத்தாடிகளும் சட்டசபைக்குள் புகுந்துவிட்டால் சட்டசபையைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று குறிப்பிட்டார். கடிதத்தின் இந்த வாசகங்கள் கலைவாணரை டென்ஷனாக்கியது.

அன்று இரவு கலைவாணர் பிரதமர் நேருவைச் சந்திக்கச் செல்லவில்லை. மறுநாள் காலை விமானத்தில் சென்னை வந்துவிட்டார்.

கலைவாணர் தமது கடைசி காலம் வரையும் விட்டுக்கொடுக்காத சுயமரியாதைக்காரராகவும், சீர்திருத்தச் செம்மலாகவும், மனிதநேயம் மிக்கவராகவும் விளங்கினார்.

படிப்பகம்

padippakam



# அன்பு என்பது...

## 80

'சண்டை போட்டுக்கொண்ட பிறகும்கூட 'அன்புள்ள நண்பர் கிருஷ்ணனுக்கு' என்று கடிதத்தைத் தொடங்குவார்கள். கடிதத்திற்குள்ளே அத்தனை பகையையும் விரோதத்தையும் கொட்டி 'உன்னை ஒரு கை பார்க்காமல் விடப்போவதில்லை' என்று முடிப்பார்கள்.

இந்த அன்புங்கிற வார்த்தைக்கு அர்த்தம் உண்டா என்ன? யாரோ கடிதம் எழுதுகிறபோது இப்படித்தான் ஆரம்பிக்கணும் என்று சொல்லிக் கொடுத்ததை மறக்காமல் கடைப்பிடிக்கிறாங்க.

தம்பதிகள் தங்களுக்குள்ளே இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் அன்பு, தீபாவளி வந்துவிட்டால் பெரும்பாலும் ஜவுளிக்கடையில் வைத்தே உடைபட்டுப் போகிறது.

நண்பர்கள் தங்களுக்குள் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் அன்பு, ஓட்டல் சர்வர், அவர்கள் முன்வைக்கும் பில்லை அவர்கள் பிடுங்கிக்கொள்ளும் போதே வெட்கப்பட்டு ஓடிவிடுகிறது.

சிந்திக்கச் சிந்திக்க அன்புக்கும் பணத்துக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாகத்தான் எனக்குப்படுகிறது.

அப்பா, அம்மா உயிரோடு இருந்தால் சோறு போடாமல் அடித்துவிரட்டுகிறான். மனைவி, மக்களோடு இருந்து சம்பாதித்துப் போடத் தவிக்கும் மகன்.

இறந்துபோன அப்பா, அம்மா படத்துக்கு வெள்ளியும், செவ்வாயும் ஊதுவத்தி கொளுத்தி வைத்துப் பூசிக்கிறான். இந்த அன்பிலேயும் கூடப் பணம்தானே காரணமாக இருக்கிறது.' பெற்றோரின் அருமை தெரியாத பிள்ளைகளுக்கு கலைவாணர் விடும் டோஸ் இது.

படிப்பகம்

padippakam





# கலைவாணர்

81

**1947** ஜூலை 27-ஆம் தேதி சென்னை திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகத்தில் என்.எஸ்.கே. அவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் தலைமை வகித்தார். அப்போதுதான் 'கலைவாணர்' என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

1949-ல் 'நல்லதம்பி' படம் வந்தது. அது கலைவாணரின் சொநத்ப் பட்டம். அதில் தன் கருத்துகளை எதிரொலித்தார்.

நாட்டுக்குச் சேவை செய்ய நாகரிகக் கோமாளி வந்தானய்யா!

ஆட்டமாடி பாட்டுப்பாடி அழகான ஜதையோடு வந்தானய்யா!' என்று பாடினார் கலைவாணர். கலைவாணர் தன்னை நாடி உதவி கேட்டு வந்த எல்லாருக்கும் தாராளமாக வாரி வழங்கினார். வந்தவருக்கெல்லாம் 'இல்லை' என்று வழங்கிய அந்த வள்ளல் தமது கடைசி காலத்தில் வறுமை அவரது வாழ்வில் நுழைந்தது. குடிப்பழக்கமும் எப்படியோ கடைசி காலத்தில் அவரைப் பிடித்துக்கொண்டது.

படிப்பகம்

padippakam



# 82

## அவர் சொன்னதுபோல நடந்தது

அன்பு மனைவி மதுரத்திடம் கலைவாணர் அடிக்கடி சொல்வாராம்,

'மதுரம்! எவருமே ஐம்பது வயதுக்கு மேல் உயிரோடு இருக்கக் கூடாது! இருந்தால் சிரிப்புச் சேவையில் கிழடு தட்டிவிடும்! நான் ஐம்பது வயதுக்குள்- இப்போது இருக்கும் மதிப்போடு இறந்துபோவேன்!' என்பாராம்.

1957 ஆகஸ்ட் 16-ஆம் தேதி மஞ்சள் காமாலை நோய் சிகிச்சைக்காக சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், சொன்னது போல ஐம்பது வயதுக்குள் இயற்கையானார்.

ஆகஸ்ட் 30-ஆம் தேதி முற்பகல் 11.10-க்கு எல்லாரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்த அந்தச் சிரிப்பு மகான் தன் இதயத்துடிப்பை நிறுத்திக்கொண்டார். அப்போது அவருக்கு வயது நாற்பத்தொன்பதுதான்.

கலைவாணர் சொன்னது சொன்னபடி நடந்துகொண்ட நாணயஸ்தர். ஆம், அவரது சொல் பொய்யாமல் போனது.

படிப்பகம்

padippakam



# 83

## தேடிவந்த தலைவர் பதவி

**நா**கர்கோவில் டென்னிஸ் கிளப் மிகப் பழமையான ஒன்று. அன்றைய தென் திருவிதாங்கூர் பணக்காரர்கள் தேடி வந்து கூடும் இடம் அது. அதிலும் கலைவாணர் அவர்களின் வீட்டுக்கு அருகில் இருந்தது.

கலைவாணர் ரஷ்யா சென்று வந்ததைப் பாராட்ட வேண்டுமென்று நாகர்கோவில் டென்னிஸ் கிளப் உறுப்பினர்கள் முடிவு செய்தனர். கலைவாணரும் தனது பிறந்த ஊர்ப் பிரமுகர்களே பாராட்ட விரும்பியதால் அதைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார். என்.எஸ்.கிருஷ்ணனும் போய் சேர்ந்தார். விழாவில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

தெற்கில் உதித்த நகைச்சுவை சூரியனை எல்லாரும் பாராட்டினார்கள். சிலர், கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் இந்தக் கிளப்பின் நிரந்தரத் தலைவராக இருக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

மிகப் பெரிய பணக்காரர்களை மட்டுமே உறுப்பினராக்கும் ஒரு கிளப், கலைவாணரும் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவராகிவிட்ட தால் வரவேற்றது. விழா நிறைவாக, தன்னைப் பாராட்டியவர்களையும் அழைத்தவர்களையும்

படிப்பகம்

padippakam



பாராட்டி நன்றி கூற என்.எஸ்.கே. மேடைக்கு வந்தார்.

'இங்கே பேசிய பல பணக்காரர்களும் என்னை நிரந்தர உறுப்பினராக இருக்க வேண்டும் என்றார்கள். நான் இதே கிளப்பில் பந்து பொறுக்கிப் போட்டு மாதம் மூன்று ரூபாய் சம்பளம் பெற்றிருக்கின்றேன்.

இன்று என்னை நிரந்தரத் தலைவராக இருக்க வேண்டும் என்று விரும்புவதால் தகுதியை அடைந்திருப்பதாகக் கருதுகிறேன். இது எனக்கு எப்படி வந்தது?

பரம்பரை பரம்பரையாகப் பணக்காரனாக இருப்பவர் மட்டுமே முன்னுக்கு வரமுடியும் என்பது தவறு. விடாமுயற்சியும், உழைப்பும் இருந்தால் எல்லோருமே இந்த நிலையை அடையலாம்.

அன்று நான் சிறுவனாக, பந்து பொறுக்கிப் போட்ட காலத்தில் இருந்த உறுப்பினர்கள் பலரும் இன்று இல்லை. எனக்கு மாதம் மூன்று ரூபாய் சம்பளம் தந்த மானேஜர் மட்டுமே இருக்கிறார். எனவே நீங்களும் உத்வேகத்தோடு உழைக்கப் புறப்படுங்கள்' என்று பேசினார்.

கலைவாணர் நாகரிகமாக அவர்கள் சொன்னதை ஏற்கவில்லை என்றாலும் தான் மறக்காததையும் நினைவுபடுத்தி, உழைத்தால் யார் வேண்டுமென்றாலும் உயரலாம் என வலியுறுத்தினார் -என்கிறார் கவிஞர் நீலம் மதுமயன்.

படிப்பகம்

padippakam



# 84

## வருமான வரி சோதனை...

இன்றைக்கு கோடிகளில் சம்பளம் பெறும் பல நட்சத்திர நடிகர்கள் வருமானவரி விஷயத்தில் மாட்டிக் கொள்வது செய்தித்தாள்களில் பார்த்திருப்பீர்கள். ஆனால் கலைவாணரைச் சோதிக்க வந்த ஒரு வருமான அதிகாரி பாராட்டிவிட்டு போனார்.

கலைவாணரின் அசோகா பிலிம்ஸ் அலுவலகம் கோவையில் இருந்தது. ஒரு நாள் அசோகா பிலிம்ஸ் கணக்குகளை எடுத்துக்கொண்டு வருமானவரி அலுவலகம் சென்றார் கலைவாணரின் உதவியாளர் எம்.திருவேங்கடம்.

அந்தக் கணக்குகளைப் பார்த்த வருமானவரி அதிகாரி ஹனுமந்தராவ்,

'என்னய்யா இது, தர்மம் தர்மம் என்றுதான் கணக்கில் பெரும்பகுதி எழுதி இருக்கு. இதெல்லாம் உண்மையா? உண்மையாக இருந்தாலும் வரிவிலக்கு எப்படி கொடுக்க முடியும்' சற்று உஷ்ணமாகக் கேட்டார்.

'சார்! நான் பொய்க் கணக்கு சொல்லவில்லை. வேணும்ன்னா நீங்க ஒரு சாதாரண ஆள் போல சென்ட்ரல் ஸ்டுடியோவுக்குப் போங்க. என் மகளுக்குக் கல்யாணம், வரதட்சணை காரணமாக

படிப்பகம்

padippakam



நிற்கிறது' என்று என்.எஸ்.கிருஷ்ணனிடம் சொல்லிப் பாருங்க. அவர் என்ன சொல்றார். என்ன செய்றார்'னு பார்த்துவிட்டு பிறகு வந்து இந்தக் கணக்குகளைச் சரிபாருங்கள்.' -என்றார் திருவேங்கடம்.

அவரை அங்கே இருக்கச் சொல்லிவிட்டு, அதிகாரி ஹனுமந்தராவ் உடனேயே, ஒரு ஜட்கா வண்டியில் சென்ட்ரல் ஸ்டுடியோ சென்று இறக்கினார். அவர் தேடிப்போன என்.எஸ்.கே. இருந்தார். காப்பி அருந்தச் சொன்னார். வெற்றிலை பெட்டியை முன்னால் வைத்தார்.

'யார் நீங்க? உங்களுக்கு என்ன வேண்டும்...' என்று கிருஷ்ணன் கேட்டார்.

'ஒரு பெண்ணைப் பெத்தவன் நான். ஆயிரம் ரூபாய் இல்லாததால் கல்யாணம் தடைப்படும் போலிருக்கிறது' -என்றார் அதிகாரி.

'ஆயிரம் ரூபாய்க்காக நல்ல காரியம் நிற்க வேண்டாம். தயவு செய்து கொஞ்ச நேரம் இருங்கள். என்னுடைய ஆள் இன்கம் டாக்ஸ் ஆபீசுக்குப் போயிருக்கிறார். வந்தவுடன் நீங்கள் கேட்ட தொகையுடன் உங்களை எனது காரிலேயே அனுப்பி வைக்கிறேன்' என்றார் கலைவாணர்.

அசந்துபோனார் அதிகாரி, 'உனக்கு கர்ணன் என்று பெயர் வைத்திருக்கணும். தவறாக உன் அப்பா கிருஷ்ணன்னு பேர் வச்சுட்டார். கிருஷ்ணா! நான் இன்கம்டாக்ஸ் ஆபீசர்தான்! உன்னுடைய ஆள் உன் தர்ம குணத்தக் கூறினார். நம்பாமல் சோதிக்க வந்தேன். இனி நான் இருக்கும் வரை உனது தர்மச் செலவுத் தொகைக்கு வரிவிலக்குத் தருகிறேன். ஆனால், நீ கொடுக்கும் தொகைக்கு வவுச்சர் மட்டும் வாங்கி வைத்துக்கொள்' -என்று பாராட்டிவிட்டு சென்றார் வருமானவரி அதிகாரி ஹனுமந்தராவ்.

படிப்பகம்

padippakam





# கலைவாணர் எந்தக் கட்சி?

**85**

தமிழக மக்கள் பெரும்பாலானவர்களின் இதயத்தில் இடம் பிடித்திருந்த கலைவாணரைத் தங்கள் தங்கள் கட்சிக்குள் கொண்டு வர உள்வேலைகள் நடந்தது உண்டு. அதாவது இன்றைக்கு ரஜினியைத் தேர்தல் சமயத்தில் தங்களுக்கு ஆதரவு நிலையை ஏற்படுத்த முயற்சிப்பது போல.

கலைவாணர் எந்தக் கட்சி... அரசியல் நிலைப்பாடு என்ன... என்பது புதிராக இருந்தது. காரணம் அன்றைக்கு தி.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தி.மு.க. என எல்லாக் கட்சியின் முக்கிய தலைவர்களும் கலைவாணரின் நண்பர்களாக இருந்தனர்.

ஒரு சமயம் ஒரு மாத இதழ் கலைவாணருக்குப் பிடித்தமான கட்சி எது என்று கேட்டபோது, ‘நான் விரும்புவது, ஆதரிப்பது திராவிடக் கட்சிதான்’ என்றார். ஆனால் அதேசமயம் தான் எல்லாக் கட்சிகளின் கூட்டங்களில் கலந்துகொள்வது ஏன்? என்பதற்கும் விளக்கம் அளித்தார்.

படிப்பகம்

padippakam



'என்னுடைய நடுநிலையைத் தாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு கட்சிக்கே நான் ஆளாகிவிட்டால், மற்ற கட்சிக்காரர்கள் நான் சொல்வது என்ன என்றே கவனிக்க மாட்டார்கள்.

யாரையும் நான் இழக்க விரும்பவில்லை! எனவேதான், எல்லாக் கட்சிகளின் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கலந்துகொண்டு, எனக்கு இட்ட பணியை மட்டும் நிறைவேற்றி வருகிறேன். இத்தகைய பொது நிலையை எல்லாத் தலைவர்களும் வரவேற்கிறார்கள்!

மற்றொரு விஷயம். எனக்கென்று தனிக் கொள்கை உண்டு. எந்தக் கட்சிக் கொள்கையும் எனக்குப் பூரணமாகப் பிடிப்பதில்லை!'

அரசியலில் கலைவாணரின் நடுநிலையைப் பற்றி முதல்வர் கலைஞர் 'நெஞ்சுக்கு நீதி'யில் எழுதியது.

'அரசியலில் அவர் முழுக்க முழுக்க எந்தக் கட்சிக்கும் உரியவராக ஆக்கிக்கொள்ளா விட்டாலும், பெரியாரிடத்திலும், அண்ணா விடத்திலும் என்னைப் போன்ற சிலரிடத்திலும் தனி அன்பு செலுத்தி வந்தார். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜீவானந்தம் கலைவாணருக்குச் சகோதரர் போல இருந்தார்.'

அரசியல் கட்சி மட்டுமல்ல. இந்து, முஸ்லீம், கிறிஸ்துவர் என அனைத்து மக்களிடமும் அவர்களுக்குப் பிடித்த நல்லவராக இருந்தார்.

படிப்பகம்

padippakam



# 86

## நல்லவன் வாழ்வான்

**சி**னிமாத் துறையில் முன்னணியில் இருக்கும் கலைஞர்கள் சிபாரிசு செய்வது என்பது வழக்கமான ஒன்று. இன்றைக்கு முன்னணியில் உள்ள நடிகர்கள், தங்கள் படத்தில் தங்களுக்கு விருப்பமான, தங்களுக்குச் சரிப்பட்டு வருகிறவர்களுக்கு வாய்ப்பளிக்கச் சொல்வதுண்டு.

கலையுலக முதல் வள்ளல் கலைவாணர் அவர்களும் இப்படி நிறைய சிபாரிசு செய்து கை தூக்கிவிட்டதுண்டு. ஆனால் கலைவாணர் உண்மையான திறமைசாலிகளை, நலிந்த கலைஞர்களை உயர்த்தினார். சிபாரிசு செய்தார்.

படங்களில் நாட்டியக் காட்சிகளில் மட்டும் தோன்றி ஆடிவிட்டுப் போன (அதாவது ஒரு பாட்டுக்கு ஆடிய) நாட்டியப் பேரொளி பத்மினியை 'மணமகள்' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகம் செய்து அவரது அந்தஸ்தை உயர்த்தியவர் கலைவாணர்தான். அதே படத்தின் மூலம் இரட்டையர்களான 'கிருஷ்ணன்- பஞ்சு'வை இயக்குநர் அந்தஸ்துக்கு உயர்த்திவிட்டவரும் கலைவாணர்தான்.

தன்னுடன் நடித்துக் கொண்டிருந்த திறமையான நடிகர் நடிப்பிசை புலவர் கே.ஆர்.ராமசாமியை சினிமாவில்

படிப்பகம்

padippakam



உயர்த்திவிட்டவர் கலைவாணர்தான்.

தன்னுடன் நாடகங்களில் நடித்த நாடகக் கலைஞர்களுக்காகவே ஒரு நாடகக் கம்பெனியைத் தொடங்கினார். அந்தக் கம்பெனி நாடக வசூல் எந்த ஊரிலாவது சரியில்லை என்றால் கலைவாணர் வந்து மேடையில் தோன்றி வசூலைப் பெருக்க உதவி வந்தார். அந்த நாடகக்கம்பெனியில் வளர்ந்தவர்களில் முக்கியமானவர்கள் சிவாஜிகணேசன், கே.ஆர்.ராமசாமி, காக்கா ராதாகிருஷ்ணன் உட்பட சிலர்.

'சந்திரலேகா', 'அபூர்வசகோதரர்கள்' படங்களின் கதாநாயகர் எம்.கே.ராதா ஒரு நாள் வேதனையோடு கலைவாணரைப் பார்க்க வந்தார். அவருக்கு ஆறுதல் சொன்னதோடு, 'கவலையை விடுங்க. இனி உங்களுக்கு நல்ல காலம்ண்ணே' என்று சொல்லி அனுப்பியதோடு நில்லாமல் அன்றிரவு கலைவாணரையும் மதுரத்தையும் தங்கள் படத்தில் நகைச்சுவை வேடமேற்று நடிக்க ஒப்பந்தம் செய்ய வந்த ஜெய்சக்தி பிலிம்சாரிடம்,

'கதாநாயகன் யார்?' -எனக் கேட்டார் கலைவாணர்.

'முதலில் உங்களை ஒப்பந்தம் செய்துவிட்டு, அப்புறம் ஹீரோவைத் தேடலாம் என்று நாங்கள் நினைத்தோம்' என்ற அவர்களிடம் 'எம்.கே.ராதாவைப் போடுங்க. நல்லா நடிப்பார்' என்றார் கலைவாணர்.

'நீங்க சொன்னா சரிதான்' என்றனர் ஜெய்சக்தி பிலிம்ஸார்.

இதுதான் கலைவாணரின் நல்ல உள்ளம். நல்லவன் வாழ்வான். அதனால்தான் கலைவாணரின் நூற்றாண்டிலும் போற்றப்படுகிறார்.

படிப்பகம்

padippakam



# 87

## கலைவாணருக்கு அழைப்பில்லையா?

நன்றி கெட்ட உலகம்டா சாமீ... என்ற குரல் எல்லாக் காலத்திலும் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

'1956 நவம்பர் முதல் நாள். கேரளத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆட்சியிலிருந்த அகஸ்தீஸ்வரம், தோவானள், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை உள்ளிட்ட இரண்டாயிரம் சதுர மைல் பரப்பளவு தமிழ் மண் தாய்த் தமிழகத்தோடு இணைந்த நாள்.

அந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. விழாவுக்கான அழைப்பிதழ்கள் பலருக்கு அனுப்பப்பட்டன. திருவிதாங்கூர் தமிழர் இயக்கத்தை எதிர்த்த பலர் விழாவின் முன்வரிசையில் முகமலர்ச்சியோடு உட்கார்ந்திருந்தனர்.

உண்மையாகவே அந்த இயக்கத்திற்காகப் பாடுபட்டவர்களில் பலருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை. அப்படி ஒதுக்கப்பட்டவர்களில் ஒருவர் கலைவாணர் என்.எஸ்.கே.வும் ஒருவர்.

அழைப்பிதழை எதிர்பார்த்துக் காத்திராமல், சென்னையிலிருந்து புறப்பட்டு விழாவுக்கு முந்தைய நாள் மாலையிலேயே நாகர்கோவில்

படிப்பகம்

padippakam



போய் சேர்ந்தார் கலைவாணர். இந்தச் செய்தி அரசு அதிகாரிகளின் காதுகளுக்கும் போய்ச் சேர்ந்தது. இருந்தாலும் அப்போதைய முதலமைச்சர் ஏதாவது சொல்லிவிடுவாரோ என்று பயந்த அவர்கள் கலைவாணரை அழைக்காமல் ஒதுங்கிக் கொண்டார்கள்.

1945-ஆம் ஆண்டு தொடங்கிய திருவிதாங்கூர் தமிழர் இயக்கத்திற்கு ஏராளமாகப் பணஉதவிகளை அள்ளிக்கொடுத்து இயக்கம் வலுவடைய காரணமாக இருந்தவர் கலைவாணர். அவர் மாத்திரம் இல்லாதிருந்தால் இயக்கம், தொடங்கிய ஓரிரு ஆண்டுகளிலேயே மாண்டு போயிருக்கும்.

அத்தகைய கலைவாணருக்கு அழைப் பில்லையா? நாகர்கோவில் திலகர் வாலிபர் சங்கத்தின் உறுப்பினர்கள் கொதித்தெழுந்தார் கள். அதே நவம்பர் முதல் தேதி மாலையிலேயே பெரிய வீதியில் இணைப்பு விழாவைத் தங்கள் சொந்த முயற்சியில் வாலிபர் சங்கம் நடத்தியது.

அந்தத் திடீர் பொதுக் கூட்டத்தில் கலைவாணரின் உரையைக் கேட்க கூட்டம் கூட்டமாக குவிந்தனர் நாகர்கோவில் மக்கள். கவலை தோய்ந்த குரலில் ஐந்து நிமிடங்கள்தான் கலைவாணர் விழாவில் பேசினார் என்கிறார் கலைமாமணி அறந்தை நாராயணன் அவர்கள்.

படிப்பகம்

padippakam



# 88

## புரட்சி விகடவேந்தன்

நகைச்சுவை நடிப்பு சேவையால் கலைத்துறையிலும் சமுதாயத்திலும் ஒரு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்திவந்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனுக்கு அவரது தன்னலமில்லா பணியைப் பாராட்டி பலரும் பட்டம் சூட்டி மகிழ்ந்தனர்.

29-5-1949-ல் திருச்சி நகரில் தேவர் மன்றத்தில் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் முதல் ஆண்டு மாநாடு புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டில் இயக்குநர் பி.கே.ராஜாசாண்டோ அவர்களின் உருவப்படத்தை கலைவாணர் திறந்து வைத்து உரையாற்றினார். கலைவாணர் என்.எஸ்.கே., மதுரம் திருமணத்தை தமது இல்லத்தில் முன் நின்று நடத்தி வைத்தவர் ராஜாசாண்டோதான்.

அறிஞர்அண்ணா, கி.ஆ.பெ. விசுவநாதம், குத்தூசி குருசாமி ஆகியோர் பங்கேற்ற அந்த விழாவில் மன்றத்தார் விருப்பத்திற்கு இணங்க என்.எஸ்.கிருஷ்ணனுக்கு 'புரட்சி விகட வேந்தன்' என்னும் பட்டத்தை புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வழங்கினார்.

படிப்பகம்

padippakam



# மக்கள் தலைவர்

## 89

'இழந்த காதல்' கதையைத் தொடக்கத்தில் நடத்தி வந்தவர்கள் திருச்சி அமெச்சூர் சபையார். மறுபடியும் 20-7-1943-அன்று அந்தக் கதை முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவாதம் தலைமையில் அரங்கேற்றினார்கள்.

அந்தக் கதையில், கல்யாணக்காட்சி ஒன்று உண்டு. அதில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் 'கிந்தனார்' என்னும் தலைப்பில் 'நவீன கதாகாலட்சேபம்' செய்தார்.

அந்த நவீன கதாகாலட்சேபத்தைக் கேட்டு ரசித்த கி.ஆ.பெ.விசுவநாதம் நிகழ்ச்சியின் முடிவில்.

'நகைச்சுவை அரசு' என்னும் பட்டத்தை என்.எஸ்.கிருஷ்ணனுக்கு வழங்கினார்.

அதேபோன்று 'நகைச்சுவை அரசு' என்று பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

1951-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று கலைவாணரும், மதுரமும், கே.சுப்பிரமணியமும் சோவியத் யூனியன் பயணமானார்கள். அதற்கு முதல் நாள் அவருக்கு நடந்த பாராட்டுக் கூட்டத்தில்,

'சென்னைப் பல்கலைக்கழகம் கலைவாணருக்கு டாக்டர் பட்டம் வழங்க வேண்டும்' என்று அவ்வை டி.கே.சண்முகம் குறிப்பிட்டார்.

அடுத்து பேசிய பேராசிரியர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி பேசியபோது, 'என்.எஸ்.கே.வுக்கு உள்ள 'கலைவாணர்' பட்டம். சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் பட்டத்தைவிட உயர்வானது. அவர் கலைவாணர் மட்டுமல்ல; அதற்கும் மேலே உயர்ந்த 'மக்கள் தலைவர்' என்றாராம் கல்கி.

படிப்பகம்

padippakam





# மகாராஜா கலைவாணருடன் படம் எடுத்தார்

## 90

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் ரசிகர்களாக பணக்காரர், ஏழை, படித்தவர், பாமரர் என அனைத்துத் தரப்பினரும் இருந்தனர். ஏன் சமஸ்தான ராஜா ஒருவர் கூட கலைவாணரின் ரசிகராக இருந்தார்.

திருவிதாங்கூர் சமஸ்தான மன்னரான சித்திரைத்திருநாள் மகாராஜா கலாரசிகர். அதிலும் கலைவாணரின் மகாரசிகர். என்.எஸ்.கிருஷ்ணன் நடித்த படங்களை விரும்பிப் பார்ப்பார்.

'சகுந்தலை' படத்தை மகாராஜா பலமுறை பார்த்து ரசித்திருக்கிறார். அந்தப் படத்தில் என்.எஸ்.கே. பாடிய பாடல்கள் எல்லாம் மகாராஜாவுக்கு நல்ல மனப்பாடம்.

நாகர்கோவில் அப்போது திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆளுமைக்கு உட்பட்டிருந்தது. எனவே தனது சமஸ்தானத்தின் குடிமகனான

படிப்பகம்

padippakam



என்.எஸ்.கிருஷ்ணன், கலையுலகில் புகழோடு வளர்ந்து கொண்டிருக்கிறார் என்பதில் மகாராஜாவுக்கு மிகவும் சந்தோஷம்.

அதேசமயம் என்.எஸ்.கிருஷ்ணனை நேரில் சந்தித்து வாழ்த்துக்கூற வேண்டும் என்று மகாராஜாவுக்கு ஆசை இருந்தது. அந்த ஆசையை டைரக்டர் கே.சுப்பிரமணியமிடம் தெரிவிக்க, அவர் அந்த ஆசையை நிறைவேற்றி வைத்தார்.

அப்போது சென்னை நியு டோன் ஸ்டுடியோவில் 'வேதவதி அல்லது சீதா ஜனனம்' படப்பிடிப்பில் இருந்தார் கலைவாணர். சென்னைக்கு வந்திருந்த மகாராஜா சித்திரைத் திருநாளை ஸ்டுடியோவுக்கு அழைத்துச் சென்ற டைரக்டர் என்.எஸ்.கே.வை மகாராஜாவுக்கு அறிமுகம் செய்தார்.

அந்தப் படம் மதுரபவன் மாளிகையில் இருந்தது. அதேசமயம், மகாராஜா ஒருவர் தனது நாட்டின் பிரஜையோடு சரிசமமாக உட்கார்ந்து போட்டோ பிடித்துக்கொள்வதா... என்று மந்திரிகள் குறை கூறினார்கள்.

அந்தப் படத்தைப் பத்திரிகைகளில் வெளியிடக்கூடாது. அரண்மனையின் அனுமதியின்றி, அப்படத்தை பிரதி எடுக்கக் கூடாது. அதன் நெகட்டிவ்வை அரண்மனைக்குத் தந்துவிட வேண்டும் என்று மகாராஜாவின் செயலாளர் கடிதம் எழுதினாராம். அந்தப் படம் நாகர்கோவில் 'மதுரபவன்' மாளிகையில் உள்ளது.

படிப்பகம்

padippakam



# 91

## வெள்ளையர்கள் பாராட்டுதல்

அந்தக் காலத்தில் முன்னணி தயாரிப்பாளர் ஸ்ரீராமுலுநாயுடு. கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் 'ரம்பையின் காதல்' படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தனர். அதில் கலைவாணரும், மதுரமும் நடிக்க அழைக்கப்பட்டு வந்து சேர்ந்தனர்.

சென்ட்ரல் ஸ்டுடியோவில் படப்பிடிப்பு. கிருஷ்ணனும் மதுரமும் தேவி ஹோட்டலில் தங்கி இருந்தார்கள்.

வழக்கம்போல தனக்குரிய வசனங்களையும், பாடல்களையும் என்.எஸ்.கிருஷ்ணன் எழுதத் தொடங்கினார். அன்றாடம் பகலில் படப் பிடிப்பை முடித்துவிட்டு, இரவில்தான் எழுதிக்கொண்டிருப்பார்.

எழுதிய வசனங்களை இரவில் சத்தமாகப் பேசிக்கொண்டிருப்பார். பாடலைச் சத்தமாகப் பாடி எழுதிக்கொண்டிருப்பார்.

கலைவாணர் தங்கியிருந்த ஹோட்டலின் அடுத்த அறையில் பிரிட்டிஷ்காரர்கள் சிலர் தங்கியிருந்தனர். கிருஷ்ணன் இரவில் பாடியதும், வசனம் பேசியதும் அந்தச் சத்தம் அவர்களுக்குத் தொல்லையாகத் தெரிந்தது. ஒருநாள் கிருஷ்ணனைப் பார்க்க வந்த ஸ்ரீராமுலு

padippakam



நாயுடுவிடும் என்.எஸ்.கே. மீது வெள்ளைக்காரர்கள் புகார் செய்தார்கள்.

அவர் என்.எஸ்.கே.வை வெள்ளையர்களின் அறைக்கு அழைத்துச் சென்று, 'நீங்கள் நினைப்பது இவர் சாதாரணமானவர் அல்ல! கிரேட் காமெடி ஆக்டர்' என்று அறிமுகப்படுத்தினார் ஸ்ரீராமுலு நாயுடு.

'அப்படியா? எங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. தயவு செய்து நடித்துக் காட்டச் சொல்லுங்கள். ப்ளீஸ்' என்றனர் வெள்ளைக்காரர்கள்.

'ரம்பையின் காதல்' படத்திற்காக எழுதிக்கொண்டிருந்த ஒரு காட்சியை உடனே நடித்துக் காட்டினார் கிருஷ்ணன்.

பார்த்து, மகிழ்ந்து கைதட்டிய அந்த வெள்ளைக்காரர்கள் தங்களிடம் இருந்த பொருட்களைப் பரிசுகளாக வழங்கினர். அதோடு நில்லாமல் அன்று மாலையே அதே ஹோட்டலில் கிருஷ்ணன், மதுரம் தம்பதிக்கு விருந்து கொடுத்து கௌரவித்தனர்.

'எங்கள் சார்லி சாப்ளின் போல நீங்களும் புகழ்பெற வேண்டும்' என்று வாழ்த்தினர். 1940-களில் அவர்கள் சொன்ன வாழ்த்து பிறகு நிஜமானது.

படிப்பகம்

padippakam



# 92

## கல்கி போற்றிய கலைஞன்

எதிலும் புதுமை செய்யும் கலைவாணர் தமது 'மணமகள்' பட வெளியீட்டிலும் ஒரு புதுமை செய்தார். பெரும்பாலான தயாரிப்பாளர்கள் தங்கள் படங்களை தீபாவளி, பொங்கல் போன்ற நாட்களில் ரிலீஸ் செய்து வந்தனர். கலைவாணர் தனது 'மணமகள்' படத்தை ஆகஸ்டு 15, சுதந்திர தினத்தில் வெளியிட்டார்.

மணமகள் சிறப்புக் காட்சியை 14-8-1951-ல் பத்திரிகையாளர்களுக்கும், பணியாற்றிய தொழிலாளர் களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், நகரப் பிரமுகர்களுக்கும் தியாகராயநகர் ராஜகுமாரி தியேட்டரில் போட்டுக் காண்பித்தார்.

முதல் நாள் சிறப்புக் காட்சியில் படம் பார்த்துவிட்டு சென்ற 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி மறுநாள் காலை பெரியதொரு ரோஜாப்பூ மாலையுடன் வந்தார். கலைவாணர் கழுத்தில் தனது கரத்தாலே அணிவித்துவிட்டு, கல்கி சொன்னார்:

'சுதந்திர தினம், காந்திஜெயந்தி போன்ற நாட்களில் பெரும் மதிப்பிற்குரிய பெரிய மனிதர் எவருடைய வீட்டுக்காவது சென்று மாலை அணிவிப்பது எனது வழக்கம்! இந்த ஆண்டு உங்களுக்குத்தான் மாலையிட வேண்டும் என்று

படிப்பகம்

padippakam



நேற்று 'மணமகள்' பார்த்தபோதே முடிவு செய்துவிட்டேன். பிரச்சினைகளைக் கூறி, தீர்வையும் சொல்லியிருக்கிறீர்கள். சொந்தத்தில் ஸ்டுடி யோவையும் தேவையான வசதிகளையும் பெற்றுள்ள பெரிய தயாரிப்பாளர்கள் எல்லாரையும்விட நீங்கள் 'மணமகள்' மூலம் மாபெரும் சாதனையைச் செய்துவிட்டீர்கள்!' -என்று பாராட்டினார்.

'ஒரு மனிதன் கோவிலுக்குப் போக வேண்டாம். மற்ற வெளிப்படையான மதாசாரங்களை அனுஷ்டிக்க வேண்டாம். புத்தர், ஏசு, மகாத்மா இவர்களைப் போற்றி, இவர்கள் காட்டிய வழியில் தன் வாழ்க்கையை ஒருவன் நடத்தினான் என்றால், அவனே உண்மையான ஆஸ்திகன்' -'நல்லதம்பி' படத்திற்கு கல்கி எழுதிய விமர்சனத்தின் சில வரிகள்.

படிப்பகம்

padippakam



# காமெடியன் கதாநாயகனாக முடியுமா?

93

நகைச்சுவை நடிகர்களான கவுண்டமணி, விவேக், வடிவேலு ஆகியோர் இன்றைக்கு கதாநாயகர்களாக நடித்திருக்கிறார்கள் என்றால், காமெடி நடிகர் கதாநாயகனாகவும் நடிக்க முடியும் என்பதை முதன் முதலில் நிரூபித்துக் காட்டியவர் நகைச்சுவை நடிகர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டியவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்தான்.

'பைத்தியக்காரன்' பட வெற்றிக்குப் பிறகு இயக்குநர்கள் கிருஷ்ணன்- பஞ்சு, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனையே கதாநாயகனாக நடிக்க வைத்து ஒரு படம் தயாரிக்க வேண்டும் என்று கூறினார்.

'அது விஷப் பரீட்சைக்குச் சமானம்' என்று மறுத்தார் கலைவாணர்.

பைத்தியக்காரனையே கதாநாயகனாக வைத்து ஒரு படம் எடுத்து நாம் வெற்றி கண்டிருக்கிறோம். அப்படி இருக்க ஒரு காமெடியனை கதாநாயகனாக்கி வெற்றி காண முடியாதா என்ன?- மேலை நாடுகளில் சார்லி சாப்ளின், பாப்ஹோப் போன்றவர்கள் கதாநாயகர்களாக நடித்து படங்கள் வெளிவந்து வெற்றியும் பெற்றிருக்கின்றன' என்றனர் கிருஷ்ணன்- பஞ்சு.

அப்படி உருவானதுதான் 'நல்லதம்பி' படம். கலைவாணர்தான் நல்லதம்பி, அவருடன் பானுமதி, டி.ஏ.மதுரம் நடித்தனர். அறிஞர் அண்ணா கதை, வசனம் எழுதினார். கலைவாணர் கதாநாயகனாக நடித்து 'மாபெரும் வெற்றி பெற்றது மட்டுமல்ல. ஒரு மறுமலர்ச்சிக்கான முன்னோடியாக அந்தப் படம் அமைந்தது.

படிப்பகம்

padippakam



# 94

## வெள்ளிக்கூஜா கொடுத்தார்

கலைஞர் கருணாநிதி (1957) குளித்தலை தொகுதியில் போட்டியிட்டார். அவரது வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்ய கலைவாணர் வந்திருந்தார்.

சேலம் உணவு விடுதி ஒன்றில் கலைவாணர்-மதுரம் அம்மாள் தங்கியிருந்தார்கள். அப்போது ஒரு ஏழை நாடக நடிகர் தன்னுடைய திருமணச் செலவுக்குப் பணம் கேட்க வந்திருந்தார்.

கலைவாணர் அந்த நடிகரைத் தான் தங்கியிருந்த அறைக்கு வெளியே நிற்கச் சொல்லி விட்டு, உள்ளே போய் கை அலும்புவதற்கு நீர் எடுத்துச் செல்வது போல, அறையிலிருந்த வெள்ளிக்கூஜாவை எடுத்துகொண்டு வந்து, அந்த நடிகரிடம் கொடுத்து,

'இதை வைத்துக்கொள்! இப்போது கொடுக்க முடிந்தது இவ்வளவுதான்' என்று கண்கலங்கக் கூறினார் அந்த தருமத்தின் தலைவர்.

மதுரத்திற்குத் தெரியாமல் கொடுப்பதாக கலைவாணர் நினைத்து இப்படிச் செய்தார். மதுரம் இதைத் தெரிந்தே வைத்திருந்தார். ஆனாலும் வெளியே தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை.

கணவரின் மனம் அறிந்த அந்த நல்ல பெண்மணி அதை நினைத்து கலங்கவுமில்லை. கவலைப்படவுமில்லை.

படிப்பகம்

padippakam



# 95

## சகலகலா வல்லவர் கலைவாணர்

அந்த நாளிலேயே என்.எஸ்.கிருஷ்ணனுக்கு அபாரமான திறமை இருந்தது.

ஆர்மோனியம் வாசிப்பார். மிருதங்கம் வாசிப்பார். ஓவியம் வரைவார். ஓவியர் கே. மாதவனிடம் அவருக்கு நெருங்கிய நட்புறம் இருந்தது. மாதவன் என்.எஸ்.கிருஷ்ணனின் ஓவியக்கலை உணர்ச்சியை வளர்ப்பதில் பெரும்பங்கு கொண்டார்.

ஒரு நாள், நாடகத்தில் மிருதங்கம் வாசிப்பவருக்கு உடல்நலம் கெட்டுவிட்டது. வேறு யாரும் கிடைக்கவில்லை. அந்த நெருக்கடியில், அன்று என்.எஸ்.கிருஷ்ணன் தான் மிருதங்கம் வாசித்து நாடகத்தைச் சிறப்பாக நடத்தினார்.

இதேபோன்று சில நாட்களுக்கு என்.எஸ். கிருஷ்ணன் ஆர்மோனியம் வாசிக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டதுண்டு. ஓவியர்

படிப்பகம்

padippakam



மாதவன் இல்லாத நேரங்களில் காட்சிகளும் வரைந்து கொடுத்திருக்கிறார். பொதுவாகக் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஒரு சகலகலா வல்லவராகவே விளங்கி வந்தார்.

இப்படி கலைவாணருக்கு நற்சான்றிதழ் வழங்கியவர் நாடகக் கதை மேதை அவ்வை தி.க. சண்முகம் அவர்கள்.

நிஜம்தான்! கலைவாணர் நடிகர், பாடகர், தயாரிப்பாளர், டைரக்டர் என்று சகலகலா வல்லவராக இருந்தார்.

படிப்பகம்

padippakam



# 96

## கடன் வாங்கி பிச்சையிடு

'**பா**த்திரம் அறிந்து பிச்சையிடு' என்பது பழைய மொழி.

கடன் வாங்கியாவது பிச்சையிடு' என்பது கலைவாணர் உருவாக்கிய புதுமொழி!

கலைவாணர் தன் சொந்த தேவைக்காகக் கடன் வாங்கியதைவிட தர்மம் செய்ய கடன் வாங்கியதே அதிகம். இருந்தபோதிலும் அள்ளிக் கொடுத்த அந்த வள்ளல் இல்லாதபோது தன்னை நாடி வந்துவிட்டவர்களை வெறுங்கையாக அனுப்பியதில்லை.

தன்னைத் தேடிவரும் நலிந்த நாடகக் கலைஞர்கள், ஏழைகளுக்கு எப்போதும் தான தருமங்கள் வழங்குவது நாள்தோறும் ஐம்பது பேருக்கு வீட்டில் அன்னதானம் வழங்குவது குறையவில்லை. பொதுக்கூட்டங்கள், நிதிநாடகங்கள், நிகழ்ச்சிக்கு போக்குவரத்துச் செலவு வாங்காமல் கும்பலோடு தன் செலவிலேயே போய் வருவார்.

1956-ஆம் ஆண்டில் ஒரு பகல் வேளையில் கலைவாணர் நண்பர் எஸ்.கே.சாமியுடன் பேசிக்கொண்டிருக்கிறார். வரிசையாக தொலைபேசிகள் வருகின்றன. அதாவது கொடுத்த கடனைக் கேட்டு இனி நிம்மதியாக

padippakam



உட்கார்ந்து பேச முடியாது என வெளியே போய் வருவோம் என்று காரில் புறப்படுகிறார்.

மகராசன் எப்போது வெளியே வருவார்? என்று காத்திருந்த ஏழை மக்கள் அவரைக் கண்டதும் கையெடுத்துக் கும்பிட்டனர். 'தர்மப்பிரபு' என்று குரல் கொடுத்தார்கள். டிரைவர் நிறுத்தாமல் காரை வேகமாக ஓடவிட்டார்.

'லேனாச்செட்டியார் வீட்டுக்குப் போ' என்றார் கலைவாணர்.

செட்டியார் வீடு வந்ததும் அவர் மட்டும் போய் நூறு ரூபாய் கடனாக வாங்கிக்கொண்டு வந்தார். 'வீட்டுக்குப் போப்பா' என்றார்.

கார் மறுபடியும் கலைவாணர் வீட்டுக்குள் நுழைந்தது.

தர்மப்பிரபு வருவார் என நம்பிக்கையுடன் காத்திருந்த ஏழை மக்களிடம் அந்த நூறு ரூபாயையும் வழங்கினார் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.

கர்ணன் இருக்கும்போதுதான் கொடுத்தான். இப்படி கடன் வாங்கி தர்மம் செய்த கலைவாணர் அந்தக் கர்ணனையும் மிஞ்சிவிட்டார்.

படிப்பகம்

padippakam



# 97

## திருடனுக்குச் சாப்பாடு

**'க**ண்ணகி' படத்தில் கலைவாணரும் மதுரம் அம்மாளும் நடித்து வந்தார்கள். அவர்கள் அப்போது கீழ்ப்பாக்கம் லாண்டன்ஸ் தெருவில் குடியிருந்தார்கள். அது இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த நேரம். யுத்த பீதியில் சென்னை நகர மக்கள் பலரும் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

குண்டு விழும் என்ற பயத்தில் நகரமே காலி யாகிக் கொண்டிருக்க கலைவாணரோ அந்தக் குண்டு எப்படி விழுகிறது என்று பார்க்க வேண்டும் என்ற குழந்தைத்தனமான ஆசையுடன் மொட்டை மாடியில் இரவில் படுத்து உறங்குவார்.

ஒரு நாள் இப்படித்தான் என்.எஸ்.கிருஷ்ணனும், மதுரமும் மொட்டை மாடியில் படுத்துத்தூங்கிக் கொண்டிருந்தார்கள். வீட்டின் உள்ளே 'கண்ணகி' படத் தயாரிப்பாளர்களில் ஒருவரான எஸ்.கே.மொகைதீன் மற்றும் புளிமூட்டை ராமசாமி, ஆழ்வார் குப்புசாமி போன்ற நடிகர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

நல்ல கும்மிருட்டு. குண்டு விழுவதைப் பார்ப்பதற்காக உறங்காமல் விழித்திருந்த கலைவாணர் பார்வையில் ஒரு காட்சி தென்பட்டது. யாரோ மொட்டைமாடிச் சுவர்

படிப்பகம்

padippakam



என்.எஸ்.கே.யிடம் பணம் கிடையாது. ஆனால் கோடீஸ்வரன் மாதிரி வாழ்ந்தார். நாடகத்தில் 25 ரூபாய் சம்பளம் வாங்கினார். அப்போதும் நாலு பேருக்கு உதவுவார். நான் அவருக்கு நெருங்கிய நண்பர். அதே நேரத்தில் பெரிய விரோதி! என்னை 'என்னடா' என்று 'டா' போட்டுக் கூப்பிட்டவர் அவர் ஒருவர்தான்.

ஒரு சமயம் நெல்லையில் ஒரு சம்பவம் நடந்தது! அப்போது நான் நடிகன், டிரைவர், மெக்கானிக் எல்லாம் இருந்தோம். நான் கார் ஓட்டினேன். அவர் உள்ளே இருந்தார். கார் நின்றது. நான் தள்ளச் சொன்னேன். கீழிறங்கித் தள்ளிக்கொண்டே சொன்னார்: 'என்னடா என்னையே காரைத் தள்ள வைத்துவிட்டாய்! நான் ஒரு கார் வாங்கி உன்னை தள்ள வைக்கிறேன் பார்' என்றார். அதிலிருந்து நான் அவர் கூட்டத்தில் சேருவது கிடையாது.

நடிகர்கள் கூத்தாடிகள் என்றிருந்த பெயரை மாற்றியதில் அவர் ஒருவர் நான் ஒருவன். அவர் இன்னும் உயிரோடு இருந்திருக்கலாம் என்று சொன்னார்கள். அவர் செத்தது ஏன்? அவர் நடிக்கிற படங்களில் நடிப்பது இல்லை என்று சில கதாநாயகர்கள் ஸ்டிரைக் பண்ண ஆரம்பித்தார்கள். அதற்குப் பின்தான் வேதனைப்பட்டு இருந்தார்' என்று நடிகவேள் ராதா வெளிப்படையாகப் பேசினார். நன்றி என்பதற்கும் சினிமாவுக்கும் ரொம்ப தூரம் என்பதையே ராதாவின் பேச்சு உணர்த்தியது.

படிப்பகம்

padippakam



# 99

## கலைவாணர் ஒரு மாமேதை

கலை உலகில் பெரியார் அவர்களால் பாராட்டப்பெற்றவர்கள் பலராவர். அவர்களுள் பேரறிஞர் அண்ணா, நடிகவேள் எம்.ஆர்.ராதா, கலைவாணர் என்.எஸ்.கிருட்டிணன், எம்.கே.தியாகராஜபாகவதர், சிவாஜிகணேசன், அவ்வை சண்முகம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெரியார், கலைஞர்களில் முதலிடம் நகைச்சுவையரசு கலைவாணர் என்.எஸ்.கிருட்டிணன் அவர்களுக்குத்தான் அளித்தார். கலைவாணர் செய்திருக்கிற பணிகளை வேறு யாரும் சரியாக மதிப்பிடவில்லை. யாராவது ஆராய்ச்சியாளர் கலைவாணருடைய நகைச்சுவையை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெறலாம். அவருடைய நகைச்சுவை மக்களைச் சிரிக்க வைக்கும். ஆழ்ந்து சிந்திக்கவும் வைக்கும் ஆற்றலுடையது.

இந்நாளில் சார்லி சாப்ளின் அவர்களுடைய நகைச்சுவை காட்சிகளைத் தொகுத்துத் தொலைக்காட்சியில் வெளியிட்டு வருகிறார்கள். அதுபோல, கலைவாணருடைய நகைச்சுவை எல்லாம் தொகுத்துக்காட்டினால் மக்களுடைய சிந்தனையைத் தூண்டி நாட்டுக்கு நல்லது

படிப்பகம்

padippakam



ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன்.

கலைவாணர் நடிப்புத் துறையில் ஒரு மாமேதை, சிந்தனையாளர். அவருடைய கிந்தனார், கீலகண்டர், சந்திரஹரி ஆகியவற்றைப் பலர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். அரிச்சந்திரன்தான் சந்திரஹரி, லோகிதாசன்தான் தாசலோகன், விசுவாமித்திரர் மித்திரவிசு ஆனார். இப்படிப் பலவற்றையும் மாற்றிச்சொல்லி மக்களைச் சிரிக்க வைத்தார். சிந்திக்கவும் வைத்தார் கலைவாணர்.

அரிச்சந்திரன் நாடகத்தில் வரும் எல்லாப் பாத்திரங்களும் இந்த சந்திரஹரி நாடகத்திலும் இடம்பெறும். ஆனால் புராண நடைமுறைக்கு மாறான கோணத்தில் அவர்களைப் படைத்துக்காட்டினார் அவர். அரிச்சந்திரன் நாடகத்தில் விசுவாமித்திரன் ஒரு பொய்யையாவது அவனிடமிருந்து வரவழைக்க வேண்டும் என்று போராடுவான் அன்றோ? இங்கு மித்திரவிசு சந்திரஹரியிடமிருந்து ஒரு உண்மையையாவது வரவழைக்க முயற்சி செய்கிறார். கடைசிவரைக்கும் சந்திரஹரி ஒரு உண்மையைக் கூட சொல்லவே இல்லை. லோகிதாசன், சந்திரமதி ஆகிய இருவரும் அந்த முனிவர் வீட்டிற்குச் சென்று திருடிக்கொண்டு வந்துவிடுவார்கள். அப்படி ஒரு கதை!'

கீலகண்டர் கதையும் அப்படித்தான். திருவோட்டுக் கதையை அப்படியே மாற்றி இருப்பார். கிந்தனாரைத் தான் எல்லாருக்கும் தெரியுமே. தாழ்த்தப்பட்ட சமூகத்தின் கல்வித் தேவையை மிக அருமையாக எடுத்தியம்பும் கதை. இப்படி நாடக- திரை உலகில் ஒரு மாபெரும் சிந்தனைப் புரட்சியைச் செய்தவர் கலைவாணர்.

கலைவாணருடைய பண்பை, பகுத்தறிவை, ஆற்றலைப் பெரியார் புகழ்ந்துரைத்தார். பெரியார் சொல்லியபடியே அவர் இறுதியில் அன்னக்காவடி கிருட்டிணனாகத்தான் ஆனார். அவர் நிறைய சம்பாதித்தார். ஆனால்

படிப்பகம்

padippakam



எல்லாருக்கும் கொடுத்து ஏழையானார். வறுமைபட்ட நிலையிலும் யாருக்கும் இல்லை என்று சொன்னதே கிடையாது. நான் கூட ஒரு பள்ளிக்கூட நிதிக்காக நன்கொடை வாங்கி இருக்கிறேன்.

கலைத்துறையிலும், நாடகத்துறையிலும் அவர் செய்திருக்கிற புரட்சிபோல வேறு யாரும் செய்ய முடியவில்லை. அந்த அளவிற்குத் திரைப்படத்துறையில் கலைவாணர் மாபெரும் மாற்றத்தைச் செய்திருக்கிறார். -என்கிறார் பேராசிரியர் மா.நன்னன் அவர்கள்.

படிப்பகம்

padippakam





# புதிய நடிகர் பரம்பரையை உருவாக்கியவர்

100

**க**லைவாணர் தனி ஒரு மனிதர் அல்ல; அவர் ஒரு சகாப்தம்! அவரோடு அந்த 'சகாப்தம்' முடிந்துவிட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனி தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க முடியும். மக்களின் கைதட்டலையும், மாலைகளையும் பெற முடியும். நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால் நம்முடைய கலைவாணரைப் போல மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது; புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர். உலகிலேயே இவர்

படிப்பகம்

padippakam



ஒருவர் தான் மக்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச்சிலரே.

முன்பெல்லாம் நகைச்சுவை பாத்திரம் என்றால் ஒட்டப்பட்ட மீசை திடீரென்று கீழே விழும்; அது நகைச்சுவை பாத்திரம். நடக்கின்ற பொழுது இடறிக் கீழே விழுவார்கள். அது நகைச்சவை.

கோமாளித்தனமும் கூத்தாடுதலுமே நகைச்சுவை என்று கருதப்பட்ட காலத்தில், நல்ல கருத்துகளைச் சிரிக்கச் செய்த வண்ணமே மக்களிடையே புகுத்திய முதல் பெருமை கலைவாணருக்கே உண்டு.

எனக்குத் தெரிந்தவரையில் முதன் முதலில் சோவியத் ரஷ்யா நாட்டுக்குப் போய் வந்த முதல் கலைஞர் என்.எஸ்.கே.தான்.

கலையின் தலை மகன் அவர். கலையுலகு அதனை ஏற்றுக்கொள்கிறது. அவர் போல் நாடகமேடையிலும் சரி, திரைவானிலும் சரி, புகுந்த நாள் தொட்டு அரசோச்சினோர் இல்லை. அனைவரும் அறிவர். அவருடைய கலைத்திறம் ஒரு புதிய நடிகர் பரம்பரையையே உருவாக்கி வைத்துள்ளது.

பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கருத்துகளைப் படவுலகிலும் சிறப்பாகப் பரப்பியவர் அவர். அவரது 'கிந்தனார் காலட்சேபம்' எல்லோருக்கும் பிடித்தமானது.

கலைவாணர் ஒரு சகாப்தம்! அவருடைய இழப்பு, ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.' -சென்னையில் நடைபெற்ற கலைவாணர் இரங்கல் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையிலிருந்து.

படிப்பகம்

padippakam



படிப்பகம்



எழுத்தாளராகும் கனவுகளோடு ஐந்து ரூபாயுடன் 1982-ல் சென்னைக்கு வந்தவன் நான். அதன்பின் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்போல பல வேலைகள் பார்த்துவிட்டு பத்திரிகையாளன் ஆனேன்.
கடந்த 1989-ல் தொடங்கியது எனது எழுத்துப்பணி. 'மின்மினி'யில் ஓராண்டு. 'வண்ணத்திரை'யில் நான்காண்டு. 'குமுதம்' (ஒப்பந்த அடிப்படையில்) நான்காண்டு, 'குங்குமம்', 'முத்தாரம்', 'பேசும்படம்', 'குங்குமச்சிமிழ்', 'சினிக்கூத்து', 'கல்கி', 'திரைச் சிற்பி', 'ரஜினி' என பல முன்னணி பத்திரிகைகளில் சுதந்திரமான பத்திரிகையாளனாக எழுத்து பயணம் தொடர்ந்தது. கடந்த பிப்ரவரி 2006 முதல் 'டி-சினிமா'வின் பொறுப்பாசிரியர் பணி.
இத்தனை வருட சினிமா பத்திரிகை அனுபவத்தில் நான் பார்த்த பேசிய, பழகிய கேள்விப்பட்ட விஷயங்கள் புத்தகமாக இறக்கி வைக்க ஒரு வாய்ப்புக்காக காத்திருந்தேன்.
அந்த வாய்ப்பு இன்று நிறைவேறியது!

-சபீதாஜோசப்

3, 90